
1038



# இலங்கையின் புராதன நகரங்களும் சரித்திரச் சான்றுகளும்

120866

106

# GLIMPSES OF SRI LANKA

BY

S. T. G. SAMBANTHAN, B. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

1038

# முகவுரை

நாம் வசிக்கும் இலங்கைத் தீவானது உருவத்திற் சிறிதாயினும் பெருமையும் புகழும் உடையது. பல தேய மக்களும் ஆதியிலிருந்து பல்வேறு காலங்களில் தரிசித்துப் புகழ்ந்து பாராட்டப் பெற்றதும் இற்றைவரை சரித்திரப் பிரசித்தியுடன் விளங்கும் நாடாகவும் விளங்குகின்றது. இத் தீவை இந்து சமுத்திரத்தில் இலங்கும் நித்திலம் என்பர்.

இவ்வாறு பழம் பெருமை வாய்ந்த நம் தாய் நாட்டின் புராதன நகரங்களையும் இற்றை வரை சான்ருக எஞ்சியுள்ள சரித்திரச் சின்னங்களையும் பள்ளிச் சிருரும் தெள்ளிதின் அறியும் பொருட்டும், கல்விச் சுற்றுப் பிரயாணங்களில் நேரிற் சென்று காண்போருக்கு உதவும் முறையிலும், இயன்றளவு படங்களுடன் சுருதி, யுக்தி, அநுபவத்திற்கு இயையச் சுருக்கி எழுதப்பட்டிருக்கிறது.

மேலும் இந்நூல் ஆராய்ச்சி உளம் உடையவர்களை அத் துறையில் ஊக்குவிக்கும் முதனூலாகவும் அமைந்துள்ளது.

இவ்வாருெரு நூலைப் பள்ளிப் பிள்ளைகட் கன்றி ஏனையாருக்கும் உரிய முறையில் ஆக்கித்தருமாறு எம்மை ஊக்குவித்த திரு. எஸ். ஆர். கனகசபை அவர்களுக்கு எமது நன்றி.

இந்நூலைக் கண்ணுறும் பெரியோர் இதில் திருத்தமுற வேண்டிய பகுதிகள் இருப்பின் தெரிவிப்பார்களாக.

இந் நன்முயற்சி இனிது நிறைவேற எல்லாம் வல்ல இறை அருளை வேண்டுகிறேன்.

S. T. G. சம்பந்தன்.

பழைய ரோட்,
கோப்பாய்.
1 - 7 - 59.

பொது சன நூலகம்
SEP 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
120866
120866 R.C.
R

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PREFACE

Lanka though a small island has a long and glorious past. As such there are many ancient ruins, monuments etc., which have to be studied and interpreted.

For a simple and deep study of homeland this book would be very useful and serve as a guide for students of history or lovers of history. From the true pictures the students can be led to the true objects or to direct observation of true objects. Thus this book would inspire the yearning minds to dive deep and see for themselves the objects of the past.

This book is not exhaustive or complete in comprising all the pictures of ancient ruins or all the information of important places. The second edition would improve in style and matter. This book would be of immense value as a **Guide** to the teachers who take their students on educational Tours in Ceylon.

Many thanks are due to the Archeological department and others for the kind permission given to me to take snaps and reproduce them.

Suggestions for improvement will be welcomingly appreciated, please.

908.5493

S. G. Sampanthan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்பு

# விஷய அட்டவணை


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| அக்கரைப்பற்று | .... | .... | 132 |
| அநுராதபுரம் | .... | .... | 1 |
| வெள்ளரசுக் கோவில் | .... | .... | 7 |
| ஆயிரங்கால் மண்டபம் | .... | .... | 9 |
| புதைபொருள் நூதனசாலை | .... | .... | 10 |
| தக்கிண விஹாரை | .... | .... | 11 |
| ஈசுரமுனி விஹாரை | .... | .... | 12 |
| வெஸ்ஸ கிரிய | .... | .... | 14 |
| திசைவீவாக் குளம் | .... | .... | 14 |
| அரச நந்தவனம் | .... | .... | 15 |
| மிறிஸ்வேதி தாகபம் | .... | .... | 16 |
| பசவன் குளம் | .... | .... | 16 |
| றாவன்வலிசாய | .... | .... | 17 |
| தூபாராம தாகபம் | .... | .... | 19 |
| வச்சிராயுத வீடு | .... | .... | 21 |
| காவற் சிலை | .... | .... | 21 |
| B. மடாலயம் | .... | .... | 21 |
| அபயகிரி தாகபம் | .... | .... | 22 |
| இரட்டைக் குளம் | .... | .... | 24 |
| இராச மாளிகை | .... | .... | 25 |
| ரத்னப் பிரசாதய | .... | .... | 26 |
| உணவுத் தொட்டி | ... | ... | 26 |
| லங்காராம தாகபம் | .... | .... | 27 |
| மேலை மடங்கள் | .... | .... | 28 |
| ஜேதவன தாகபம் | .... | .... | 29 |
| நுவரவீவாக் குளம் | .... | .... | 29 |
| அம்பாறை | .... | .... | 133 |
| அம்பாந்தோட்டை | .... | .... | 121 |
| அப்புத்தளை | .... | .... | 127 |
| அவுக்கன | .... | .... | 39 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்


அலுவிஹாரை .... .... 85
அறுகம்பே .... .... 132
ஆனையிறவு .... .... 141
இங்கினியாகலை .... .... 133
ஹக்கலை .... .... 95
ஹபறன .... .... 40
கட்டுகாஸ்தோட்டை .... .... 86
கடற்கோட்டை .... .... 147
கடலாதெனிய விஹாரை .... .... 94
கடுகண்ணாவை .... .... 93
கண்டி .... .... 86
  தலதா மாளிகாவை .... .... 87
  பொல்கொல்ல .... .... 90
  பேராதனைப் பூந்தோட்டம் .... .... 90
  இலங்கைச் சர்வகலாசாலை .... .... 91
கம்பளை .... .... 93
கதிர்காமம் .... .... 122
கல்ஓயா .... .... 134
  சேனநாயக சமுத்திரம் .... .... 135
கல்முனை .... .... 135
கன்னியா .... .... 141
களனி மஹாவிஹாரை .... .... 110
களுத்துறை .... .... 115
காலி .... .... 116
கிருகம .... .... 92
ஜிந்தோட்டை .... .... 115
சிரஞ்சீவிமலை .... ... 119
கினிகத்தேனை .... .... 103
ஹிக்கடுவை .... .... 115
ஹிங்குருகொடை .... .... 41
கொஸ்லந்தை .... .... 127
கொழும்பு .... .... 103
  பாராளுமன்றம் .... .... 103
  ஏரிக்கரைப் பத்திரிகை நிலையம் .... .... 104


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | பக்கம் |
|---|---|---|---|
| பொருட்காட்சிச்சாலை | .... | .... | 105 |
| இலங்கை வானொலி நிலையம் | .... | .... | 105 |
| மிருகக் காட்சிச்சாலை | .... | .... | 106 |
| ரத்மலானை புகைரத வேலைத்தலம் | | .... | 107 |
| குருடர் செவிடர் பாடசாலை | .... | .... | 108 |
| சவர்க்காரத் தொழிற்சாலை | .... | .... | 111 |
| சிவனொளிபாதம் | .... | .... | 98 |
| சீகிரிய | .... | .... | 72 |
| நாகபாம்புக் குகை | .... | .... | 73 |
| காசியப்பன் சபாமண்டபம் | .... | .... | 74 |
| சுவரோவியங்கள் | .... | .... | 75 |
| சிங்கவாயில் | .... | .... | 78 |
| குன்றின் உச்சி | .... | .... | 79 |
| சீதாஎலிய | .... | .... | 96 |
| தங்காலை | .... | .... | 120 |
| தம்புல்ல | .... | .... | 80 |
| தலவாக்கொல்லை | .... | .... | 97 |
| திருகோணமலை | .... | .... | 137 |
| திசைமஹாறம | .... | .... | 121 |
| தியலும | .... | .... | 126 |
| துன்ஹிந்த | .... | ... | 128 |
| தீகவாப்பிய | .... | .... | 136 |
| தீவாந்தரமுனை | .... | .... | 118 |
| நயினாதீவு | .... | .... | 145 |
| நல்லூர் சங்கிலி அரண்மனை | .... | .... | 143 |
| நாஉல | .... | .... | 82 |
| நாலந்த | .... | .... | 84 |
| நோட்டன் பாலம் | .... | .... | 101 |
| நுவரஎலிய | .... | .... | 95 |
| பசறை | .... | .... | 130 |
| பண்டாரவளை | .... | .... | 128 |
| புத்தளை | .... | .... | 130 |
| புதுறுவகல | .... | .... | 125 |
| பொத்துவில் | ... | .... | 132 |


தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| பொலந்நறுவை | .... .... | 42 |
| திவங்கதப் பள்ளி | .... .... | 44 |
| தாமரைக்குளம் | .... .... | 47 |
| கல்விஹாரை | .... .... | 49 |
| கிரிவிஹாரை | .... .... | 54 |
| லங்காதிலக விஹாரை | .... .... | 54 |
| பத்மசிதா பாசாத | .... .... | 55 |
| றன்கொத் விஹாரை | .... .... | 56 |
| பபலு விஹாரை | .... .... | 56 |
| சிவதேவாலயம். 2-ம் நம்பர் | .... .... | 57 |
| சத்மஹால் பிராசாத | .... .... | 58 |
| கல் புத்தகம் | .... .... | 59 |
| ஹெற்றதாகே | .... .... | 60 |
| அட்டதாகே | .... .... | 60 |
| வட்டதாகே | .... .... | 61 |
| நிசங்கலதா மண்டபம் | .... .... | 63 |
| தூபாராம தாகபம் | .... .... | 63 |
| சிவதேவாலயம். 1-ம் நம்பர் | .... .... | 64 |
| மஹா பராக்கிரமபாகுவின் மாளிகை | .... | 65 |
| இராஜவேதியா புஜங்க மண்டபம் | .... | 66 |
| குமார பொக்குண | .... .... | 67 |
| பராக்கிரம சமுத்திரம் | .... .... | 68 |
| நிசங்கமல்லன் மண்டபம் | .... .... | 69 |
| பொத்குல் விஹாரை | .... .... | 70 |
| மஹா பராக்கிரமபாகுவின் சிலை | .... .... | 71 |
| மட்டக்களப்பு | .... .... | 136 |
| மஹியங்கனை | .... .... | 129 |
| மதிரிகிரிய | .... .... | 41 |
| மாத்தளை | .... .... | 85 |
| மாத்தறை | .... .... | 117 |
| மாவிட்டபுரம் | .... .... | 144 |
| மிஹிந்தலை | .... .... | 30 |
| வைத்தியசாலை | .... .... | 31 |
| தருமசாலை | .... .... | 32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| படிக்கட்டுகள் | .... | .... | 32 |
| கண்டக சைத்திய | .... | .... | 33 |
| 4-ம் மிஹிந்தன் சிலாசாசனம் | .... | .... | 33 |
| அம்பஸ்தல தாகபம் | .... | .... | 34 |
| மிஹிந்தன் குன்று | .... | .... | 34 |
| கருநீர்த் தடாகம் | .... | .... | 35 |
| நாக பொக்குணை | .... | .... | 36 |
| சிங்க பொக்குணை | .... | .... | 37 |
| கற் குகைகள் | .... | .... | 37 |
| கலா வீவா | .... | .... | 38 |
| மின்னேரியா | .... | ... | 40 |
| மொனருகலை | .... | ... | 103 |
| யாப்பாகுவ | .... | .... | 112 |
| யாழ்ப்பாணம் | .... | .... | 142 |
| யுத்தங்கனாவ | .... | .... | 126 |
| வதுளை | .... | .... | 128 |
| வாழைச்சேனை | .... | .... | 137 |
| விஜிதபுரம் | .... | .... | 40 |
| லங்காதிலக விஹாரை | .... | .... | 94 |
| வெள்ளவாய | .... | .... | 125 |
| றிட்டிகலை | .... | .... | 40 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்களின் அட்டவணை


| நம்பர் | | பக்கம் |
|---|---|---|
| | **அநுராதபுரம்** | |
| 1. | வெள்ளரசுக் கோவில் | 7 |
| 2. | ஸ்ரீ மகாபோதி விருட்சம் | 7 |
| 3. | ஆயிரக்கால் மண்டபம் | 9 |
| 4. | ஈசுரமுனி விஹாரை | 12 |
| 5. | அரசன் குளிக்கும் இடம் | 15 |
| 6. | இராணி குளிக்கும் இடம் | 15 |
| 7. | றுவன் வலிசாய | 17 |
| 8. | றுவன் வலிசாய (யானை மதில்) | 18 |
| 9. | தூபராம தாகபம் | 19 |
| 10. | அபயகிரி தாகபம் | 22 |
| 11. | இரட்டைக் குளம் (கூட்டம் பொக்குணை) | 24 |
| 12. | இராச மாளிகை | 25 |
| 13. | சிறுநீர் ஆசனக்கல் | 27 |
| 14. | மேலை மடங்களுள் ஒன்று | 28 |
| | **மிஹிந்தலை** | 30 |
| 15. | மஹிந்தன் வந்திறங்கிய குன்று | 34 |
| 16. | உணவுத் தொட்டி | 34 |
| 17. | மஹிந்தன் படுக்கை | 35 |
| 18. | நாக பொக்குணை | 36 |
| 19. | **அவுக்கன** | 39 |
| | **பொல்லநறுவை** | 42 |
| 20. | தீவங்கதப் பள்ளி | 44 |
| 21. | ,, ,, | 44 |
| 22. | ,, ,, மூலஸ்தான விக்கிரகம் | 45 |
| 23. | தாமரைக் குளம் | 47 |
| 24. | கல்விஹாரை தியானத்தில் இருக்கும் புத்தர் | 49 |
| 25. | ௸ குகைக்குள் இருக்கும் புத்தர் | 50 |
| 26. | ௸ கல் சாசனம் | 51 |
| 27. | ௸ சீடர் ஆநந்தர் | 52 |
| 28. | ௸ பள்ளிகொள்ளும் புத்தர் | 53 |
| 29. | லங்காதிலக விஹாரை. முன்புறம் | 54 |
| 30. | ௸ முழுத் தோற்றம் | 54 |
| 31. | பத்மசீதா பாசாத | 55 |
| 32. | சிவதேவாலயம். 2-ம் நம்பர். | 57 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நம்பர் | | | பக்கம் |
|---|---|---|---|
| 33. | ஜெடி மூலலிங்கம் | ... | 57 |
| 34. | ஜெடி சுவரிலுள்ள எழுத்துக்கள் | .... | 57 |
| 35. | சத்மஹால் பிரசாத | ... | 58 |
| 36. | கல்புத்தகம் | ... | 59 |
| 37. | ஹெற்றதாகே | .... | 60 |
| 38. | — — — | | — |
| 39. | அட்டதாகே | ... | 60 |
| 40. | வட்டதாகே வாயில் | ... | 61 |
| 41. | ஜெடி சந்திர வட்டக்கல் | ... | 62 |
| 42. | நிசங்கலதா மண்டபம் | .... | 63 |
| 43. | தூபராம தாகபம் | ... | 63 |
| 44. | சிவதேவாலயம். 1-ம் நம்பர் | ... | 64 |
| 45. | மஹாபராக்கிரம பாகுவின் இராச மாளிகை | ... | 65 |
| 46. | குமார பொக்குண | ... | 67 |
| 47. | வாடிவீடும் பராக்கிரம சமுத்திரமும் | ... | 68 |
| 48. | மஹாபராக்கிரம பாகுவின் சிலை | ... | 71 |
| | சீகிரியா | ... | 72 |
| 49. | சீகிரிக் குன்று | .... | 72 |
| 50. | காசியப்பன் கொலு மண்டபம் | ... | 74 |
| 51-54 | சீகிரிச் சுவரோவியங்கள் | ... | 75 |
| 55-56 | ,, ,, | ... | 76 |
| 57. | சிங்க வாயில் | ... | 78 |
| 58. | சீகிரிக்குன்றின் உச்சி | ... | 79 |
| 59. | அலு விஹாரை | .... | 85 |
| 60. | கண்டி தலதா மாளிகாவை | ... | 87 |
| 61. | பேராதனைப் பூந்தோட்டம் | .... | 90 |
| 62. | ,, ,, | .... | 90 |
| 63. | ஹக்கலைப் பூங்கா | ... | 95 |
| 64. | சீதா எலிய | .... | 96 |
| 65. | தேயிலை ஆலை | ... | 97 |
| 66. | தேயிலை பறித்தல் | .... | 97 |
| 67. | தேயிலை நிறுத்தல் | ... | 98 |
| 68. | தேயிலை அரைக்கும் யந்திரம் | ... | 98 |
| 69. | தேயிலை தரப்படுத்தும் யந்திரம் | .... | 98 |
| 70. | நோட்டன் பாலம் | ... | 101 |
| 71. | பாராளுமன்றம் | .... | 103 |
| 72. | இலங்கை வானொலி நிலையம் | ... | 105 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நம்பர் | | | பக்கம் |
|---|---|---|---|
| 73. | ரத்மலானை புகையிரத வேலைத்தலம் | .... | 107 |
| 74. | குருடர் செவிடர் பாடசாலை | ... | 108 |
| 75. | கொளும்பு சிவன் கோவில் | .... | 109 |
| 76. | களனி மஹா விஹாரை | .... | 110 |
| 77. | காலிக் கோட்டை. | .... | 116 |
| 78. | ஷை வாயில் | .... | 116 |
| 79. | காலிக் கலங்கரை விளக்கம் | .... | 116 |
| 80. | தீவாந்தரமுனை விஷ்ணு தேவாலயம் | ... | 118 |
| 81. | ஷை கலங்கரை விளக்கம் | .... | 119 |
| 82. | குஷ்டராசன் சிலை | .... | 120 |
| 83. | மாத்தறைக் கோட்டை | .... | 117 |
| 84. | கதிர்காமம் மூலஸ்தானம் | .... | 123 |
| 85. | ஷை தெய்வானை அம்மன் கோவில் | .... | 123 |
| 86. | ஷை வள்ளி அம்மன் கோவில் | ... | 124 |
| 87. | ஷை முத்துலிங்க சுவாமி கோவில் | ... | 124 |
| 88. | ஷை இஸ்லாம் பெரியாரின் சமாதி | ... | 124 |
| 89. | தியலும நீர்வீழ்ச்சி | ... | 126 |
| 90. | மொனருகலை றப்பர் தொழிற்சாலை | ... | 131 |
| 91. | ஷை றப்பர் தகடாக்கும் முறை | ... | 131 |
| 92. | றப்பர் பதப்படுத்தும் முறை | ... | 131 |
| 93. | சல்ஓயா. நீர்த்தேக்கம் | ... | 134 |
| 94. | ஷை முதலாம் அணைக்கட்டு | ... | 134 |
| 95. | கல்லடிப் பாலம் (மட்டக்கிளப்பு) | ... | 134 |
| 96. | திருக்கோணமலைக் கோட்டை | ... | 137 |
| 97. | ஷை கோணேசர் ஆலயம் | ... | 138 |
| 98. | ஷை சுவாமி மலை | ... | 138 |
| 99. | ஷை இராவணன் வெட்டு | ... | 140 |
| 100. | ஷை துறைமுகம் | ... | 137 |
| 101. | யாழ்ப்பாணக் கோட்டை | .... | 142 |
| 102. | நல்லூர்க் கந்தசுவாமி கோவில் | .... | 143 |
| 103. | சங்கிலி அரசன் அரண்மனை வாயில் | .... | 145 |
| 104. | மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில | ... | 145 |
| 105. | நாகபூஷணி அம்மன் கோவில் | .... | 145 |
| 106. | நாகதீப விஹாரை | .... | 146 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரதபுரம்

அநுரதபுரம் என்பது இலங்கையின் புராதன நகரங்களுள் ஒன்று. சரித்திரப் புகழ்பெற்றது. பல நூற்றாண்டுகளாக இலங்கையின் தலைநகரமாக விளங்கியது. ஆதிகாலத்தில் பல அரண்களையும் அரண்மனைகளையும் உடையதாய் இருந்தது. அன்றும் இன்றும் புத்த சமயத்தவரின் புண்ணிய பூமியாய்த் திகழ்ந்து விளங்குகிறது.

இப்பொழுது அநுரதபுரம் வடமத்திய மாகாணத்தின் தலைநகராகவும், புதிய நகர், பழைய நகர் என இரு பிரிவுகளையுடையதாகவும் இருக்கிறது. பழைய நகரே புத்த சமயிகளின் புண்ணிய பூமியும் புராதன நகரமுமாகும். இது கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இரு பெரு நகரங்களுக்கும் மத்தியத் தானத்தில் அமைந்து விளங்குகின்றது. இங்கு வைகாசிப் பூரணை, ஆனிப் பூரணை, ஆடிப் பூரணை ஆகிய காலங்களில் முறையே "வெசாக்," "போசன்," "ஈசால" போன்ற விசேஷ விழாக்கள் மிகச் சிறப்பாகக் நடைபெறுகின்றன. இவ் விழாக்கள் புத்த சமயிகளுக்குள்ள திருநாட்களில் மிகவும் சிறந்தவை. ஆகையினாலே அக்காலங்களில் அநுரதபுரத்துக்கு அநேக இலட்சக்கணக்கான பௌத்தர்கள் வந்து வழிபாடாற்றிச் செல்வர்.

அநுரதபுரத்தில் அநேக கட்டுக் குளங்களும், நெற்கழனிகளும் உண்டு. இப்பொழுது அநுரதபுரத்தின் பெரும்பகுதி காடடர்ந்து காணப்படுகின்றது.

## பெயர்க் காரணம் :

இந்நகர் அநுரதபுரம் என்ற பெயர் பெற்றதற்குக் காரணம் பலரும் பலவாறு கூறுப.

1. "அநு" என்ற சொல் சிங்கள மொழியில் தொண்ணூறு என்ற எண்ணைக் குறிக்கும். ஆகவே தொண்ணூறு அரசர் ஆண்ட நகரானமையின் அநுராசபுரம் எனப்பட்டுப் பின் அப்பெயர் மருவி அநுரதபுரம் ஆயிற்று என்பர் ஒருசாரார்.
2. கி. மு. ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்த அநுரதன் என்னும் அரசனாற் கட்டப் பெற்றமையால் அநுரதபுரம் எனப் பெயரிடப்பட்டது என்பர் இன்னொரு சாரார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நூறு புரங்களையுடையது, என்பது அநூறுபுரம் என்றாய்ப் பின் காலப்போக்கில் அநுரதபுரம் ஆயிற்று என்று வாதிப்பர் வேறொரு சாரார்.

4. "அநுரே" என்று ஆதியில் இருந்த கிராமம் அநுரதபுரம் ஆயிற்று என்று வாதிப்பாரும் உளர்.

இவ்வாறாக மேற்கூறிய காரணங்களாற்றான் இந்நகருக்கு அநுரதபுரம் எனப் பெயர் வந்தது என்பதை ஆராய்ச்சியாளர்தான் அறுதியிட்டுக் கூறவேண்டும். ஏனெனின் :

(a) தொண்ணூறு அரசர்கள் ஆண்டதனால்தான் அநுரதபுரமென வழங்கியதாயின்; அல்லது

(b) அநுரதன் என்ற அரசனின் பின்பு தான் இந் நகருக்கு அநுரதபுரம் என்ற பெயர் இடப்பட்டதாயின் அக்காலத்துக்கு முன் இந் நகருக்கு வழங்கிய பெயர் யாதோ ? என்ற ஆசங்கை நிகழும்.

மேலும் அதுபற்றிய ஆராய்ச்சிகளோ அன்றிச் சரித்திரச் சான்றுகளோ இன்னும் அறுதியிட்டுக் கூறினபாடில்லை. ஆகவே அநுரே என்ற ஆதிக்கிராமமே அநுரதபுரம் ஆயிருக்கலாம்; அல்லது அநுரதன் ஆக்கிய நகரமாய் இருக்கலாம். இது சரித்திரச் சான்றுகளுடன் ஆராய்ந்து அறுதியிட்டுக் கூறவேண்டிய விஷயமாகும்.

எவ்வாறாயினும் அநுரதபுரம் ஒரு பழைய நகரமாகும். அதைப் பாண்டுகாபயன் என்னும் அரசன் கட்டுவித்தான் என வரலாறு கூறுகின்றது. இந்நகரைப் புத்தபகவான் எழுந்தருளிப் புனிதத் தலமாக்கினார் என்றும், அவர் எழுந்தருளிய பொழுது இந்நகரின் எண்திசைக்கும் தம் திருவருள் நோக்கத்தைச் செலுத்தினார் என்றும், அதன் பயனாய் அவ்வெண்திசைகளிலும் எழுந்த வெஹெர — விஹாரைகளே இக்காலத்து "அட்டமஸ்தானம்" என வழங்கும் எட்டுத் தாகபங்கள் என்றும் புத்த சமயிகள் கூறுவர். மேலும் இவ் வெட்டுப் புண்ணியத் தலங்களையும் ஒரு முறையாயினும் வாழ்க்கையில் சென்று வணங்கினால் முத்திப்பேறெய்தலாம் என்றும் அவர்கள் நம்பிக்கை. அவ்வெட்டுத் தலங்களாவன :-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஸ்ரீமகாபோதி விருட்சக் கோவில்.
2. ருவன்வலிசாய,
3. தூபாராம.
4. லங்காராம.
5. அபயகிரிதாகப.
6. ஜேதவனதாகப.
7. ஈசுரமுனி விஹாரை.
8. மிறிஸ்வத்தி தாகப.

இவைபற்றிய சரித்திரவரலாறு மேலே காண்க.

---

# அநுராதபுரத்தின் சரித்திரச் சுருக்கம்

கி. மு. 437 — 367-ல் ஆண்ட பாண்டுகாபயன் என்னும் அரசன் அநுராதபுரத்தைத் தலைநகராக்கி அரசாண்டான் என்றும் அதற்குப் புறமதிலும் பல வாயில்களும் இருந்தன என்றும் மஹாவம்சம் என்னும் நூல் கூறுகின்றது. தவிரவும் அநுராதபுரம் அகநகர், புறநகர் என இரு பகுதியாய் இருந்ததென்றும், ஆங்கு சுகாதார நிலையங்கள், மயானங்கள் நகருக்கு வேண்டிய பல்வேறு வசதிகளும் இருந்தன என்றும் மேலும் அந்நூல் கூறுகின்றது.

ஆதிகாலத்தில் இருந்தே இலங்கைச் சரித்திரம் இந்திய சரித்திரத்துடன் தொடர்புற்றிருப்பதை நாம் காணலாம்.

இந்தியாவில் (கி. மு. 307 — 267) அசோகச் சக்கரவர்த்தி அரசாண்டார். அவர் புத்த சமயத்தவர். அவர் மகன் மகிந்தன். மகிந்தன் புத்த பிக்குவாகி இலங்கை வந்து, அக்காலத்தில் அநுராதபுரத்தில் அரசாண்ட தீசன் என்னும் அரசனைப் புத்த மதத்தைத் தழுவச் செய்து அநேகரைப் புத்தசமயிகளாக்கினான். 'அரசனெவ்வழி குடிகளவ்வழி' என்பதற்கிணைய இலங்கையில் மக்கள் பலர் புத்தசமயிகளாயினர்.

மகிந்தன் வருகைக்குப் பின்பே அநுராதபுரத்தில் அநேக புத்த கோவில்களும் மடங்களும் கட்டப்பட்டன. இவற்றைத் தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வைத்தியசாலைகள், குரவர் நிலையங்கள், நீராடுஞ் சுனைகளும் மண்டபங்களும், அரண்கள், அரண்மனைகள் முதலியனவும் கட்டப்பட்டன.

ஆனல் சரித்திரச் சான்றுகளாக இக்காலத்து ஆராய்ச்சியின் முதல் இடத்தைப் பெற்றிருப்பவை சமயச் சார்பில் எழுந்த கட்டிடங்களே. வெஹெற—விஹாரைகள், தாகபங்கள் ஆதிகாலத்தில் இருந்தே அரசராலும் சுதேச மக்களாலும் சிறந்த முறையிற் போற்றப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வந்திருக்கின்றன.

இச்சந்தர்ப்பத்தில் வெஹெற, விஹாரை, தாகபம் என்ற சொற்களின் அர்த்தத்தை விளங்கிக் கொள்ளுதல் பொருத்தமாகும். 'வெஹெற' என்பதும் தாகபம் என்பதும் ஒரு பொருட்கிளவிகள். அஃதாவது புத்தபெருமானின் புனித சேஷங்களாகிய தாதுப் பொருள்கள், சின்னங்கள் முதலியன சேமித்து வைத்துக் கட்டப்பட்ட கட்டிடங்கள் — வழிபாடாற்றும் இடங்களாகும்.

விஹாரை என்பது சொரூப அறையும் புத்தபிக்குகள் தங்கி இருந்து பஞ்சசீலங்களைப் போதனையும் சாதனையும் செய்யும் இடமாகும்.

---

## தாகபம்

தாகபங்களிற் பல அமைப்பு முறைகள் உண்டு.

1. மணியின் வடிவம் போன்றது.
2. நீர்க்குமிழ் வடிவம் உடையது.
3. தாமரை வடிவம் உடையது.
4. நெற்போரின் வடிவம் உடையது.

ஒவ்வொரு வகைத் தாகப அமைப்பிலும் நான்கு அல்லது ஐந்து பிரிவுகள் இருப்பதைக் காணலாம்.

1. அடிப்பாகம். — தும்மஹல் பிரிவின — அத்திவாரப் பகுதி.
2. மத்தியபாகம். — கர்ப்பம் — புத்ததாது வைக்கும் பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஹத்தறஸ்கொட்டுவ — நிர்வாண நிலையைக் குறிக்கும் பகுதி.
4. தேவதாஸ் கொட்டுவ — தேவநிலையைக் குறிக்கும் பகுதி.
5. மொட்டுப் போன்ற அல்லது கூம்பு போன்ற பகுதி, அதாவது ஒன்றறக் கலக்கும் நிலை அல்லது சிதாகாச நிலை எனலாம்.

இவை இவற்றைவிடச் சரியை, கிரியை, யோகம், ஞானம், முத்தி எனும் நிலைகளைக் குறிக்கிறதெனக் கொள்ளினும் அமையும்.

ஆதிகாலத்தில் இலங்கையை அரசாண்ட மன்னர்களுட் சிலர் பெரிய தாகபங்களைக் கட்டினார்கள். அவர்களுட் சிறந்தோர் துட்ட கைமுனு (கி. மு. 161—37), வட்டகாமினி (கி. பி. 274—301), மகா சேனன் போன்ற அரசர்கள்.

அநுராதபுரம் (கி. மு. 343 தொடங்கி கி. பி. 985 வரை) சுமார் (1200) ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இராசதானியாகவும் புத்தசமயத் தலைமைப் பீடமாகவும் விளங்கி வந்தது. பத்தாம் நூற்றாண்டில் இராசராசசோழன் என்னும் சோழச்சக்கரவர்த்தி (கி. பி. 985—1014) படையெடுத்து வந்து அநுராதபுரத்தைத் தாக்கினான். அதன் பயனாகப் பத்தாம் நூற்றாண்டிலிருந்து 13-ம் நூற்றாண்டுவரை பொல்லநறுவையை இராசதானியாக்கி அங்கிருந்தே அரசர் ஆட்சிசெய்த போதும் அனுராதபுரத்தின் மகிமை குறைந்துவிடவில்லை.

அனுராதபுரத்தில் ஆண்ட அரசர்களுள் புகழ்படைத்தவர்கள்:–

**தேவநம்பியதீசன் :—** இவன் காலத்தில் இலங்கையில் புத்த சமயம் பரவியது.

**எல்லாளன் :—** தமிழ் மன்னனாயினும் நீதி வழுவா நெறி முறையோன், செந்தண்மைச் செங்கோலன் எனச் சிங்கள மக்களாலேயே புகழப்பட்டவன். எல்லாளனைக் கௌரவிக்கும் முகமாக கட்டப்பட்டதெனக் கருதப்பட்ட சமாதி இப்பொழுது **தக்கிணதூபம்** எனக் கூறப்படுகிறது.

**துட்டகைமுனு :—** எல்லாளனை வென்று சிங்காசனம் ஏறியவன். சிங்கள மக்களின் தேசிய வீரனாகப் போற்றப்படுபவன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றாவன்வலிசாய என்னும் தாகபத்தையும் ஆயிரக்கால் மண்டபம் போன்ற அனேக கட்டிடங்களையும் கட்டுவித்தவன்.

வலகம்பாகு :— வட்டகாமினி அபயன் என்றும் அழைக்கப் படுபவன். பெரிய தாகபம் ஒன்றைக் கட்டுவித்தவன். மாத்தளைக்கு அண்மையில் உள்ள அலுவிஹாரையில் பௌத்த இலக்கியங்களை ஏட்டில் எழுதுவித்துப் போற்றி வளர்த்தவன் எனவும், பொதுவாக இலங்கையில் உள்ள குகைக் கோவில்களின் போஷகன் எனவும் போற்றப் படுபவன்.

மகாசேனன் :— இலங்கையில் மிகவும் பெரிய தாகபம் ஆகிய ஜேதவனராம தாகபத்தையும் பல குளங்களையும் கட்டுவித்தவன். மேலும் இவன் வைதீக புத்தமதத்தை எதிர்த்தவன் என்றும் உயர்ந்த பரம்பரைச் சிங்கள மன்னரின் கடைசி அரசன் என்றும் மகாவம்சம் எனும் நூல் கூறும்.

கீர்த்திஸ்ரீமேகவர்ணன் :— கி. பி. 371-ம் ஆண்டளவில் கலிங்கம் சென்று புத்தரின் தந்ததாதுவைக் கொணர்ந்தவன். இதன் பின் இத்தந்ததாது தேச ஐசுவரியமாகக் கருதப்பட்டு அரண்மனைக் கருகாமையிற் கட்டப்பட்ட தலத மாளிகாவையில் வைத்துப் பாது காக்கப்பட்டுப் போற்றிப் பூசிக்கப்பட்டு வந்தது.

இவ்வாருகப் பல்வேறு முறையிலும் நிலையிலும் பல்வேறு மன்னராற் பரிபாலிக்கப்பட்டு வந்த அநுரதபுரமானது இராசதானியாக இல்லாது போன காலத்தும் சிங்கள மன்னரின் சிரேட்ட யாத்திரைத் தலமாக விளங்கியது.

1706 — 1739-ல் ஆண்ட கண்டி மன்னன் நரேந்திரசிங்கனே அநுரதபுரத்துக்கு யாத்திரை சென்று நேரில் வணங்கிய கடைசிச் சிங்கள மன்னனுவான்.

இலங்கையை ஆண்ட கடைசிச் சிங்கள மன்னனுகிய ஸ்ரீ விக்கிரம ராசசிங்கன் (1798—1815) அநுரதபுரத்திலுள்ள ஸ்ரீ மகாபோதி விருட்சத்தின் மேற்றளக் கட்டிடத்தையும், சுற்று மதிலையும் கட்டுவித்தான். அக்காலம்—அந்நியர் இலங்கையை ஆக்கிரமித்த காலத்து—அநுரதபுரம் அரசியல் துறவிகளுக்கும், அரசியல் அகதிகளுக்கும் அப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம் அளிக்கும் இடமாய் இருந்தது. அக்காலம் அநுரதபுரமும் வன விலங்குகள் நிறைந்த காடடர்ந்த பகுதியுமாய் இருந்தது.

ஆங்கிலேயர் காலத்துப் புராதனச் சின்னங்கள் பற்றி ஆராய்ச்சி தொடங்கியது. போக்குவரத்து வசதி ஏற்பட்டது. அநுரதபுரமும் படிப்படியாகப் பட்டினமாக வளர்ச்சி அடைய ஆரம்பித்து இன்றும் முன்னேறிக்கொண்டு செல்கிறது.

புதை பொருளாராய்ச்சியும் தொடங்கப்பெற்றுப் புராதனச் சின்னங்களை ஆராய்ந்து அறிதியிடுவதோடு அவற்றைப் பாதுகாக்கவேண்டிய வழிவகைகளையும் அரசாங்கம் எடுத்துவருகிறது. இப்பொழுது அநுரதபுரத்தின் பழைய நகரம் பௌத்த சமயத்தவரின் பரிசுத்த நகரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுத் தீவிரமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன.



வெள்ளரசுக் கோவில்



ஸ்ரீ மகா போதி விருட்சம்

அநுரதபுரத்துப் புராதன நகர் அகநகா, புறநகர் என இரு பகுதிகளை உடையதாய் இருந்தது. அகநகரின் மத்தியில் வெள்ளரசுக் கோவில் உண்டு. இங்குள்ள ஸ்ரீ மகாபோதி விருட்சம் இலங்கையில் புத்தசமய வரலாற்றோடு தொடர்புடையதாய்ச் சுமார் 2200 வருடங்களுக்கு மேலாகப் புத்தசமயிகளாற் போற்றி வணங்கப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகின்றது. இது உலகத்திலுள்ள மிகப் பழைய விருட்சங்களுள் ஒன்றாகும். இருந்த போதிலும் அது மிகவும் பருமனாக வளரவில்லை.

120866

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மகாபோதி விருட்சத்தின் மகிமையும் வரலாறும்

இந்தியாவிலே புத்தகாயா என்னும் இடத்தில் உள்ள போதி விருட்சத்தின் கீழிருந்து தவஞ் செய்து அறிவொளி பெற்றுப் புத்த பெருமான் நிருவாண நிலையை அடைந்தார். அந்த மூல விருட்சத்தின் வலப்பாகத்தில் இருந்த கிளையொன்று இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு அநுரதபுரத்தில் நாட்டப்பட்டது. அக்காலத்து இந்தியாவிற் செங்கோலோச்சிய அசோகச் சக்கரவர்த்தி தன் மகளும் பிக்குணியுமாகிய சங்கமித்தை வசம் மேற்படி கிளையை இலங்கை அரசனுக்கு அனுப்பி வைத்தான். இலங்கை அரசனான தேவநம்பிய தீசன் அப்போதி விருட்சக் கிளையை மகமேக நந்தவனத்திலே நாட்டுவித்தான். மகமேக நந்தவனம் அநுரதபுரத்தில் உள்ளது. சம்புத்த சங்கத்துக்கு நன்கொடையாகக் கொடுக்கப்பட்டிருந்த பகுதியாகும்.

இவ்வாறு மகமேக நந்தவனத்தில் எழுந்தருளிவிக்கப் பெற்ற ஸ்ரீ மகாபோதி விருட்சமானது இலங்கைப் பௌத்த மக்களுக்கன்றி உலகத்திலேயுள்ள ஏனைய புத்த மதத்தவரும் பக்தி சிரத்தையோடு தொழுதேத்திப் புகழ்ந்து பாடும் ஒன்றாக விளங்குகின்றது. இங்கிருந்தே மகிந்தன் புத்தமதத்தைப் பரப்பினன் என்று சிலர் கூறுவர்.

ஸ்ரீ மகாபோதி விருட்சத்தைச் சுற்றி இருக்கும் மதிற் சுவர் 14-ம் நூற்றாண்டில் மூன்றாம் இராசசிங்கனாற் கட்டுவிக்கப்பட்டதென்பர். படிகளின் இரு மருங்கிலும் உள்ள நாகராசன் சிலைகளும், முன்னுள்ள சந்திர வட்டக் கல்லும் பாதுகாத்தலைச் செய்யும் என்னும் நோக்கத்துடன் வைக்கப்பட்டது என்பது ஐதிகம். இங்குள்ள நாகராசன் சிலை ஏழு தலை உடையதாய் இருப்பதை அவதானிக்கலாம்.


மேற்படி கோவிலை வலம் வரும்போது மகிந்தனிடமிருந்து தேவநம்பியதீசன் வெள்ளரசுக் கிளையைப் பெறுவது போன்ற படங்கள் வெண் சுதையில் ஆக்கப்பட்டு, வர்ணம் கொடுக்கப்பட்டு, மிக அழகாகக் காட்சி அளிப்பதை நாம் காணலாம். மேலும் அப்பிரகாரத்தில் செல்லும்பொழுது விக்கிரக அறை ஒன்றைக் காணலாம். ஆங்குள்ள புத்தர் விக்கிரகங்கள் நான்கும் பர்மா அரசாங்கத்தால் நன்கொடையாக அளிக்கப்பட்டவையாகும். இந்நான்கு விக்கிரகங்களும் நான்கு நிலையில் இறப்பைக் குறிக்கும் என்று புத்தசமயிகள் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பூமியைத் தொட்ட விதம்:— அதாவது தம்மை எதிர்த்தவர்களைப் பூமியைச் சாட்சியாகச் சொல்லிக் கைதொட்ட விடத்துப் பூமியில் அதிர்ச்சி உண்டாய்ப் புத்தபெருமானின் பெருமை வெளியாயிற்று என்றும்,
2. புத்தபெருமான் பரிநிருவாணம் அடைந்த நிலை என்றும்,
3. புத்தபெருமான் அபயம் அளிக்கும் நிலை என்றும்,
4. தம்மைக் கொல்ல வந்த யானைக்கும் அபய முத்திரை கொடுத்து அபயம் அளிக்கும் நிலை என்றும், விளக்கம் கூறுவர்.

இக்கோவிலுக்கு முன்னாகப் பெரியதோர் நந்தவனம் இருந்ததென்றும், மகிந்தன் அங்கிருந்து புத்தமதத்தைப் பரப்பினான் என்றும், சிலர் கூறுவர். இப்போதுள்ள கோபுரவாயிலின் முன்பாக ஆயிரக்கால் மண்டபம் உண்டு.

---



## ஆயிரக்கால் மண்டபம்

ஆயிரக்கால் மண்டபம், லோவமகாபாய, லோகபாசாத, செப்பு மாளிகை எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. ஆயிரத்துக்கு மேற்பட்ட தூண்களால் ஆனமையின் ஆயிரக்கால் மண்டபம் என்றும் உலகத்துப் பெரிய புத்த குருபீடத் தாபனமாகையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோவமகாபாய என்றும், செப்புத் தகடுகளினால் வேயப்பெற்ற கூரையையுடையமையால் செப்பு மாளிகை என்றும் பெயர் பெற்ற தென்று காரணங் கூறுவர்.

இவ்வாயிரக்கால் மண்டபம் உயர்ந்த குருபீடத்தின் ஆதீனமாகும். இது துட்டகைமுனுவால் (கி. மு. 161 — 137) ஒன்பது அடுக்கு மாளிகையாகக் கட்டப்பட்டதென்றும், மேல் மாடிக் கட்டடங்களெல்லாம் மரத்தினாலானவை என்றும், இக்கட்டிடம் கட்டிப் பதினைந்து இருபது ஆண்டுகளால் தீக்கிரையாயிற்றென்றும், தீக்கிரையான பொழுது அரசாண்ட துட்டகைமுனுவின் சகோதரன் சதாதீசன் ஏழு மாடிக் கட்டிடமாகத் திரும்பக் கட்டுவித்தான் என்றும் கூறப்படுகிறது. இங்கு புத்தபிக்குகள் அவரவர் தகுதிக்கும் உயர்பதவிக்கும் ஏற்ப மாடிகளில் வசித்து வந்தார்கள்.

சோழர் படையெடுப்பின்போது ஆயிரக்கால் மண்டபம் அழிக்கப்பட்டது. பின்பும் முதலாம் பராக்கிரமபாகு அதைக் கட்டுவித்தான்.

இப்போது காணப்படும் கட்டிடத் தூண்களில் உள்ள சிற்ப முறையை ஆராய்ச்சி செய்த புதைபொருளாராய்ச்சி நிபுணர்கள் அவை 12-ம் நூற்றாண்டுச் சிற்பமுறையைத் தழுவியதாய் இருக்கிறதென்பர்.

---

## புதைபொருள் நூதனசாலை

வெள்ளரசுக் கோவிலுக்குத் தெற்கே செல்லும் குருநாகல் பாதையில் சில யார் தூரத்தில் அவ்வீதியின் கீழ்பாகத்தில் புதைபொருள் நூதனசாலை உண்டு. அங்கே அநேக புராதன சின்னங்களைக் காணலாம். சிற்பக்கலைப் பொக்கிஷமாக விளங்கும் பல்வேறு சிலாரூபங்களையும் இங்கு காணலாம். அவற்றைக் கலைக் கண்கொண்டு ஆராயின் காலவேறுபாடு — ஆட்சி வேறுபாட்டுக்கு இயையச் சிற்பக்கலையும் வேறுபடுவதைத் தெளிவாய் அவதானிக்க முடியும்.

இந்நூதனசாலை இருக்கும் இடம் மகாவிகாரை ஆச்சிரமத்துக்குரிய பகுதியாக இருந்ததெனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்கிண விஹாரை அல்லது தக்கிண தூபம்


சமீபகாலம் வரை எல்லாள மன்னன் சமாதி என்று கூறப்பட்ட இக்கட்டிடம் இப்பொழுது ஆராய்ச்சியாளரால் தக்கிண தூபம் என அழைக்கப்படுகிறது. அதற்குக் காரணம் இக்கட்டிடத் தளத்திற் காணப்படும் சிலாசாசனமாகும். இக் கட்டிடம் தக்கிண மடத்தின் தீசன் மகா சைத்தியம் என்று அதிற் குறிக்கப்பட்டிருக்கிறது. சரித்திர ஆசிரியர் இது வலகம்பாகு என்னும் அரசனின் கீழிருந்த உத்திடன் (கி. மு. 89 – 77) என்னும் பிரதானியாற் கட்டப்பட்டதென்றும், கனிஷ்ட தீசன் (கி. பி. 166 – 184) பின் பெரிதாகக் கட்டினான் என்றுங் கூறுவர்.

இக்கட்டிடம் இவ்வளவு நாளும் எல்லாளன் சமாதி எனப் பிழையாக வழங்கப்பட்டதென்றும், அஃது உண்மையில் துட்டகைமுனுவின் அஸ்தி புதைக்கப்பட்ட இடம் எனச் சில சிங்கள ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவர்கள் இவ்வாறு கூறுவதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. இவ்வாராய்ச்சியாளர்களே இக் கட்டிடத்தை 50 - 60 அடி ஆழத்துக்கு வெட்டி ஆராய்ந்தபொழுது கரி முதலியன கண்டெடுத்தார்கள் என்றும் அதற்குத் தகத் தம் கற்பனையால் இது துட்டகைமுனுவின் சமாதி யென்றும் தாபிக்கின்றனர்.

எவ்வாறிருந்த போதிலும் இது ஒரு சமாதி என்பதற்கு அவர்கள் கூறும் ஆராய்ச்சிச் சான்றுகளே போதுமானவை என்பதற்கையமில்லை. மேலும் சரித்திரமும் மற்றும் இலக்கியங்களும் கர்ண பரம்பரைக் கதைகளும் இது எல்லாளன் சமாதி எனப் பகர்கின்றன. ஆனால் இப்போ சில ஆராய்ச்சியாளர் துட்டகைமுனுவின் சமாதி என்று கூறுவதற்கு அவர்கள் கூற்றை தவிர வேறு சான்றுகள் யாண்டும் இருப்பதாக அறிகிலேம்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈசுரமுனி விஹாரை

ஈசுரமுனி விஹாரை தேவநம்பிய தீசனால் கட்டுவிக்கப்பட்டது. இது திசைவீவாக் குளத்துக்கு அருகாமையில் உண்டு. இவ் விஹாரையினுள் வலதுபுறஞ் சரிந்தநிலையில் அறிதுயில் கொள்ளும் புத்த பெருமானின் திருவுருவம் வர்ணம் தீட்டப்பட்டு மிகவும் கவர்ச்சிகரம் உள்ளதாய் விளங்குகின்றது. சுவர்களில் புத்த சமயப் பெருமையை விளக்கும் சித்திரங்களும் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் புத்தசமயம் வந்த வரலாற்றை விளக்கும் வர்ணம் தீட்டப்பெற்ற அழகிய ஓவியங்களும் சிற்பச் சிலைகளும் உள்ளன.

இவ்விஹாரையின் பக்கத்தே ஒரு தடாகம் உண்டு. ஒரு பக்கம் விஹாரையுடன் பொருந்தப் பெற்ற பெரிய கற்பார் இருக்கிறது. இக் கற்பாரில் ஒரு பெரிய பிளவுண்டு. இதைப் பற்றிய பல ஐதிகக் கதைகளுண்டு.

1. பகீரதன் வேண்டுகோளின்படி பாய்ந்து வந்த ஆகாய கங்கை வழிந்தோடி வீழ்வதற்காக வகுத்த வழி என்றும்,
2. தேவர் சாபத்தால் அடிபட்டபொழுது ஏற்பட்ட பிளவு என்றும்,
3. முனிபுங்கவர் உலக அநித்தியத்தை அறிந்து அதை நீக்குவான் வேண்டிச் செய்த தவத்தின் போதுகிர்த்த கண்ணீர் பாய்ந்த இடமென்றும், பலவாறு கூறுப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய அடிப்படையில் எழுந்த இக் கதைகளுடன், மக்களின் கற்பனைத் திறனைக் கிளறி மெய்ப் பொருள் காணும் முறையில் அமைக்கப்பெற்ற சிற்பியின் நுண்கலைத் திறனை நாம் மெச்சாமல் இருக்க முடியாது. அக் கற்பாறையில் உள்ள பிளவின் இருமருங்கிலும் யானைகளின் கொத்துச் சித்திரங்கள் வெகு அழகாய் அமைந்துள்ளன.

இத்தடாகத்துக்கு எதிர்ப்புறமாயுள்ள சுவரிலே விஹாரை வாயிலில் உள்ள இடப்புறச் சுவரிலே ஒரு அரச புருஷன் கம்பீரமான முறையில் இருப்பது போலவும், அப்புருஷனின் வலது தோளுக்கு மேல் குதிரையின் உருவம் செதுக்கப் பெற்றும் இருக்கிறது. இச் சிற்பத்தின் உட்பொருள் இன்னும் உள்ளபடி ஆராய்ந்து அறிந்து விளக்கப்படவில்லை. இச் சிற்பமுறை கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இருந்த முறையை ஒத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இவற்றை விட, “காதலர் சிலை” எனக் கூறப்படும் ஒரு சிலையும் உண்டு. அதில் ஒரு புருஷனின் இடத் துடையில் பெண்ணொருத்தியைத் தழுவிய வண்ணம் இருப்பது போலக் கல்லிற் செதுக்கப்பட்டிருக்கிறது. புருஷனின் முகம் மென்மையானதாய் இல்லாதிருந்த போதும் அச் சிற்பம் கலை நுட்பம் நிறைந்ததொன்று என்றும், அது ஆறும் நூற்றாண்டுச் சிற்ப முறையைத் தழுவி இருக்கிறதென்றும், ஆராச்சியாளர் கூறுகின்றனர்.

ஈசுரமுனி விஹாரையின் உச்சிக்கு ஏறிச் செல்லும் போது பல்வேறு நிலைகளில் சிற்பிகளின் திறமைகளையும், சமயப் பற்றுக்கடிப்படையான பல்வேறு வேலைகளையும் காணலாம்.

மேலும் ஈசுரமுனி விஹாரை ஆதிகாலத்துப் பெரியதொரு நிலப்பரப்பை உடையதாய்ச் சமயச் சார்பான பெரியதோர் ஸ்தாபனமாய் விளங்கியதென்றும், இதற்குத் தென்புறத்துள்ள **வெஸ்ஸகிரியா** போன்றவை இதன் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த பகுதிகள் என்றும், சில ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள்.

---

224
R.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெஸ்ஸகிரிக் குகைகள்

வெஸ்ஸகிரிக் குகைகள் ஈசுரமுனி விஹாரைக்கு அண்மையில் உள்ளன. இங்குள்ள சிலாசாசனம் இக்குகைகள் கிறிஸ்துவுக்கு முன் காலத்திலேயே குடையப்பட்டன என்றும், விக்கிரக அறைகளாக அமைக்கப்பட்டன என்றும் கூறும்.

இக்குகைகள் ஆதிகாலத்து அருமுயற்சிகளுக்கு ஆதிபீடமாய் இருந்தன. சில குகைச் சுவர்களிலே பழைய காலத்துச் சுவரோவியங்கள் காணப்படுகின்றன. கி. பி. 10-ம் நூற்றாண்டு வரை இப்பகுதி புத்தமத முன்னேற்றத்துக்கு ஒரு சிறந்த இடமாக இருந்ததென்பதற்குச் சான்றுகள் பல உண்டு.

---

# திசைவீவாக் குளம்

மிகவும் அழகான குளங்களுள் திசைவீவாக் குளமும் ஒன்றாகும். ஆதிகாலத்திலே நகருக்கு வேண்டிய குடிநீர் இக்குளத்தில் இருந்துதான் எடுக்கப்பட்டது. திசைவீவாவுக்கு 50 மைலுக்கு அப்பாலுள்ள கலாவீவாவில் இருந்துதான் நீர் கொண்டுவரப் பெற்றது.

இக்குளம் கிறிஸ்துவுக்கு முன் 3-ம் நூற்றாண்டளவில் தேவநம்பியதீசனுற் கட்டுவிக்கப்பட்டது. அதன் பரப்பு சுமார் 400 ஏக்கராகும். அதன் அணைக்கட்டு சுமார் $2\frac{1}{2}$ மைல் நீளம் உள்ளது. அதன் அணைக்கட்டில் பவனி வரும்போது நாலாபக்கமும் அழகு கொழிக்கும் காட்சிகளையும் கவர்ச்சியுள்ள சுற்றுப்புறங்களையும் நாம் காணலாம்.


---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அரச நந்தவனம்

திசைவீவாக் குளத்து அணைக்கட்டுக்கு அருகாமையில் அரச நந்தவனம் உண்டு. ஆங்கு ஒரு காலத்துச் சிறப்புடன் விளங்கிய மாளிகைகளினதும் மற்றும் பல்வேறு கட்டிடங்களினதும் கிலமடைந்த பகுதிகளை இன்றுங் காணலாம்.

சுமார் 100 அடி நீளம் 60 அடி அகலமுள்ள மூன்று மண்டபங்கள் அகழியாற் சூழப்பட்டிருத்தலைக் காணலாம். ஆங்கு அக்கட்டிடங்களுக்குப் பாவித்த செங்கற் கட்டிகளையும் தளங்களுக்குப் பதித்திருக்கும் பருக்கைக் கற்களையும் இன்றுங் காணலாம். கட்டு, அமைப்பு, வளைவுகள் மிக அழகான முறையில் அமைந்துள்ளன. இவ்விடத்துக்குச் சற்றுத் தெற்கே குளிக்கும் இரு அறைகள் உண்டு.



அரசன் குளிக்கும் இடம்



இராணி குளிக்கும் இடம்

இந்த இரண்டு குளிக்கும் அறைகளும் கண்கவர் வனப்புடையன. இவற்றுக்கு முன்பு கொத்திப் பதித்த கற்களால் ஆனதும் தாமரைப்பூக் கொத்துச் சித்திரம் அமைந்த நீராடுங் கட்டுக்குளம் இரண்டையும் காணலாம். இக் குளங்களுக்கு நீர் வந்து வீழ்கின்ற வாய்க்கால்கள் மிக நுணுக்கமான முறையில் நிலத்துக்கூடாக உட்புறத்திலே அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே நீர் வெளியேறும் வாய்க்கால்களும் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைவீவாக் குளத்தில் இருந்து இக் கட்டுக் குளத்துக்கு நீர் வரும் பெருவாய்க்கால் மலையில் இருந்து சுனைநீர் வீழ்வது போன்ற முறையில் பல்வேறு வளைவுகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இக் கட்டுக் குளங்களைப் பற்றிச் சிங்கள இலக்கியங்கள் பலபடப் புகழ்ந்து கூறுகின்றன. இந் நந்தவனம் சிருங்கார ரசம் சிந்தும் சிறப்புடை வனமாக இருந்ததெனக் கூறப்படுகிறது.

இக் குளங்களுக்கருகில் ஒரு கற்பாறையில் உலகத்தின் படம் எனக்கருதப்படும் சித்திரம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. இது தொலமி என்ற கிரேக்க அறிஞன் வரைந்த உலகப்படம்போலத் தோற்றம் உடையதாய் இருக்கிறது.

---

# மிறிஸ்வேதி தாகபம்


இத்தாகபத்தைத் துட்டகைமுனு கி. மு. 158-ல் கட்டுவித்தான். இதன்மேற் கூப்பு போன்ற பகுதி கிலமடைந்த நிலையில்தான் இருக்கிறது. இத்தாகபத்தைச் சுற்றிச் சிறுசிறு தூணகள் காணப்படுகின்றன. அவை அக்காலத்து ஆங்கு வசித்த புத்த பிக்குகளின் வாசஸ்தலங்களின் எஞ்சியுள்ள பகுதிகள் என்று கருதப்படுகிறது. இத்தாகபத்தைச் சுற்றி அழகிய சோலை உண்டு. இப்போதுள்ள தாகபத்தின் உயரம் 52 அடி 7 அங்குலம்.

---

# பசவன் குளம்

இக்குளம் பண்டுகாபயனால் (கி. மு. 437 — 407) கட்டுவிக்கப் பட்டது. பெரும்பகுதியான கழனிகளுக்கு நீர்ப்பாய்ச்சுதற்கு உதவியாய் இருந்தது. இதற்கு அபயவீவா என்ற பெயரும் உண்டு. புத்தசமய பக்த கோடிகள் இதை விரும்பி அடைந்து இதில் தீர்த்தம் ஆடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## றுவன்வலிசாய


றுவன்வலிசாய பசவன் குளத்துக்கு அண்மையில் ஸ்ரீ மகா போதி என்னும் வெள்ளரசுக் கோவிலுக்கு வடபுறமாய்ச் செல்லும் கிளை வீதியில் உண்டு. றுவன்வலிசாய துட்ட கைமுனுவால் (கி. மு. 167 — 131) கட்டுவிக்கப்பட்டது. அப்பொழுது அதன் உயரம் 300 அடி. 19-ம் நூற்றுண்டில் வாழ்ந்த நாரன்வித்த தேரோ என்னும் புத்த துறவி காடடர்ந்து மானும் மந்தியும் நரியும் வாழ்ந்த இப்பகுதியைச் சாடு கெடுத்து நாடாக்கி நகராகவும் வளர வழி வகுத்தார்.

றுவன்வலிசாயாவை மகாதூபம் என்றும் அழைப்பதுண்டு. இது நீர்க்குமிழ் வடிவத்தில் அமைந்த தாகபமாகும். இத்தாகபத்துள் புத்தரின் தாதுப் பொருள்களும், செல்வங்களும் வைக்கப்பட்டுள்ளதென்றும், அரசன் பிறர் உதவியை நாடாது தானே கட்டுவித்தான் என்றும், வருடா வருடம் விழா வெடுப்பித்தான் என்றும், அவ்விழாவிற்கு வெளிநாடுகளில் இருந்தும் புத்த பிக்குகள் வந்து வழிபாடாற்றிச் சென்றார்கள் என்றும் மகாவம்சம் கூறுகின்றது.

இத்தாகபத்தின் சிரேட்ட வாயிலால் உள்வீதிக்குச் செல்லும் போது இரு கட்டிடங்களைக் காணலாம். உள்வீதி கற்பதிக்கப்பட்டது. முற்காலத்தில் உள்பிரகாரத்திலே பொன்மணல் தூவப்பட்டிருந்ததென்றும் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேற்படி தாகபத்தைத் தாங்கி நிற்கும் பாவணையில் கொத்தப் பட்ட யானைகளடங்கிய சுவரை இப்படத்திற் காணலாம். தூரத்தி லிருந்து பார்க்க இவை மிகவும் அழகாய் இருக்கின்றது. இத்தாக பத்தைச் சுற்றி — வீதிவலம் வரும்போது பூக்கள் வைத்து வணங்கு வதற்கெனக் கட்டப்பட்ட "வஹல்கட" என்னும் மண்டபங்கள் உண்டு.

இத்தாகபத்தின் ஒரு புறத்தில் விக்கிரக அறை உண்டு. அங்கு சுவர்களில் சாதகக் கதைகள் — விசேஷமாக எல்லாளன் துட்ட கைமுனு யுத்தம் முதலியவை ஓவியமாகத் தீட்டப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

விக்கிரக அறையின் உள்ளே பல்வேறு புத்தசமய சம்பந்தமான விக்கிரகங்களைக் காணலாம். வெளி விறுந்தையிலே நான்கு விக்கிர கங்களை நாம் பாக்கலாம். அவற்றுள் மூன்று மிகவும் பழைய காலத் தவை. அவை இதுவரை திரு அவதாரஞ் செய்த புத்தர்களின் சிலைகளென்றும், நாலாவது விக்கிரகம் இனிமேல் அவதரிக்க இருக் கும் மைத்திரேய புத்தரின் சிலை என்றும் கூறப்படுகிறது.


இந்நான்கையுந் தவிரப் படிக்கட்டுகளுக்கு அருகில் இன்னொரு அழகான சிலை உண்டு. அது துட்டகைமுனுவின் சிலை என்று சில ரும், போதி சத்துவக் கடவுளின் சிலை என்று சிலரும் கூறுவர். இவ் விக்கிரகங்கள் யாவும் சுதையாலானவை. அவற்றின் காலம் வரை யறையாக இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறன்றி மேற்படி விக்கிரகங்களைப் பற்றி வேறுவிதமாகக் கூறுவாரும் உளர். முற்கூறிய நான்கு விக்கிரகங்களும் புத்த பெருமானின் அவதாரங்களாகிய,

1. கக்குசந்த
2. கோணுகம
3. காசியப்ப
4. கௌதம புத்தரைக் குறிக்கிறதென்றும், ஐந்தாவதாயுள்ள விக்கிரகம் இனி அவதரிக்க இருக்கும் மைத்திரேய புத்தரைக் குறிக்கும் என்றுங் கூறுவர்.

றுவன் வலிசாய தாகபத்தின் உச்சியில் 18 அங்குல நீளமுள்ள இரத்தினக்கல் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறதென்பர். இது இலங்கைப் பௌத்த மக்களால் போற்றி வழிபடப்படும் சிரேட்ட தாகபமாகும்.



## தூபராம தாகபம்

றுவன்வலிசாயவுக்குச் சற்றுத் தூரத்திலே தூபராம தாகபம் உண்டு. இது மணிவடிவம் உடைய தாகபமாகும். இதைச் சுற்றிக் கற்றூண்கள் பல வரிசையாக உண்டு. கற்றூண்களில் அழகுறப் பொறித்த எழுத்துக்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூபராமதாகபம் மிகவும் பழையகாலக் கட்டிடங்களுள் ஒன்று. இது தேவநம்பிய தீசனாற் கட்டப்பட்ட தென்பர். ஆரம்பத்தில் அதன் உருவ அமைப்பு நெற்குவியல் வடிவமாக இருந்தது. ஆனால் அது கால்க்கிரமத்தில் பழுதடைந்தபின் புனருத்தாரணஞ் செய்யப் பட்ட பொழுது மணிவடிவமாக அமைத்தனர். சென்ற நூற்றாண் டில் இத் தாகபம் திருத்தப்பட்டது.

இத் தாகபத்தில் புத்த பகவானுடைய வலது தோள்பட்டை எலும்பு ஆவாகனஞ் செய்து சேமித்து வைக்கப்பட்ட தென்பர். இதைவிட இதைக் கட்டியபொழுது புத்தபகவானின் நெஞ்செலும்பு ஒன்றை சக்கரன் என்ற தெய்வம் கொடுத்ததாக ஐதிகக் கதை ஒன்றுண்டு.

இத்தாகபம் ஆதிகாலத்தில் யாத்திரிகர்களால் ஒரு சிறந்த தல மாகவும் கொண்டாடப் பட்டதென்று மகாவம்சம் கூறுகின்றது.

இதைச் சுற்றியுள்ள கற்றூண்கள் தாகபத்தின் அழகை அதிகப் படுத்துவதும் அன்றி, தாகபத்தை மூடி ஒரு கட்டிடம் அமைந் திருந்த தென்பதையும் தெளிவாகக் காட்டுகின்றது. மேலும் இத் தாகபம் வட்ட வடிவில் அமைந்த ஒரு வட்டதாகே எனும் தாது வைக்கப்பட்ட இடமாகும்.

இதன் பக்கத்து ஒரு திருமஞ்சனக் கிணறும் கஞ்சித் தொட்டி யும் உண்டு. கஞ்சித் தொட்டியின் ஒரு புறத்தில் 10-ம் நூற்றாண் டுச் சிலாசாசனம் என்று எழுதப்பட்டிருக்கிறது. அச்சிலாசாசனம் கூறுவதாவது :

மகாபலிபுர — அன்னசாலை எனப் பெயருடன் விளங்கிய ஒரு மண்டபம் இருந்த தென்றும், அது தேவநம்பிய தீசனால் ஆரம்பிக் கப்பட்ட தென்றும், அநுராதபுர அரசர்களாற் பாதுகாக்கப்பட்டு பரிபாலிக்கப்பட்டு வந்ததென்றுங் கூறுகிறது.

மேலும் இவ்வன்னசாலைக்கு ஆகாராதிகள் அண்மையில் இருந்த அரச மாளிகையிலிருந்து அனுப்பப்பட்ட தென்றும் வரலாற்று முறையில் அறியக் கிடக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வச்சிராயுத வீடு

தூபாராம தாகபத்தின் முற்பக்கத்தில் பழைய கட்டிடம் ஒன்றின் சிதிலம் அடைந்த பகுதிகளைக் காணலாம். ஆங்கு காணப்படும் தூண்களிலே பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் போன்று வேறு எந்தப் பகுதியிலும் காணக்கிடையாது. அவ்வெழுத்துக்கள் வச்சிராயுதம் போன்றிருப்பதால் அக்கட்டிடத்துக்கு வச்சிராயுத வீடு என ஒரு ஆராய்ச்சியாளர் கூறிப்போந்தார். அக்கட்டிடத்திலேயே தந்ததாது நெடுங்காலமாக இருந்ததென்று பலர் கருதுகிறார்கள்.

---

## காவற் சிலை

தூபாராம சமாதியின் பின்புறத்தில் கிலமடைந்திருக்கும் இன்னொரு கட்டிடத்தில் கொத்து வேலை செய்யப்பட்ட பழைய கலை முறையில் அமைந்த ஒரு சிலை உண்டு. இதைக் காவற் சிலை என்பர்.

---

## B. மடாலயம்


தூபாராம தாகபத்துக்கும் றுவன்வலி சாயவுக்கும் இடையில் உள்ள கட்டிடம் B. மடாலயம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு அநுராதபுர நகரிற் காணப்படுகிற எல்லாவிதமான கலை முறைகளும் காணப்படுவது ஒரு தனிச் சிறப்பாகும். அதுவுமன்றி மிகவும் கவர்ச்சிகரமானதாயும் அமைந்துளது. இம்மடாலயத்தின் அமைப்பு முறை ஏனைய மடாலயங்கள் அமைப்பு முறைக்கு ஒரு முன்மாதிரி போன்றுள்ளது என்று கூறப்படுகிறது. அங்குள்ள தூண்களிற் காணப்படும் கொத்து வேலைகள் கலை நுணுக்கம் வாய்ந்தவை. வெளிப்புறத்தில் உள்ள சிற்பங்களுள் — சிங்கங்கள், குகைக் காட்சிகள், இயற்கைக் காட்சிகள், மான், மயில், குரங்கு, கிரி, நாகம் போன்றவை பார்ப்பவருக்குக் கண்குளிரும் காட்சியாகும். இக் கட்டிடத்தின் காலம் தெளிவாய் நிர்ணயிக்கப்படவில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூபாராம தாகபத்துக்கு வடக்கே ஒரு இந்துக் கோவில் உண்டு. இதன் சரித்திரம் இன்னும் ஆராய்ந்து அறியப்படவில்லை.

அதற்கப்பால் வடமேல் திசையை நோக்கிச் செல்லுந் தெருவில் லங்கா ராம என்னுந் தாகபமும் அதற்கு அண்மையில் அபயகிரி தாகபமும் உண்டு.

---



# அபயகிரி தாகபம்

அபயகிரி தாகபம் வலகம்பாகு என்னும் அரசனாற் கட்டுவிக்கப் பட்டது. அதன் உயரம் 350 அடி. அது முன்னேற்றத்தை விரும்பிய புத்தமதக் கொள்கையினரின் மத்தியத் தானமாய் விளங்கியது.

அபயகிரி தாகபம் வலகம்பாகு என்னும் அரசனாற் கட்டப்பட்டதென்றும், அவன் தமிழர் படையெடுப்பிற்கு எதிர் நிற்கமாட்டாது ஓடும்பொழுது அவ்வழியில் ஓர் ஆச்சிரமம் கட்டி வாழ்ந்த கிரி என்னும் சந்நியாசியால் கேலி செய்யப்பட்டான் என்றும், அப்பொழுது அவ்வரசன் தான் தமிழரைத் துரத்தியபின் அவ்விடத்து ஒரு தாகபம் கட்டுவதாகப் பிரதிக்ஞை செய்தான் என்றும், அவன் எண்ணியவாறே அவன் வெற்றி பெற்று அவ்விடத்திலேயே ஒரு தாகபம் கட்டித் தன் பெயரையும், அத் துறவியின் பெயரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து அபயகிரி தாகபம் என அதற்குப் பெயரிட்டான் எனவும் ஒரு கதை வழங்குகிறது.


வேற்று நாட்டுப் புத்தபிக்குகள் சிலர் இத்தாகபம் அப் பெயருக்கு இணங்க அடைக்கலம் புகுந்தவர்களுக்கு அபயம் அளிக்கும் அசைவிலா மலைபோன்ற தாகபம் எனப் புகழ்மாலை சூட்டி விவரித்துள்ளனர்.

இத் தாகபத்தில் இருந்துதான் புத்த சமயத்தில் பிளவு உண்டாக ஆரம்பமாயிற்று. அவைதிக புத்த மதம் ஓங்கி வளர்ந்தது. அக்காலத்து வைதிக புத்தமதத்துக்கு இருப்பிடமான மகாவிகாரை அழிக்கப்பட்டு அதன் ஐசுவரியங்கள் யாவும் அபயகிரி விகாரைக்கு அளிக்கப்பட்டன. தந்ததாதுவும் அபயகிரி தாகபத்தில் வைக்கப்பட்டு, அஃதே புண்ணியத்தலமாகப் போற்றப்பட்டு க்ஷேத்திராடன மத்தியத்தானமாய் விளங்கியது.

அக்காலத்திலே அநுராதபுரத்து வீதிகள் எல்லாம் சிறப்பாக அபயகிரி தாகபத்தைச் சூழ்ந்துள்ள வீதிகள் எல்லாம் யாத்திரீகர் கோஷ்டிகளாலும், பூக்களாலும், வாசனைத் திரவியங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த தெனச் சீனயாத்திரிகர் பாஹியன் பலவாறு புகழ்ந்துரைத்துள்ளான்.

சோழர் அநுராதபுரத்தைத் தாக்கிய காலத்து அபயகிரி தாகபம் வீழ்ச்சி அடைந்தது. பின் பொல்லநறுவையில் இருந்து அரசாண்ட முதலாம் பராக்கிரமபாகு அபயகிரி தாகபத்தின் பல பாகங்களையும் புனருத்தாரணம் செய்து புதுக்குவித்தான் எனச் சரித்திரம் சான்று பகருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரட்டைக்குளம் அல்லது கூட்டம் பொக்குண

இவ்விரட்டைக் குளங்கள் அபயகிரி விகாரைக்கு அண்மையில் உள்ளன. ஆதிகாலத்தில் புத்த குருமார் குளிப்பதற்குக் குளங்கள் அமைத்துக் கொடுப்பது வழக்கம். இவ்விரட்டைக் குளங்கள் சிங்கள சிற்பமுறையைத் தழுவி அமைக்கப்பட்டது. படிக்கட்டுகள், தூண்கள் வெகு அழகாய்ப் பயபக்தியை உண்டாக்கக் கூடிய முறையில் அமைந்துள்ளன. இக்குளங்களுக்கு 22 அடி நீளக் குழாய் மூலம் நீர் கொண்டு வரப்பட்டதாக அறியக்கிடக்கிறது.

இக்குளங்களுக்குச் சற்றுத் தூரத்திலே தெருவின் ஓரத்தில் இரும்புக்கம்பிகளாற் சுற்றி அடைக்கப்பட்ட ஒரு இடத்தில் தியான முத்திரை நிலையில் உள்ள ஒரு புத்தரின் விக்கிரகம் உண்டு. இச்சிலையிலும் சிங்கள சிற்ப முறையை நன்கு தெளிவாகக் காண முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இராச மாளிகை

இந்த அரச மாளிகை அபயகிரி தாகபத்துக்குச் சற்றுத் தூரத்தில் உண்டு. இங்கேதான் மிகவும் சிறந்ததெனக் கருதப்படும் **சந்திர வட்டக்கல்** இருக்கிறது. பிரதம புத்தகுருவின் ஆச்சிரம அறை முன்றிலின் இறுதிப்படி போல இச்சந்திர வட்டக்கல் அமைந்துளது. அது அரை வட்ட வடிவமானது. அதில் நான்கு விலங்குகளின் — அதாவது சிங்கம், எருது, யானை, குதிரை ஆகிய நான்கின் — உருவங்கள் இதழ்களுக் கிடையில் கொத்தப்பட்டிருப்பது அழகாக இருக்கிறது. இறுதிக் கோட்டினுள் அன்னத்தின் உருவங்கள் கொத்தப்பட்டிருக்கின்றன. கற்கொத்து வேலையின் மென்மையும் நுண்மையும் இன்னும் அழியாது புதிதுபோல் தோற்றம் அளித்தல் வியக்கத் தக்கதே. ஒரு மேலைத்தேயக் கலைஞன் உவின்சன் சந்திர வட்டக் கல்லில் காணப்படும் நான்கு உருவங்களும் நான்கு ஆச்சிரமங்களையும் குறிக்கும் என்று கூறிப்போந்தார். வேறு சிலர் அவை நான்கும் நான்கு திசைகளைக் குறிக்கும் என்பர். அவ்வாறின்றி அந்நான்கு விலங்குகளும் நமது இலக்கியங்களுட் கூறப்படுவன போன்று ஒவ்வொரு விலங்கும் ஒவ்வொரு விசேஷ குணத்தையும் நிலையையும் குறிக்கும் எனவும் கூறுவர். அவர்கள் அன்னம் பரிசுத்த நிலையாகிய பரிநிருவாண நிலையைக் குறிக்கிறதென்றுங் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சந்திரவட்டக் கல்லிற் காணப்படும் ஐந்து சின்னங்களும் பஞ்சசீலம், பஞ்சகிருத்தியம் என்ற முறையில் இலௌகீகத்திலும் ஆத்மார்த்தத்திலும் அநேக முறையில் அர்த்தஞ் செய்து கொள்ள இடமுண்டு.

---

## ரத்நபிராசாதய

இது அபயகிரி விஹாரையைச் சார்ந்த இடத்தில் அதற்கு அண்மையில் அமைந்திருக்கிறது. கனிஷ்ட தீசனாற் கட்டப்பட்டது.

---

## காவலன் சிலை


இப்பகுதியிற் பெரிய கட்டிடம் ஒன்றிருந்ததற்குச் சான்றாகப் பெரிய தனித் தனிக் கற்றூண்கள் வீதியின் மருங்கிற் காணலாம். அங்கு சந்திர வட்டக்கல் ஒன்றுண்டு. அதற்குப் பக்கத்தில் வாயிற் காவலன் சிலை, மகரதோரணம் போன்ற அழகிய சிற்ப வேலைகள் அடங்கிய சிலைகளைக் காணலாம். இக்கட்டிடம் பிரதம புத்த பிக்குவின் தலைமைக் காரியாலயமாய் இருந்திருக்கலாம் என்று சில ஆராய்ச்சியாளர் கூறுவர்.

---

## உணவுத் தொட்டி

பிரதம புத்த பிக்குவின் வாசத்தலத்துக்கு அருகாமையில் மற்றும் பல்வேறு தரத்தில் உள்ள புத்தபிக்குகளின் வாசத்தலங்கள் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவ்விடத்துக் காணப்படும் சிலாசாசனங்கள் பௌத்த ஆச்சிரம விதிகளைப் பற்றியும், பிக்குகள் கடைப்பிடிக்க வேண்டியனவற்றைப் பற்றியும், விரிவாக எடுத்துக் கூறுகின்றன. பித்த பிக்குகள் வசித்த பகுதிகளில் தான் இவ்வாறான உணவுத் தொட்டிகள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புத்த துறவிகள் உட்கார்ந்திருந்து சிறுநீர் கழிக்கும் ஆசனக்கல் அல்லது பாதபீடம்

## லங்காராம தாகபம்

இது வலகம் பாகுவினுற் கட்டுவிக்கப்பட்ட தெனக் கூறப்படுகிறது. ஆனால் அதற்குச் சரித்திரத்திற் சான்றுகள் கிடையா. முதலாம் பராக்கிரம பாகுவினுல் இது திருத்தப்பட்டது. இது அநுராதபுரத்தில் உள்ள எட்டுப் பிரதானமான தாகபங்களுள் ஒன்ருகும். தவிரவும் இது வட்ட வடிவமாய் அமைந்துள்ள "வட்ட தாகே" எனப்படும் வகையைச் சார்ந்த தாகபமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மேலை மடங்களுள் ஒன்று

நகரின் மேற்குப் பகுதியில் பல மடங்கள் உண்டு. அவற்றுக்கு மேலைமடங்கள் எனப் பெயர். இப் பகுதியில் அநேக கட்டிடங்கள் தொகுதி தொகுதியாகக் காணப்படுகின்றன. இவை தபோவனமும் ஆச்சிரமங்களுமாய் இருந்தன. இவ்வாச்சிரமங்களில் வாழ்ந்த பிக்குகள் மிக எளிய வாழ்க்கையை உடையவர்களாய் இருந்தார்கள் என்றும், மயானத்துக்கு அண்மையில் அவர்கள் தம் வாசத்தலங்களை அமைத்ததற்குக் காரணம் அவர்கள் பிரிவின் கடுமையான அனுஷ்டான விதிகளேயாம் என்று கூறப்படுகின்றது.

கட்டிடத்து அதிக கொத்து வேலைப்பாடுகள் ஒன்றுங் காணக்கிடையா. ஆனால் அங்கு காணப்படும் மலசல விமோசன ஆசனக்கற்கள் மிக அலங்கார வேலைப்பாடுகள் உடையனவாகக் காணப்படுகின்றன. இஃது ஒரு சமயம் அப்பகுதித் தலைமைக் குருபீடத்தின் கக்கூஸ் ஆசனக்கற்களாக இருக்கலாம். அல்லது பகட்டான கொத்து வேலையின் பயனின்மையை உணர்த்துவதற்கு இவ்விதமாகச் செய்யப்பட்டது எனக் கூறுவாரும் உளர்.

முன்பு மேலைமடங்கள் அரசனின் பிரதானிகள் இருப்பிடமாகக் கருதப்பட்டு வந்தன. ஆனால் அவற்றின் அமைப்பும், கிடைத்த சான்றுகளும், அவை ஆச்சிரமங்கள், யோகசாதனை சாலைகள் பிக்குகள் வாசத்தலங்கள் என நிரூபித்துவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மடங்கள் இப்பொழுது வசதிக்காக A, B, C, E, F, H, & I என்று குறிக்கப்பட்டுள்ளன.

அநுராதபுரத்தின் வடபகுதியில் இன்னும் பல தாகபங்கள் — கிரிபத் விகாரை, தொலுவில ஆச்சிரமம் போன்றவை ஆராயப்பட்டு வருகின்றன. இவற்றைவிட இன்னும் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப் படாதவை அநேகம் அகநகரிலும் புறநகரிலும் உண்டு. அவை காலக்கிரமத்தில் அறியப்படலாம்.

---

# ஜேதவன தாகபம்

ஜேதவன தாகபம் மின்னேரியாக்குளம் கட்டிய மகாசேனனுல் (கி. பி. 274 — 302) கட்டுவிக்கப்பட்டது. இலங்கையில் உள்ள தாகபங்கள் எல்லாவற்றிலும் மிகவும் பெரியது. இதன உயரம் 400 அடி. இத்தாகபம் மூன்று விதமான புத்தமதக் கொள்கைகளுக்கு மூலபீடமாக விளங்கியது. இங்குள்ள சிற்ப வேலைகளுட் சில சாஞ்சியில் உள்ள தாதுகோபத்தின் சிற்பமுறையை ஒத்திருப்பதை அவதானிக்கலாம்.

---

# நுவரவீவாக் குளம்

நுவரவீவாக் குளம் அநுராதபுரத்துக்குக் கீழ்த்திசையில் உள்ளது. கி. மு. முதலாம் நூற்றுண்டில் வட்டகாமினி என்னும் அரசனுல் கட்டுவிக்கப்பட்டதென்பர். அதன் நீளம் 4 மைல் 1100 அடி. விஸ்தீரணம் 2240 ஏக்கர்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஹிந்தலை

புத்த சமயிகளின் புனிதமான புண்ணியத் தலங்களுள் மிகிந்தலையும் ஒன்று. மிகிந்தலை அநுராதபுரத்துக்குக் கிழக்கு திசையில் எட்டு மைல் தூரத்தில் உள்ளது.

தேவநம்பிய தீசன் (கி. மு. 247 – 207) இலங்கையை அரசாண்ட காலத்திலே இந்தியாவில் அசோகச் சக்கரவர்த்தி அரசாண்டார். அவர் இலங்கையிலும் புத்த சமயத்தைப் பரப்ப விரும்பித் தன் மைந்தனும் இராசபிக்குவுமான மகிந்தனை இலங்கைக்கு அனுப்பி வைத்தார். மகிந்தன் இலங்கையில் இறங்கிய இடமே மிகிந்தலைக் குன்றாகும். இங்குதான் புத்தரின் தந்ததாது ஆகிய புனித சேஷங்கள் முதன் முதல் கொண்டு வந்த பொழுது வைத்துப் பூசிக்கப்பட்டுப் பின் இலங்கையின் பல்வேறு பாகங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டதெனக் கூறப்படுகிறது.

மிகிந்தலையில் தான் தேவநம்பிய தீசன் மகிந்தனைச் சந்தித்ததும், அவன் போதனையை ஏற்றுப் புத்த மதத்தைத் தழுவியதுமாகும். இவர்கள் சந்தித்த இடத்தில் புத்த பிக்குகளுக்கு ஒரு மடாலயம் கட்டுவிக்கப் பட்டது.

தேவநம்பிய தீசன் மிகிந்தலைக்கு மான் வேட்டை ஆடத் தன் பரிவாரங்களோடு சென்றான். அப்பொழுது ஆண்டவன் மான் வேடம் தாங்கிப் பரிபக்குவம் அடைந்த தீசனை மகிந்தன் இருக்கும் இடத்துக்கு இட்டுச்சென்று மறைய தீசன் மகிந்தனைச் சந்திந்தான். இவ்வாறு இவர்கள் சந்தித்த இடம் மிகிந்தலையின் வட பகுதியில் உண்டு. அதற்கு அண்மையில் தான் "அம்பத் தலதாகப" (=மாமரத்தலம்) இருக்கிறது.

தேவநம்பிய தீசன் புத்த சமயத்தைத் தழுவுவதற்குப் பரிபக்குவம் அடைந்திருக்கிறானா? என்பதை அறிய மகிந்தன் சில வினாக்களை வினவியதாகவும், அவை எல்லாவற்றுக்கும் தீசன் மிகவும் வினயமாகவும், பொருத்தமாகவும், தருக்க ரீதியில் விடைபகர்ந்ததனால் மகிந்தன் மிகவும் மனமகிழ்ந்து அவனுக்குப் புத்தமதக் கொள்கைகளைப் போதித்தான் என்றும் ஒரு கதை உண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் தீசன் மிகிந்தலை மலையிலே தாகபத்தைச் சுற்றி ஒரு யோசனை தூரம் விட்டு ஒரு வீதி உண்டாக்கியும், நாற்றிசையிலும் வாயில்கள் வைத்தும், வீதி தோறும் விளக்குகள் ஏற்றியும், குடியேற்றியும் வைத்தான். மேலும் விழா நாட்களில் வீதி தோறும் இன்னிசை பாட, முழவு முழங்க, பல்லியம் ஆர்ப்ப, நிருத்தம் சங்கீதம் நிகழ, வழிவகைகள் செய்து வைத்தான்.

பிற்காலத்து வாழ்ந்த கனிஷ்ட தீசன் (கி. பி. 254 – 267); தாதுசேனன் (கி. பி. 463 – 479) முதலிய அரசர்கள்மேற்கூறிய அம்பத்தலத் தாகபத்தைத் திருத்திப் புனருத்தாரணஞ் செய்வித்தார்கள்.

ஸ்ரீ மேகவர்ணன் மகிந்தனைப் போல் ஒரு பொன் விக்கிரகஞ் செய்வித்து மிகிந்தலை — அம்பத்தலை தாகபத்தில் இருந்து தலைநகராகிய அநுரதபுரத்துக்கு விழா எடுப்பித்தான் என அறியக் கிடக்கிறது.


---

# வைத்தியசாலைச் சதுக்கமும் எண்ணெய்க் கல்லும்

மிகிந்தலையைக் கிட்டியதும் வடகீழ்த் திசையில் ஒரு சதுக்கம் அல்லது கோட்டம் இருப்பதைக் காணலாம். இங்கு கிலமடைந்த பல கட்டிடங்களைக் காணலாம். அங்கு 7 அடி நீளம், 2 அடி 6 அங்குல அகலம், 2 அடி ஆழமானதும் ஒரு மனித உருவ அமைப்பில் செதுக்கப்பட்டதுமான ஒரு கல் உண்டு. இதை மருந்துக் கல் அல்லது எண்ணெய்க் கல் என்று கூறுவர். அப்பகுதியில் உள்ள சிலா சாசனத்தில் இருந்து இப் பகுதி ஒரு வைத்தியசாலையாய் இருந்திருக்க வேண்டும் என்று அறியக் கிடக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமச் சாலை



உணவுத் தொட்டி

மிகுந்தலை அடிவாரத்திலே இந்தத் தருமசாலை காணப்படுகின்றது. இது 114 அடி நீளமும் முற்பக்கத்து 77½ அடி அகலமும் உடையது. இதன் வடதிசையில் இன்னும் ஒரு சிதைந்த கட்டிடத்தைக் காணலாம். அநுராதபுரத்திற் காணப்படும் உணவுத் தொட்டி இங்கும் உண்டு. அதன் உள்நீளம் 37 அடி 3 அங்குலம். அகலம் 2 அடி. ஆழம் 2½ அடி ஆகும். மேலும் இந்தக் கட்டிடத்துக்குத் தண்ணீர் கொண்டு வந்த வழிமுறைகளை இன்றுங் காணலாம.

---

# மிகிந்தலைப் படிக்கட்டுகள்

இங்குள்ள படிக்கட்டுகள் மிகவும் பழமையானவை. மலையின் உச்சிக்குச் செல்லும்வரை சுமார் 1800 படிகள்வரை உண்டு. முதற் பகுதி படிக்கட்டுகளுக்கப்பால் "கண்டக சைத்திய" என்னுங் கோயில் உண்டு. இதற்கு மேலே செல்லும் போது ஆச்சிரமத்தின் ஆகூழ்ச்சாலையைக் காணலாம். பக்கத்தில் செல்லும் படிக்கட்டுகளின் வழியே சென்றால் "களுதிய பொக்குண" என வழங்கும் கருநீர்த் தடாகத்தை அடையலாம்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டக சைத்திய

இது மிகவும் பழைய தாகபம். இதன் மேற்பகுதி வீழ்ந்து விட்டது. இது "கண்டக சைத்திய" என்று பிரஹ்மி எழுத்துக் களாலான ஒரு சாசனம் கூறுகின்றது. மேலும் மகாவம்சமும் கண் டக சைத்தியத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆனால் கண்டக சைத்திய யாரால் எக்காலத்துக் கட்டப்பட்டது என்பது ஆராய்ந்து அறிந்தபாடில்லை. இங்கு காணப்படும் "வாஹல்கட" = பலிபீடம் அநுராதபுரத்தில் உள்ளனவற்றைப் போன்றுள்ளது. அலங்காரச் சிற்பங்கள் செதுக்கப்பட்ட கொத்து வேலை, பின்னல் போன்ற வேலைப்பாடுடையதாய்க் காணப்படுகின்றது. கொத்துவேலைகளில் கணங்களின் உருவங்கள் இன்னிசை ஒலிக்கும் முறையிலும், இன்னும் பல்வேறு முறையில் உள்ள உயிர் ஓவியங்களையும் காண லாம். இவற்றிலிருந்து யாமறியக் கூடியது இன்னிசை முழங்கு தல், பூககணம் புடைசூழ விழா வெடுத்தல் போன்றவை இந்து சமயச் செல்வாக்கையும், இந்திய சிற்ப முறையைத் தழுவி அமைந்த தையும் குறிக்கும்.

இங்குள்ள சுதையாலான பல்வேறு சிற்பங்களும் சிங்களக் கலை முறையைக் குறிக்கிற தென்றும், சாஞ்சி, அமராவதியில் உள்ள சிற்ப முறையைப் போன்று இருக்கிற தென்றுங் கலாநிதி பரண விதானே கூறுவர்.

கண்டக சைத்தியத்தின் தளத்தின் சுற்றளவு 425 அடி. அழிந்த நிலையில உள்ளபடி அதன் உயரம் 40 அடி.

---

## 4-ம் மகிந்தனின் சிலாசாசனம்

போசனசாலை அல்லது தருமசாலைக்கு அண்மையில் பழுதடைந்த ஒரு விஹாரை உண்டு. அங்கு சிலாசாசனம் உண்டு. அதில் கோவில் பற்றிய விதிகளும் உத்தியோகத்தரின் உரிமைகளும் கடமைகளும் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதற்கு அண்மையில் மகிந்தன் வந் திறங்கிய குன்று உண்டு.

---




224
R.4
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பஸ்தல தாகபம்

தேவநம்பிய தீசன் மகிந்தனைச் சந்தித்த இடத்திலே அதை நினைவூட்டும் முறையில் இத் தாகபம் அமைந்துள்ளது. தீசனின் உருவம் போன்றதொரு பழைய விக்கிரகம் ஒன்று இங்கு காணப் படுகிறது. கி. மு. 259-ல் உத்தியன் என்னும் அரசனால் இது கட்டப்பட்ட தென்பர். கனிட்ட தீசன் (165 – 193) கோவிலைக் கட்டுவித்தான். இங்கு 12 அடி உயரம் உள்ள கற்றூண்கள் உண்டு.


குலராசனின் அஷ்டாங்க மாணிக்கம் இங்கு சேமித்து வைக்கப்பட்டிருப்பதாகச் சிலர் கூறுவர்.




# மகிந்தன் வந்திறங்கிய குன்று

மகிந்தன் முதன் முதலில் வந்திறங்கிய இடம் மிகிந்தலைக் குன்றின் உச்சியாகும். மகிந்தன் இலங்கையில் செய்த முதல் பிரசங்கத்தைக் கேட்பதற்குச் சுமனசாமனரயன் வந்து தங்கியிருந்த இடம் இக்குன்றின் உச்சியாகும். இக்குன்றின் உச்சியிலிருந்து பார்க்கும் போது சுற்றுப்புறம் வெகு அழகாகக் காட்சி அளிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகிந்தன் படுக்கை

மேலே கூறப்பட்ட அம்பஸ்தல நாகபத்துக்கு வட புறமாகக் கீழ் நோக்கிச் சென்றால் ஒரு பெரிய கற்பாரின்கீழ் மகிந்தன் படுக்கை எனக் கூறப்படும் ஒரு அழுத்தமான கற்படுக்கையைக் காணலாம். இப் படுக்கை கற்பாறையின் அந்தத்திற் குடையப்பட்டுள்ளது. அதில் நின்று பார்க்கும் பொழுது அக்குன்றைச் சுற்றி உள்ள கிராமங்கள் கண்ணுக்கெட்டிய வரை மிகவும் அழகிய காட்சியாய் இருக்கும். கற்பாரின் ஒரு பக்கத்திற் பயங்கர பாதாளம். அப் பக்கத்துக்கு அரசாங்கம் இரும்புக் கம்பியால் பாதுகாப்புச் செய் திருக்கிறது.


---

# கருநீர்த்தடாகம் அல்லது களுதியபொக்குண

கருநீர்த்தடாகம் வனமத்தியில் மிக அழகுவாய்ந்த ஒரு இடத் தில் அமைந்துள்ளது. கவர்ச்சியான முறையில் இரு மருங்கும் மரங்கள் தம் தலை தாழ்த்தி வரவேற்கும் முறையில் வளர்ந்துள்ளன. இத் தடாகத்துக்கு அருகில் ஒரு ஆச்சிரமம் இருக்கிறது. அதன் அமைப்பு முறை தனிச்சிறப்பு வாய்ந்ததாய் இருக்கிறதையும் நாம் அவதானிக்கலாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருநீர்த் தடாகத்தின் பக்கத்தே (குளித்த பின்) உடை மாற்றுவதற்கு மண்டபம் ஒன்று கருங்கல்லினால் அமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் இக்கருநீர்த் தடாகம் குளிப்பதற்குப் பாவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இங்குள்ள மண்டபம் அநுராதபுரத்து அரச நந்தவனத்தில் உள்ள குளிக்கும் அறைகளின் அமைப்பை ஒத்ததாய் இருக்கிறது. இக்குளத்தின் படிக்கட்டுகள் சிதைந்த நிலையிற் காணப்படுகின்றன.




## நாகக்குளம் அல்லது நாகபொக்குண

நாகக்குளம் மிகிந்தலை மலை உச்சியில் ஒரு புறத்தே உள்ளது. இக்குளத்தின் ஒரு பக்கச் சுவரிலே நாகத்தின் தலைகள் வெகு அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. இதனாலேயே இக்குளத்துக்கு நாகக்குளம் என்று பெயர் வந்திருக்க வேண்டும். இது புத்த பிக்குகள் நீராடுவதற்காக அமைக்கப்பட்டது. துணிகள் துவைக்கும் அழுக்கு நீர் பாறை வழியாக வழிந்தோடச் சுமார் 5 அங்குல அகலமான சிறிய கால்வாய் வெட்டிவிடப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

அங்கு ஓரிடத்தில் பல்லாங்குளி அமைக்கப்பட்டிருப்பதையும் காணலாம். இது 5 × 5 அறைகளைக் கொண்டதாய்ச் சற்சதுரமாக வெட்டப்பட்டுள்ளது. பக்கத்தில் பாத்திர வடிவத்தில் கல்லில் குடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பட்டிருக்கிறது. ஒருவேளை இது பண்டைக் காய்கள் வைக்க உபயோகமாய் இருந்திருக்கலாம்.

முதலாம் அக்கபோதி (கி. பி. 564 – 598) இக் குளத்தையும் மிகிந்தலைக் குன்றின் அடிவாரத்தில் உள்ள வயல்களுக்கு நீர்ப் பாய்ச்சும் மிகுந்தலைக் குளத்தையும் கட்டுவித்தான் என்றுங் கூறப்படுகிறது.

## சிங்கபொக்குண

நான்கு மூலைகளிலும் சிங்க உருவம் உண்டு. சிங்கத்தின் வாயில் இருந்து நீர் வெளிவருமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. நாகக்குளத்தில் இருந்தே இதற்குத் தண்ணீர் வந்திருக்கிறது. அவ்வாறு நீர்வந்த வழிகள் இன்றுங் காணக்கூடியதாக இருக்கிறது. இதன் அமைப்பு முறை மிகவும் வியக்கத்தக்க தொன்றாகும்.

## கற்குகைகள்

மிகிந்தலை மலையில் ஒரு பக்கத்தில் உள்ள குன்றுகளில் அநேக கற்குகைகளைக் காணலாம். இவை மலை அடிவாரத்தில் இருந்து சுமார் 100 அடி உயரத்தில் உள்ளன. இவை புத்த பிக்குகள் அமைதியாய் இருந்து தவஞ்செய்ய ஏற்ற இடம். அநேக புத்த பிக்குகள் இக்குகைகளில் ஏகாக்கிர சித்தராய் எழுந்தருளி இருந்து தவஞ்செய்தனர் என்பதற்கு இப்பகுதியிற் காணப்படும் நாகர எழுத்துக்களில் அமைந்த சிலாசாசனங்கள் சான்று பகருகின்றன. அச்சாசனங்கள் 9-ம் நூற்றாண்டு காலத்தவை என்று அநுமானிக்கப்படுகின்றன.

இவ்விடத்தில் மகாயான புத்தமதக் கொள்கை நன்கு பரவி இருந்ததென்பதற்கு இராசகிரிகந்த என்னுங் குன்றிற் காணப்படுங் குகைகளே சான்றாகும் எனச் சில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடசமவெளி

இலங்கையில் உள்ள சமவெளிகள் எல்லாவற்றிலும் மிகவும் பெரியது வடசமவெளியாகும். இதன் தெற்கில் தெதுறு ஓயா, மகாவலிகங்கை, மாத்தளைக் குன்றுகளும், ஏனைய பகுதிகள் கடலாலும் சூழப்பட்டுள்ளது. கலா ஓயாவில் அணை கட்டப்பட்டுக் கலாவெவாக் குளம் அமைக்கப்பட்டது. மேலும் இப்பகுதியில் மின்னேரியா, பராக்கிரம சமுத்திரம் போன்ற வாவிகள் இருக்கின்றன. இப்பொழுது இப்பகுதியில் பல குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சி அடைந்து வருகின்றன.

---

## கலாவெவாக் குளம்

அநுராதபுரத்திலிருந்து வரும் பாதையின் இருமருங்கிலும் பற்றைக் காடுகளும, புற்றரைகளும், இடையிடை நெற் கழனிகளும் காணலாம். துட்ட கைமுனுவும் எல்லாளனும் சண்டைசெய்த நகரமாகிய விஜிதபுரத்தையும் பார்க்கலாம். அதற்கு முன்பே மரதன் கடவல, கெக்கிருவ என்னும் இடங்களைத் தாண்டிச் செல்லவேண்டும்.

கலாவெவாக் குளம் கி. பி. 5-ம் நூற்றுண்டில் தாதுசேனன் என்னும் அரசனல் வெட்டிக் கட்டுவிக்கப்பட்டது. விக்ரோறியா மகா இராணி காலத்தில் புதுப்பிக்கப்பட்டது.


| | |
|---|---|
| இக்குளத்து நீர் வரும் இடப்பரப்பு | 325 ச. மைல். |
| குளக்கட்டின் நீளம் | 3¾ மைல். |
| அணைக்கட்டின் உயரம் | 60·2 அடி. |
| கடல் மட்டத்திலிருந்து உயரம் | 470 அடி. |
| தாய்க் கால்வாயின் நீளம் | 54 மைல். |

கலாவெவாக் குளத்தினுல் கலாவெவாக் கிராமம் விளங்குகின்றது. ஐரோப்பியரும் ஆச்சரியப்படத்தக்க முறையில் இக்குளம் கட்டப்பட்டிருக்கிறது. இதன் அணைக்கட்டு சுமார் 60 அடி உயர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் மூன்று மைல் நீளமும் உடையது. அணைக்கட்டில் மோட்டார் பஸ் வண்டியிற் பிரயாணஞ் செய்ய முடியும். இது பளலுவாவி போன்றவற்றுடன் இணைக்கப்பட்டிருத்தலால் ஒருபொழுதும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை.

---



# அவுக்கன விஹாரை

அவுக்கன விகாரை கலாவெவாக் குளத்திலிருந்து மேற்குத் திசையில் இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. இங்குதான் இலங்கையில் மிகப் பெரியதான புத்தபெருமானின் சிலை செங்குத்தான ஒரு மலைப் பாறையிலே ஒரே கல்லில் அங்க இலட்சணங்கள் யாவும் அணுவளவும் பிசகாது செதுக்கப்பட்டிருக்கிறது. இச் சிலை சுமார் 46 அடி உயரம் உடையது. இதன் காலம் தெளிவாக அறிந்தபாடில்லை. ஆனால் தாதுசேனனால் செய்விக்கப்பட்டதெனச் சிலர் கூறுவர். முற்காலத்தில் கட்டிடமும் மதிலும் இருந்ததென்றும் அறியக் கிடக்கிறது. மேலும் முற்காலத்தில் இதன் பெயர் "காலயல" என்று இருந்ததென இதிகாசம் கூறுகின்றது.

இதன் சிற்பமுறை மதுரைச் சிற்பமுறையைப் பிரதிபலிக்கிறதென்றும் அங்க அமைப்பு, உடை அமைப்பில் உள்ள நுண்ணிய வேலைப்பாடுகள் சிற்பியின் கைத்திறமையையும், சிற்ப சாத்திரம் அடைந்திருந்த முன்னேற்றத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறதென்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜிதபுரம்

துட்டகைமுனு தமிழருடன் சண்டை செய்து வெற்றி பெற்ற இடம் விஜிதபுரம் என்றும், அதை ஞாபகப்படுத்தும் முகமாக இங்கு ஒரு தாகபம் கட்டப்பட்டதென்றும் கூறப்படுகிறது. இது கலாவெவாப் புகையிரத நிலயத்துக்கு அண்மையில் உண்டு.

---

# ரிட்டிகல மலை

இது மரதன் கடவெல — ஹபறன பாதையில் உள்ளது. 2514 அடி உயரமானது. இம் மலையில் பல மூலிகை வகைகள் இருக்கின்றன என்று கூறுவர்.

---

# ஹபறனை

திருக்கோணமலை — தம்புல்ல பாதையில் உள்ள சந்தியாகும், ஹபறனைச் சந்தி சென்று பொல்லநறுவைக்குச் செல்லுதல் வேண்டும். மேலும் ஹபறனை உஷ்ண வலயப் பிரதேசத்தின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது.

---

# மின்னேரியா

ஹபறனையிலிருந்து கமங்களுக்கூடாகப் பிரயாணஞ் செய்து 13 மைலுக்கப்பால் மின்னேரியாவைக் காணலாம். இக் குளத்தை மகாசேனன் 4-ம் நூற்றாண்டில் கட்டுவித்தான். இதனால் இலங்கையின் பொருளாதார நிலை முன்னேற்றம் அடைந்தது. இதனால் 45600 ஏக்கர் பூமிக்கு நீர் பாய்ச்சலாம். அம்பன் கங்கையில் இருந்து இதற்கு நீர், வாய்க்கால் மூலம் வருகிறது. மின்னேரிப் பகுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் கிராமங்களுக்கு இது மத்தியஸ்தானமாய் விளங்குகிறது. இங்கு பல்வேறு விதமான பட்சி சாலங்களையும், மிருகங்களையும் காணலாம். மின்னேரிக் குளத்துக்கு அருகாமையில் ஒரு தேவா லயம் உண்டு. அங்கு மகாசேனனின் சிலை ஒன்று உண்டென்பர்.

---

## ஹிங்குருகொடை

இங்கு அரசினர் மாதிரித் தோட்டம் ஒன்று உண்டு.

---

## மதிரிகிரிய

மதிரிகிரிய விஹாரை ஹிங்குற கொடையில் இருந்து சுமார் 10 மைல் தூரத்தில் உள்ளது. ஆதியில் மண்டலகிரி விஹாரை என்பது காலக்கிரமத்தில் மதிலிகிரி விஹாரை என்றுப் பின் மதிரி கிரிய விஹாரை ஆயதென்பர். இங்கு ஒரு வட்டதாகே உண்டு. அதன் நான்கு திசைகளிலும் அழகிய புத்தசிலைகள் இருக்கின்றன.

இங்கு காணப்படும் 10-ம் நூற்றுண்டுத் தூணென்றில் உள்ள சாசனம் 5-ம் காசியப்பனின் மதிரிகிரியின் மானியத்தைப் பற்றிக் கூறுகின்றது. மேற்படி விஹாரையின் பக்கத்தில் ஒரு வைத்திய சாலை இருந்ததாக அறியக்கிடக்கிறது. முதலாம் விஜயபாகு (கி. பி. 1055 – 1110) சோழர் ஆட்சியினுல் கவனிப்பாரற்றுக்கிடந்த மதிரி கிரியைத் திருத்திப் புதுக்குவித்தான் என மகாவம்சம் கூறுகிறது. இவ்விஹாரை பற்றிய ஆராய்ச்சி இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இங்குள்ள சிற்பமுறை அசோக காலச் சிற்ப முறையைப் போன்றிருக்கிற தென்பர்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொல்லநறுவை

அநுரதபுரம் இலங்கையின் தலைநகராகவும், புத்த சமயத்தின் இருப்பிடமாகவும், 10-ம் நூற்றாண்டுவரை விளங்கிச் சோழர் படையெடுப்பின் பின் பொல்லநறுவை தலைநகராக்கப் பட்டது. பொல்லநறுவை இராசதானியாக இருந்த காலத்தைச் சரித்திர ஆசிரியர்கள் பொல்லநறுவைக் காலம் என வழங்குவர்.

## முதலாம் விஜயபாகு [கி. பி. 1056 - 1111]

சோழரை முறியடித்து அநுரதபுரத்தில் முடிசூடினும் முதலாம் விஜயபாகு பொல்லநறுவையையே தன் இராசதானியாகக் கொண்டான். பொல்லநறுவை 13-ம் நூற்றாண்டின் மத்தியகாலம் வரை தலைநகராய் இருந்து வந்தது. இன்று நாம் காணக்கூடியதாய் உள்ள சரித்திரச் சின்னங்களாகிய கோட்டை, கொத்தளங்கள், குளங்கள் முதலியன வெல்லாம் (12-ம் நூற்றாண்டு) இக்காலத்தனவே. அவை விசேஷமாக பராக்கிரமபாகு (கி. பி. 1153–1186); நிசங்கமல்லன் (கி. பி. 1187 – 1196) ஆகிய இவ்விரு அரசர்கள் காலத்திற் கட்டப் பட்டனவாம்.

**மகாபராக்கிரமபாகு,** 33 ஆண்டுகள் அரசாண்டான். இவன் முதலாம் விஜயபாகுவின் பேரப்பிள்ளை. பல அரசர்களால் ஆளப் பட்டுப் பல்வேறு பிரிவுகளாய் இருந்த இலங்கையை ஓர் ஆட்சிக்குக் கீழ்க் கொண்டுவந்தான். பர்மா, தென்னிந்தியாவுக்குப் படையெடுத்துச் சென்று பர்மாவைக் கைப்பற்றினன். தென்னிந்தியாவில் உள்ள பல அரசருங் கப்பஞ் செலுத்தச் செய்தான்.

சமய சம்பந்தமான பல கட்டிடங்களையும், அரச மாளிகைகளையும், கோட்டை கொத்தளங்கள், அரண்கள், அகழிகள், நந்தவனங்கள் முதலியவற்றையுங் கட்டுவித்தான்.

**நிசங்கமல்லன்,** மகாபராக்கிரமபாகுவுக்குப் பின் அரசு கட்டில் ஏறினன். அவன் 9 ஆண்டுகளே அரசாண்டான். ஆனால் சரித்திரச் சான்றான அநேக கட்டிடங்கள் இவன் கட்டுவித்ததாகக் கூறப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இவ்விரு அரசர்கள் காலமே பொல்லநறுவையில் சிற்பமும் மற்றுங் கலைகளும் வளர்ச்சி பெற்றோங்கிய காலம். இக்காலத்திலேயே சோழ, பாண்டிய கலைச் செல்வாக்கு இலங்கையில் அதிகமாகப் பரவியது.

கி. பி. 1235-ம் ஆண்டில் மாகன் என்னும் கலிங்க தேசத்து அரசன் இந்தியாவின் நின்றும் இலங்கை போந்து பொல்லநறுவை யைக் கைப்பற்றினன். அங்கிருந்து ஆட்சி செலுத்திய சிங்கள மன்னர்கள் யாப்பாகுவ, தம்பதெனிய என்னும் இடங்களைத் தமது அரண்களாகத் தலைநகராக்கினர். விவசாய இலங்கையின் செல்வங்களாகிய குளங்கள் கவனிப்பாரின்றி அழிந்தன.

நான்காம் விஜயபாகு (கி. பி. 1267–1270) வும், மூன்றும் பராக்கிரமபாகுவும் (கி. பி. 1302 – 1310) பொல்லநறுவை இராசதானியைப் பழைய நிலைக்குக் கொண்டுவந்து, அதன் மங்கிய புகழைப் புதுப்பிக்க முயற்சி செய்து உழைத்தனர். ஆனால் அவர்கள் முயற்சியின் பலன் தற்காலீக வெற்றியாகவே இருந்தது.

சுருங்கக் கூறின் பொல்லநறுவையிலுள்ள கட்டிடச் சிற்பவேலைகள் அநுராதபுரத்திலுள்ள கட்டிடச் சிற்பவேலைகள் நிருமாண முறைகளிலும் பார்க்க வேறான முறையில் அமைந்தவை. பொல்லநறுவையிலுள்ளவை பெரும்பாலும் தென்னிந்தியச் சிற்ப முறையைத் தழுவியவையாய் இருக்கின்றன. சோழர் நாகரீகம், சிற்பம், கலை, ஓவியம் என்பவற்றின் செல்வாக்கும் தாக்கமும் அதிகமாக இக்காலத்திலே சிங்களவர்களுக் கிடையில் ஏற்பட்டிருக்கிற தென்பது கண்கூடு. பொல்லநறுவைப் புறநகரில் உள்ள புராதனச் சின்னங்களை முதலில் ஆராய்வாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தீவங்கதப் பள்ளி

திவங்கபிலிமகே என்னும் சிங்களப் பதத்தின் பொருள் மூன்று வளைவுகளையுடைய விக்கிரகத்தின் கோயில் என்பதாம்.

திவங்க = மூன்று வளைவுடையங்க முடையது ;
பிலிமகே = விக்கிரக அறை.

இக்கோவில் மூலஸ்தான விக்கிரகத்தில் இருந்தே இதற்கு இப் பெயர் உண்டாயது. இதை ஜேதவன ராமய என்றும், வேலுவன ராமய என்றும் வழங்கியதெனக் கூறுவாரும் உளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவங்கதப்பள்ளி மூலஸ்தான விக்கிரகம்

தீவங்கதப் பள்ளியிலுள்ள மூலஸ்தானத்தில் இருக்கும் புத்த விக்கிரகத்துக்குத தலை இல்லை. முண்டப் பகுதியை இன்று காணலாம். இதற்கு முழங்கால், இடுப்பு, மார்பு ஆகிய மூன்று இடங்களிலுமுள்ள வளைவை அவதானிக்கலாம்.

மேற்படி புத்த விக்கிரகத்தின் தோற்றம் களைத்த நிலையைக் காட்டுவதாகச் சில சிங்கள வழிகாட்டிகள் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் கூற்று உண்மையென நம்புவதற்கில்லை. ஏனெனில் கோவிலில் எழுந்தருளப்படும் விக்கிரகங்கள் சில சாத்திர ரீதிக் கிணங்கவும், ஐதிகத்தைக் குறிக்கும் முறையிலும் அமைக்கப்படுகின்றன.

இவ்விக்கிரக அறை கர்ப்பக்கிரக முறையில் அமைந்துள்ளது. புத்த பெருமான் தாமரை மலரில் எழுந்தருளியிருக்கிறார். தாமரை மலரில் வீற்றிருப்பது ஞானம் பெற்றமையைக் குறிக்கும் எனப் புத்த சமயிகள் கூறுவர்,

உட்புறச் சுவர்களிலே பல சாதகக் கதைகள் சுவரோவியங்களாகப் பல்வேறு அழகிய வர்ணங்களால் வரையப்பட்டுள்ளன. மேற்படி கர்ப்பக்கிரக உட்புறச் சுவர்களிலுள்ள சுவரோவியம் பொல்லநறுவையிலுள்ள லங்காதிலக, தூபராம என்னும் தாகபங்களின் சுவர்களிற் காணக்கூடியதாய் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தீவங்கதப் பள்ளியிற் காணப்படும் ஓவியங்களுட் பெரும்பாலானவை தேவ அதிசயங்களைக் குறிப்பவை. மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகத்துக்குப் போகும் பாவனையில் அமைந்த கதைகள் படிமுறையாகக் கீழிருந்து மேற்செல்லும் முறையிற் தீறப்பட்டிருத்தலையும் அவதானிக்கலாம்.

தீவங்கதப் பள்ளி செங்கல்லாற் கட்டப்பட்ட கட்டிடமாகும். உட்புறச் சுவரைச் சாதகக் கதை ஓவியங்கள் அலங்கரிக்க வெளிப்புறச் சுவரைப் பூதகணங்கள் அலங்கரிக்கின்றன. புறச்சுவரில் பூதகணங்கள் இருத்தல் உள்ளே இருக்கும் திரவியங்களைப் பிறர் அபகரியாமல் இருத்தற் பொருட்டு என்று சில சிங்கள வழிகாட்டிகள் காரணம் கூறுகின்றனர். அக்காரணம் அவ்வளவு பொருத்தமானதன்று என்பது சற்றுச் சிந்திப்போர் அறிவர். பூத கணங்கள் புறச்சுவரை அலங்கரிப்பதற்கு வேறு சாத்திர ரீதியான காரணங்கள் உண்டென்றும், அவை தென்னிந்தியச் சிற்ப முறையிலிருந்து எடுக்கப்பட்டவை என்பதையும் அறிய வேண்டும்.

இவற்றைவிட நாற்புற வெளிச் சுவர்களிலும் இந்து சமயக் கோவில் அமைப்பு முறைபோல் சிவ சின்னங்களுக்குரிய அமைப்பு முறைகள் உண்டு. அவற்றுடன் பரிவார தேவதைகளுக்கு அமைக்கப்படும் சிறு சிறு அறைபோல் அமைப்புகளையும் வெளிப்புறச் சுவர்களிற் காணலாம்.

இவற்றிலிருந்து நாம் அநுமானிக்கக் கூடியது யாதெனில் — கலை, சிற்பம், சம்பந்தமான அநேக விஷயங்களில் தென்னிந்திய இந்துசமயச் செல்வாக்கு அதிகமாகப் பெற்றிருக்கிறது என்பதேயாம்.

தீவங்கதப்பள்ளி வாயிலின் இரு மருங்கிலும் நாகராசன் சிலைகளுண்டு. இவை சற்றுச் சிதைவடைந்து காணப்படுகின்றன. வாயிற் புறத்துள்ள கீழ்ப்படியை யானையும், வெளிச் சுற்றுப்பிரகாரச் சுவரைச் சிங்கம், பூதம், புத்த பெருமான், விஷ்ணுவின் உருவங்கள் அலங்கரிக்கின்றன.


தீவங்கதப் பள்ளியின் வெளி மண்டபத்தின் நீளம் சுமார் 20 அடி, உள் மண்டபம் நீளம் சுமார் 40 அடி. இப்பள்ளிக்கு மேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடியிருந்த அறிகுறிகள் உண்டு. வலப்புறத்துள்ள மேல் மாடிக்குக் கிலமடைந்த நிலையில் 28 படிகள் உண்டு. இங்கு சாய்வாய் அமைந்த அழுந்தமான ஒரு கட்டு உண்டு. அது மேலுலகத்திலிருந்து கீழுலகத்துக்கு இறங்கி வருவதைக் குறிக்கிறதெனக் கூறப்படுகிறது.

இவைகளை இந்தியாவிலுள்ள சீர்காழி என்னும் தலத்தில் உள்ள கோவிலில் உள்ளவற்றுடன் ஒப்பு நோக்கி ஆராயலாம். ஞானசம்பந்தர் ஞானப்பாலுண்ட சீர்காழித் தலத்திலுள்ள கோவிலுக்கும் இத்தீவங்கதப் பள்ளிக்கும் கட்டிட அமைப்பில் சில ஒற்றுமை உண்டு. சீர்காழிக் கோவிலில் மேல் மாடியில் தோணிபப்பர் எழுந்தருளியிருக்கிறார். தவிரவும் அங்கும் மேலிருந்து தேவர்கள் இறங்கிவருவதற்கென அமைக்கப்பட்ட கட்டொன்றுண்டு. அஃதே கருத்துப்பட இங்கும் கூறப்படுவதன்றி அமைப்பும் அவ்வாறே அமைந்துளது. இவை ஆராய்ச்சியாளர் ஒப்பு நோக்கி ஆராய வேண்டிய விஷயங்களாகும்.

---



## தாமரைக் குளம்

இத் தாமரைக் குளம் முதலாம் பராக்கிரம பாகுவால் கட்டுவிக்கப்பட்டதென்பர். இக்குளம் மலர்ந்த தாமரைப்பூ வடிவத்திற் கட்டப்பட்டிருக்கிறது. அதில் எட்டு இதழ்கள் உண்டு. சிற்ப வேலைப்பாடுடையது. ஓர் ஒழுங்கு ரீதி முறையில் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சிகரமான தோற்ற முடையது. இதற்கண்மையில் புத்தபிக்குகளின் ஆச்சிரமம் இருந்ததென்றும், அங்கு வாசஞ் செய்த புத்தபிக்குகளின் நீராடல் வசதிக்காகவே இக்குளம் கட்டப்பட்டதென்றும் அறியக் கிடக்கிறது. இக்குளத்திற்கு நிலத்துக்குள் அமைந்த வாய்க்கால் மூலம் பராக்கிரம சமுத்திரத்தில் இருந்து நீர் வந்ததையும், அவ்வாறே வாய்க்கால் மூலம் நீர் வெளியேறியதையும், நிலத்துக் கூடாகச் சுரங்க வழி போல் வாய்க்கால் அமைந்திருந்ததையும் அடையாளங்களால் நாம் இன்றுங் காணலாம்.

இந்தாமரைக் குளத்துக்கு ஐந்து படிநிரைகள் உண்டு. ஒவ்வொரு படி நிரையிலும் எட்டு இதழ்கள் உண்டு. உட்புறம் கருங்கல்லாலும் வெளிப்புறம் செங்கலலாலும் கட்டப்பட்டது. குளத்தின் மேற்றளத்தின் சுற்றளவு பெரிதாய் இருந்தலால் மேற்படிகளின் கற்கள் பெரிதாயும் உட்செல்லச் செல்லச் சிறுத்தும் செல்கின்றன. மேற்றள வட்டத்தின் விட்டார்த்தம் 24 அடி 9 அங்குலம். படிக் கட்டுகளில் விசேஷ அலங்காரங்களிருப்பதையும் அவதானிக்கலாம். இந்தியச் சிற்பக் கலையின் செல்வாக்கு இத் தாமரைத் தடாகத்தும் காணலாம். சில கற்களில் சம்ஸ்கிருத எழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருப்பதை உற்றுநோக்குவோர் கவனிக்கத் தவறமாட்டார்கள்.

---

## கல் விஹாரை

கல்விஹாரை அதன் பெயருக்கிணங்க ஒரேயொரு பெரிய கற்பாறையிற் செதுக்கிப் பொழியப் பட்டுள்ளது. இதற்கு **உத்தராமம்** என்ற பெயரும் உண்டு. இங்கு மிகவும் பெரிய புத்த விக்கிரகங்களைக் காணலாம். இவை யாவும் ஒரு செங்குத்தான கற்பாறையிற் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள புத்த விக்கிரகங்களில் புத்த சமயத்திலுள்ள சில சூக்குமமான முத்திரைகள் பொறிககப்பட்டிருப்பதைக் காணலாம். தவிரவும் இவை கலை நுணுக்கமும் உடையனவாய்த் திகழ்கின்றன. முதலை வாயிற் சிங்கம் போன்ற சில அலங்கார ரூபங்களை இங்கு காணலாம். இவ் விஹாரையின் அருகாமையில் ஒரு தடாகமும் முற்பக்கத்தில் கட்டிடங்கள் இருந்த அடையாளங்களுடன் உள்ள ஒரு பெரிய கற்பாரும் உண்டு.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தியானத்தில் இருக்கும் புத்தர்

[கல் விஹாரை]

மேலே காணப்படும் புத்த விக்கிரகம் புத்தபெருமான் தியான நிலையில் இருப்பதைக் குறிக்கும் என்பர். இவ்விக்கிரகத்தைச் சுற்றித் தோரண வடிவமாகக் கொத்து வேலை அமைப்புகளுண்டு. தூண்களில் அழகான அலங்காரச் சிற்ப வேலைகள் செறிந்துள்ளதையும் அவதானிக்கலாம். இச் சிற்ப வேலைப்பாடுகள் இந்தியாவிலுள்ள சாஞ்சியில் உள்ள சிற்ப முறையை ஒத்திருக்கிறதென ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். சொரூபங்களுக்கு வெண் சாந்து பூசப்பட்டுப் பூர்த்தியாக்கப்பட்டிருக்கிறது. புத்த விக்கிரகத்துக்குப் பக்கத்தே மும்மூன்று யாளிகளும், மேலே பூதகணங்களும் சூலம் போன்ற அமைப்புகளையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## குகைக்குள் இருக்கும் புத்த விக்கிரகம்

[கல் விஹாரை]

மேற்படி புத்த விக்கிரகம் வலை அடைப்பினுள் இருப்பதாகும். புத்தபகவானின் இருமருங்கும் சாமரைவீசும் தேவப் பெண்களுண்டு.

இக் குகைக்கு விஜயாக்கிர குகை என்றும் பெயர். இக் குகைச் சுவர்களில் அழகிய அலங்கார வேலைப்பாடமைந்த சுவரோவியங்கள் உண்டு. ஓவியங்கள் அழிந்த நிலையிற் காணப்படுகின்றன. அவைகளுக்குப் பாவிக்கப்பட்ட வர்ணக் குழம்புகள் உயர்ந்த வகையைச் சார்ந்தவையாய் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கல் சாசனம்

[கல் விஹாரை]

இக்கற்சாசனத்தில் புத்தமதக் கொள்கைகள், புத்த பிக்குகளின் ஒழுக்க நெறி முறைகளும் பிரமாணங்களும் உண்டு. சிறப்பாகத் தேரவாதக் கொள்கையைச் சார்ந்த பிரிவினரைப் பற்றிய கட்டளைப் பிரமாணங்கள் முதலியன இச் சாசனத்தால் அறியக் கூடியதாக இருக்கிறது. புத்தமதக் கொள்கைகளுள் சியாங் – ராமஞ்ஞ – அமர புர என மூன்று பிரிவுகளுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீடர் ஆநந்தர்
## [கல் விஹாரை]

மேற்படி விக்கிரகம் புத்தரின் சிலை எனச் சமீப காலம் வரை நம்பப்பட்டு வந்தது. ஆனால் அது இப்பொழுது சீடர் ஆநந்தரின் சிலை எனப் பல காரணங்கள் காட்டி நிறுவப்பட்டிருக்கிறது. இச் சிலையின் உயரம் 22 அடி. இதற்குக் கிட்டவும் வளைந்த தோரணங்கள் செதுக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

இவ்விக்கிரகத்தின் தோற்றம், முகபாவம், கை கட்டிப் பணிவுடன் சற்றுமுன் குனிந்து வணங்கி நிற்கும் நிலை — இவை யாவும் கூர்ந்து கவனிக்க வேண்டிய விஷயங்களாகும்.

புதைபொரு ளாராய்ச்சியாளர் கூறி இருப்பதாவது :— “ இவ்வளவு காலமும் இவ் விக்கிரகம் புத்தரின் விக்கிரகம் எனக் கருதப் பட்டு வந்தது. ஆனால் உண்மை அஃதன்று. இது புத்தரின் சீடரான ஆநந்தரின் பரிநிர்வாண நிலையைக் குறிக்கிறது. புத்தரின் பிரதம சீடரான ஆநந்தர் தமது குருவான புத்தர் பெருமான் மண்ணுலகை நீத்தபொழுது துக்கத்தில் ஆழ்ந்த நிலையில் இருப்பதையும், அவர் மிக அடக்க ஒடுக்கத்துடன் பணிவுடன் நிற்பதையும், மேலும் ஆநந்தரைப் பாத சேவை செய்வதுபோல் அமைக்காது புத்த விக்கிரகத்தின் தலைப்பக்கத்து அமைத்தமை இட வசதியின்மை காரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக அவ்வாறமைக்கப்பட்டதெனவும் என்க. இது குருசங்கம பக்தியைக் காண்பித்திருக்கிறது."

"இவ்விக்கிரகம் புத்த பெருமானது எனக் கூறுபவர்கள் கேசத்தைக் கொண்டும, கமலத்தில் வீற்றிருப்பதையும் காரணமாகக் காட்டுவர். அவை மட்டும் அவ்வாறு நிரூபிப்பதற்குப் போதிய சான்றுகள் ஆகா" எனவும் ஆராய்சியாளர் கூறுவர்.



# பள்ளிகொள்ளும் புத்தர்

## [கல் விஹாரை]


கல்விஹாரையின் வலது பக்கத்தே உள்ளது இந்தப் பள்ளிகொள்ளும் புத்த விக்கிரகம். இதன் நீளம் 44 அடி. நிர்வாண சமாதியில் புத்தபிரான் அடங்கியதும் — அதாவது புத்தர் மண்ணுலக வாழ்வை நீத்தபொழுது அவர் திருமேனி உள்ள நிலையை இவ் விக்கிரகம் காட்டுகிறது. சிற்பக் கலையின் சிறப்பை மேற்படி விக்கிரகத்தின் மேலாடை, அங்கி அலங்காரத்திற் காணலாம். ஏனைய புத்த விக்கிரகங்களில் ஆடையில் ஒரு கோடு வளைவுமுறை யுண்டு. ஆனால் இவ்விக்கிரகத்தில் மேலாடையில் இரண்டு கோடு வளைவுமுறையைக் காணலாம். மேலும் புத்த பகவானுக்குள்ள மறு முப்பத்திரண்டுள்ளும் சில சிறப்பான அடையாளங்களை இவ்விக்கிரகத்திற் காணலாம். உதாரணமாகப் பாதத்தில் கமலவடிவத்தை அவதானிக்கலாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரி விஹாரை

லங்காதிலக விஹாரைக்கு வடபாகத்தே கிரி விஹாரை இருக்கிறது. மதிலாற் சூழப்பட்டுள்ளது. புராதன காலத்துத் தாகபங்களுட் பழுதடையாது இற்றைவரை நல்ல நிலையிலுள்ள தாகபங்களுள் இதுவும் ஒன்று. முதலாம் பராக்கிரம பாகுவின் இராணி சுபத்திராவினுற் கட்டப்பட்டதென்று சிலரும், சுபத்திராவின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதென்று சிலரும் கூறுகின்றனர். எங்ஙனமாயினும் பாதுகாக்கப்பட்டு நன்னிலையில் வைக்கப்பட்டுள்ள புராதன தாகபம் கிரி விஹாரையாகும்.

---




முன்புறத் தோற்றம்




முழுத் தோற்றம்


# லங்காதிலக விஹாரை

இவ் விஹாரையைப் பொல்லநறுவை ஜேதவனராம விஹாரை என்றுங் கூறுவர். இது பொல்லநறுவையிலுள்ள பெரிய விஹாரையாகும்; செங்கற் கட்டிடம். இதன் நீள அகலம் முறையே 170 அடி 66 அடி ஆகும். சுவர்களின் உயரம் 55 அடி. ஆனல் மேற்கூரை முழுமையும் விழுந்து விட்டது. மூலஸ்தானத்தில் நிற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தரின் பிரமாண்டமான சிலையொன்று சிரம் இல்லாத நிலையில் இருக்கிறது. இவ்வழகிய கட்டிடம் முதலாம் பராக்கிரம பாகுவால் கட்டப்பட்டது. பின் நாலாம் விஜயபாகுவால் (கி. பி. 1270-1272) புனருத்தாரணஞ் செய்யப்பட்டது. வாயிலில் இருபக்கமும் நாக ராசன் சிலையுண்டு. லங்காதிலக விஹாரையின் வடதிசையில் கிரி விஹாரையும் முற்பக்கத்தில் அநேக தூண்களுமுள்ள பத்ம சீதா பாசாத என்னும் மண்டபமும் உண்டு.

---



## பத்ம சீதாபாசாத

இது லங்காதிலக விஹாரைக்கு முன்புள்ள மண்டபம். இதில் அநேக தூண்கள் இருப்பதை நாம் அவதானிக்கலாம். இதை ஒரு கலாபீடம் என்று சிலரும், வாத்திய மண்டபம் என்று சிலரும் கூறுவர். ஆனால் ஆராய்ச்சியாளரின் முடிபு இது ஒரு கலாமண்டபம் என்பதே. இதற்குப் பக்கத்தில் ஒரு சபாமண்டபம் உண்டு.

இம்மண்டபத்துக்கு முன்னுள்ள முழுநிலப் பரப்புக்கும் ஆதானபிரிவென என்று பெயர். இப்பிரிவெனவிலேயே புத்த குருமார் குருத்துவத்துக்குரிய போதனை சாதனை ஆகிய இரு பயிற்சிகளையும் பெற்றார்கள். இப்பிரிவென ஒரு பல்கலைக் கழகம் போன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தது. இப்பிரிவெனுப் பகுதிக்கண்மையில் புத்த குருமாரின் பூதவுடலும், அரச வம்சத்தவரின் பூதவுடலும் தகனம் செய்யப்பட்டதென்றும், அப்பகுதியே இப்பொழுது மேட்டுத்திடராக உள்ள பகுதி என்றுங் கூறப்படுகிறது.

---

## றன்கொத் விஹாரை

அகநகருக்கு வெளியே உள்ள மிகவும் முக்கியமானதொரு புராதனச் சின்னம், றன்கொத் விஹாரையாகும். அநுராதபுரத்திலுள்ள பெரிய தாகபங்களுடன் ஒப்பிடக் கூடியதல்லாததாய் இருந்தபோதிலும் இது பொல்லநறுவையில் உள்ள ஒரு பெரிய தாகபம். 180 அடி உயரம் உள்ளது. அதன் அடித்தளச் சுற்றளவு 550 அடி. அதன் அண்மையில் உள்ள சாசனங்கள் றன்கொத் விஹாரை நிசங்கமல்லனுற் கட்டப்பட்டது என்றும், அதன் ஆதிப்பெயர் றாவன்வலிசாயா என்றுங் கூறுகின்றன.

---


## பபலு விஹாரை

அகநகருக்கு வடபுற வாயிலில் உட்புகும்போது, இடப்பக்கத்தே பபலு விஹாரையையும் 2-ம் நம்பருள்ள சிவ தேவாலயத்தையும் காணலாம். பபலு விஹாரை முதலாம் பராக்கிரமபாகுவின் இராணியினுற் கட்டுவிக்கப்பட்ட தாகபம் என்பர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





2-ம் நம்பர் சிவ தேவாலயம்




ஷை மூலலிங்கம்

இத்தேவாலயம் மிகவும் பழைய கட்டிடம். இது சோழ அரசர் காலத்தில் பதினோராம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இதற்கு "வானவன் மாதேவி ஈஸ்வரம்" என்றும் பெயர். முதலாம் இராசராச சோழனுடைய இராணி வணங்குவதற்காகக் கட்டப்பட்டது. தென்னிந்திய சிற்ப முறையில் முழுவதும் பொழிந்த கற்களாலேயே கட்டப்பட்டது. இன்றும் நல்ல நிலையிற் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன் சுவர்களில் சில தமிழ்ச் சாசனங்கள் இருப்பதைக் காணலாம். அவை சோழச் சக்கரவர்த்தியின் சாசனங்கள் என்று கூறப்படுகின்றன.




ஷை சிவ தேவாலயத்தின் சுவர்களில் காணப்படும் எழுத்துக்களின் மாதிரிப் படம். மேற்படி சிவன் கோவில் இந்துமதக் கோட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டின்படி கட்டப்பட்டது. அதற்கேற்பக் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் போன்ற மண்டபங்களும், பரிவார தேவதைகளுக்குரிய ஏனைய அமைப்புகளையும் காணக்கூடியதாய் இருக்கின்றது.


பொல்லநறுவை மதிலாற் சூழப்பட்ட அகநகர், புறநகர் என இரு பிரிவுடையதாயிருந்தது. வடக்கே தந்த தாது வைக்கப்பட்ட தலதா மாளிகையும், சத்மஹால் பிராசாதய போன்ற கட்டிடங்களும், அகநகரின் மத்தியில் அரச மாளிகையும் தெற்கே பட்டினமும் இருந்தது. இனி அகநகர்ப் பகுதியில் உள்ள கட்டிடங்களைப் பற்றி விவரிப்பாம்.



# சத்மஹால் பிராசாதய

இஃது ஒரு நூதனமான கட்டிடம். மொட்டையாய்க் கூம்பு வடிவமுடையது. ஒன்றன்மேலொன்ருய் ஏழு அறைகள் ஏழு அடுக்குக் கட்டிடமாய்த் தளத்தில் உள்ள அறை அகன்றும் மேலே செல்லச் செல்ல ஒடுங்கிக் கூம்பு வடிவமாய்ச் செல்கின்றது. இதனாலேயே இதற்குச் சத்மஹால் பிராசாதய என்னும் பெயர் உண்டாயது. இது ஒரு புதுமுறையிற் கட்டப்பட்ட தாகபம். இது மஹாயான புத்தமதக் கொள்கைப்படி நிஸங்கமல்லனாற் கட்டுவிக்கப்பட்டதென்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல் புத்தகம்

மேலே கூறிய சத்மஹால் பிராசாதயாவுக்கு முன்னால் இந்தக் கல் புத்தகம் இருக்கிறது. இக் கற்சாசனத்தின் நீளம் 27 அடி. இதில் நிஸங்கமல்லனைப் பற்றிய புகழ்ந்துரைகளும், அவனுடைய பல்வேறு வேலைகளைப் பற்றியும் குறிக்கப்பட்டிருப்பதாகக் கூறப் படுகின்றது. இக்கல் புத்தகம் மிஹிந்தலையிலிருந்து அரசனின் கட்டளைப் படி பொல்லநறுவைக்குக் கொண்டுவரப்பட்டதென்று கூறு வாருமுளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஹெற்ற தாகே

இக் கட்டிடம் கல் புத்தகத்துக்குப் பக்கத்தே உள்ளது. இது நிஸங்கமல்லனுல் தந்ததாது வைப்பதற்கெனக் கட்டப்பட்ட தலதா மாளிகாவை ஆகும். இதற்குள் உள்வீதி பிரத்தியேகமாக உண்டு.

---




## அட்ட தாகே

ஹெற்றதாகே என்னும் தலதா மாளிகைக்குப் பக்கத்தே மேற்குப் புறத்தில் இருக்கிறது. இது முதலாம் விஜயபாகு கட்டுவித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பர். இதற்குள் உடைந்த பல விக்கிரகங்கள் காணப்படுகின்றன. விஹாரை மதிலுக்குள் கைகழுவுவதற்குரிய பாத்திரம் கல்லிற் செய்யப்பட்டிருக்கிறது.

---




## வட்ட தாகே

இந்த வட்டதாகே சத்மஹால் பிராசாதாவுக்கு எதிரில் உள்ள விக்கிரக அறையாகும். இது இப் பகுதியிலுள்ள ஒரு விசேஷ கோவில் என்று கூறலாம். இது வட்ட வடிவத்தில் அமைந்ததால் வட்டதாகே எனப் பெயர் பெற்றது. மேலும் இது வட்டமானதும் செங்கற்களாலான மதிற் சுவரால் அரண் செய்யப்பட்டும் உள்ளது. சுவர்களில் பூக்கள், பூதகணங்கள், பல்வேறு மிருகங்கள் அமைத்துக் கட்டப்பட்டிருப்பதையும் அவதானிக்கலாம். இக் கட்டிடம் நிஸங்கமல்லனாற் கட்டுவிக்கப்பட்டதென அதன் சுவரிலுள்ள சாசனமொன்று கூறும். ஆனால் முழுக் கட்டிடமும் அவனால் முற்றுவிக்கப்படவில்லை என்றும், அதன் கூரை பராக்கிரம பாகுவின் மந்திரியால் பூர்த்தியாக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

இந்த வட்டதாகே திருகல் மத்திய முறையில் ஒன்றன்மேலொன்றாக இரண்டுதளங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. உள்தளத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட அறைக்கு நான்கு திசையிலும் நான்கு வாயில்கள் உண்டு. நான்கு வாயில்களையும் நோக்கிக் கொண்டு நான்கு புத்த விக்கிரகங்கள் உள்ளே இருக்கின்றன. மேலும் உள் தளத்திலும் கற்றூண்கள் இருக்கின்றன.




வட்டதாகே வாயிலில் உள்ள
சந்திர வட்டக்கல்

வட்டதாகேயின் வெளிப்புற வாயிலில் அழகிய சந்திர வட்டக் கல் உண்டு. அதில் நான்கு மிருகங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவையாவன :- யானை, குதிரை, மாடு, சிங்கம் என்பனவாம். பொல்லநறுவைச் சரித்திரக் காலத்துச் சந்திர வட்டக்கல்லில் எருது இடம்பெற்றிருத்தல் இந்து சமயச் செல்வாக்கைக் காட்டுகின்றது. பிற்காலத்து எருது சந்திர வட்டக்கல்லிலிருந்து நீக்கப்பட்டு விட்டது.

மேலும் வட்டதாகே வாயிலில் நாகராசன் சிலை ஒரு கையிற் குடமும் மற்றக் கையிற் பூவையும் ஏந்திய வண்ணம் இருப்பதை அவதானிக்கலாம்.

இலங்கையிலுள்ள பல வட்டதாக்களுள் காலத்தாற் பிந்தியது இது தான் என்பர் ஆராய்ச்சியாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நிசங்கலத மண்டபம்

இம் மண்டபம் நிசங்கமல்லனாற் கட்டுவிக்கப் பட்டது. இதில் கல்லாலான ஒரு மேடையும், அதன் மேல் தாமரை மலர்போற் செதுக்கப்பட்ட கற்றூண்களும் உண்டு. இம் மண்டபம் கல்லாலான கிருதிகளாற் சுற்றி அடைக்கப்பட்டிருக்கிறது.

---




## தூபாராம தாகபம்


தூபாராம தாபகம் செங்கல்லினாற் கட்டப்பட்ட ஒரு கோவிலாகும். இங்கு வணக்கத்துக்குரிய விக்கிரகங்கள் உண்டு. இச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடத்தில் ஒப்பற்ற ஒரு தனிச் சிற்ப முறையை — அதாவது பாண்டிய காலச் சிற்ப முறையைக் காணலாம். இதனால் இது காலத்தாற் பிந்திய தெனப் பலரும் கூறுவர்.

இக் கோவிலின் மூலத்தானம், கூரைப் பகுதி, மூலத்தானக் கோபுரம் இவையாவும் நல்ல நிலையில் இருக்கின்றன. சுவர்கள் மிகவும் அகலமானவை. அதனாலே வெளித் தோற்றத்துக் கேற்றளவு உள்ளே விசாலம் இல்லை. கட்டிடத்துள் அழகான சித்திரங்கள் உண்டு.

---




## 1-ம் நம்பர் சிவதேவாலயம்

பராக்கிரமபாகு மாளிகை வடவாயிலுக்குக் கிட்ட, தூபாராம தாகபத்துக்கு அண்மையில் உள்ளது, இச் சிவதேவாலயம். இத் தேவாலயததிலும் மூலத்தானததில் சிவலிங்கம் உண்டு. ஆனால் அது கவனிப்பாரற்ற முறையில் இப்போ இருக்கிறது. இச் சிவதேவாலயமும் இந்து சமய சாத்திர முறைப்படி கட்டப்பட்டிருக்கிறது. கோவிலின் மேற் கூரைப் பகுதி செங்கல்லினாலும் கருங்கல்லினாலும் கட்டப்பட்டிருக்கிறது. செங்கல்லினாற் கட்டப்பட்ட பகுதி வீழ்ந்து விடப் பொழிகல்லினாற் கட்டப்பட்ட பகுதிகள் இன்னும் பழுதடையாமல் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சிவன்கோவிலில் அம்மன் சந்நிதி இருந்த அடையாளங்களும், அதன் கோமுகையும் பிறவும் இன்றுந் தெளிவாகக் காணக் கூடிய நிலையில் உண்டு. இச் சிவாலயத்திலிருந்து எடுக்கப்பட்ட விக்கிரகங்கள் கலை நுணுக்கம் வாய்ந்தவை. அவை இப்பொழுது கொழும்பு நூதன சாலையில் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டிருக்கின்றன.

இச் சிவாலயம் தமிழர் இரண்டாம் முறையாகப் பொல்லநறுவையில் அரசுசெய்த பொழுது கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது.

---




தேசிய நூலகப் பிரிவு.
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# முதலாம் பராக்கிரம பாகுவின் மாளிகை

முதலாம் பராக்கிரம பாகுவின் இராச மாளிகையும் அதைச் சார்ந்த கட்டிடங்களும் உள்ள இடத்தின் பரப்பு 25 ஏக்கராகும். இவ் விராச மாளிகையின் அத்திவாரம் சுற்றியுள்ள பகுதிகளிலும் பார்க்க உயரமான இடத்தில் அமைக்கப் பட்டுள்ளது. மேலும் உயர்ந்த சுற்றுமதிலால் அரண் செய்யப்பட்டும் இருக்கிறது. வட பகுதியில் வாயிலுண்டு. இவ் வரண்மனையில் ஆயிரம் அறைகள் இருந்தன என்றும், ஏழு மாடிகள் கொண்ட கட்டிடமாய் இருந்ததென்றும் மஹாவம்சம் கூறுகின்றது. இன்றும் இரண்டு மாடிகளின் அடையாளங்கள் காணப்படுகின்றன. இது ஒரு மாபெரும் மாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாக இருந்திருக்கலா மென்று அநுமானிக்க இடமுண்டு. மேற்படி மாளிகை வாயிற் கட்டிடத்து எஞ்சியுள்ள பகுதியும், மண்டபமும் அதை வலியுறுத்தும். மேல் மாடிகளுக்குச் செல்வதற்கு அமைந்த கற்படிகளை இன்றுங் காணமுடியும். மேலும் மாளிகையின் சுவர்கள் மிகவும் அகலமும், கனமும் உடையனவாயிருப்பதையும் நாம் அவதானிக்கலாம்.

இந்த அரண்மனையில் சுமார் 100 அடி நீளம் 42 அடி அகலமுள்ள ஒரு பெரிய கொலுமண்டபம் இருந்திருக்கிறது. அதற்குச் சுமார் 30 தூண்கள் வரை இருந்திருக்கின்றன. அவற்றின் அடையாளங்களைக் காணலாம். இக் கொலு மண்டபத்துக்குப் பின்னால் இன்னொரு மந்திராலோசனை மண்டபம் இருக்கிறது. அதைச் சூழ்ந்து சுமார் 50 அறைகளும் அவற்றுக்கு உட்புகும் வெளியேறும் வாயில்களும் வழிகளும் ஒன்றுடனொன்று தொடர்புடையனவாய் இருந்தன வென்பதையும் உள்ள அடையாளங்கள் மூலம் அறியக்கூடியதாய் இருக்கிறது.

இவற்றைத் தொடர்ந்தே அந்தப் புரங்கள், குளிக்கும் அறைகள், அவற்றுக் கண்மையில் இன்பப் பொழுது போக்குக்குரிய சோலைகள், நாடக அரங்குகள், கலை மன்றங்கள் போன்ற பல்வேறு வசதிகளும் இருந்ததாக அநுமானிக்கக் கூடிய சான்றுகள் பல அதைச் சார்ந்த சூழலிலே உண்டு. இவை அக்கால வாழ்க்கை முறையையும் பண்பையும் காட்டும் ஏதுக்களாகும்.

---

## இராஜவேதியா புஜங்க மண்டபம்


மேலே கூறிய அரச மாளிகைக்கு முன் கீழ்த்திசையில் இராஜவேதியா புஜங்க மண்டபம் என்னும் ஒரு அழகிய மண்டபம் உண்டு. இம் மண்டபம் மூன்று படையான அடுக்கு வரிசையில் அமைக்கப்பட்டுக் கல்லாலான மேடையும் உடையதாய் இருக்கிறது கீழுள்ள வரிசையில் யானையை மையமாக உடைய அலங்காரப் படிவங்கள் கல்லிற் கொத்திப் பதிக்கப்பட்டிருக்கிறது. இவை மிகவும் நுண்ணிய முறையில் நூதனமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. வடபுறத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ள வாயிலை யாளியும் சிங்கமும் அலங்கரிக்கின்றன. மண்டபத்துள் அழகான சிற்பவேலைகள் உடைய கற்றூண்கள் இருக்கின்றன. இம் மண்டபத்துக்குக் கூரையில்லை. அது முற்றாக அழிந்து விட்டபடியால் அதன் தன்மையைப்பற்றி யாதொன்றுங் கூறுவதற்கில்லை. முதலாம் பராக்கிரம பாகுவினாற் கட்டுவிக்கப்பட்ட இம் மண்டபம் இரண்டாம் பராக்கிரம பாகுவினால் திருத்துவிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

இம் மண்டபத்துக்கு அருகில் ஒரு பழைய காலத்துக் கிணறு இருக்கிறது. அதன் அமைப்பு, தொடர்பு, காலம் முதலியன ஆராய்ந்து ஒன்றும் இன்னும் பூரணமாக அறியப்படவில்லை.

---




224
R.C

## குமார பொக்குண அல்லது அரசர்குளிக்குங் குளம்


இராஜ வேதியா புஜங்க மண்டபத்துக்குத் தென்கீழ்த் திசையில் கற்படிகள் அமைந்துள்ள ஒரு குளம் இருக்கிறது. இக்குளம் தான் அரச குலத்தவர் நீராடும் இடமாக இருந்தது. இது சமீப காலத்தில் பழைய நிலைக்கியையத் திருத்தப்பட்டுள்ளது. இதற்குள் ஒரு குடாப்போல் அமைப்புண்டு அதைச் சுற்றி மூன்று வரிசை படிக்கட்டுகளும் அப்படிக் கட்டுகளுக்கிடையில் போக வரக் கூடிய பாதையும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் அமைப்பு முறை சதுரங்க விளையாட்டுக்குப் போடும் கோடுகள் போன்ற அமைப்புடையதாய் இருக்கிறது. பாதைகட்கு இடையில் உள்ள படிக்கட்டுளின் மூலைக்கறகள் அழகான முறையிற் கொத்தப் பட்டுக் கவர்ச்சியான முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குளத்துக்குச் சுரங்க வாய்க்கால் மூலம் நீர் வந்ததென்பது சமீப காலத்துக்கு முன்பு கண்டுபிடிக்கப் பட்டது. மேலும் இக் குளத்துக் கருகில் சிறு மேடையும் மண்டபமும் இருந்த அடையாளங்கள் உண்டு. இவை வழக்கமாக நீராடுமிடங்களிற் காணப்படும் மண்டபமும் மேடையும் எனக் கருதலாம். இவையும் தமிழ் மரபின் செல்வாக்கை வலியுறுத்துவனவாம்.

---




# பொல்லநறுவை வாடி வீடும் பராக்கிரம சமுத்திரமும்

பொல்லநறுவை வாடிவீடு பராக்கிரம சமுத்திரத்திற் கட்டப் பட்டிருக்கிறது. பராக்கிரம சமுத்திரம் ஷெ வாடி வீட்டுக்குக் கீழ்த் திசையிற் பரந்து கிடக்கின்றது. பராக்கிரம பாகுவாற் கட்டுவிக்கப் பட்டது. தொப்ப வீவாக் குளத்தைத் தம்புத்தலு வாவியுடன் இணைத்துப் பராக்கிரம சமுத்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. அம் பன் கங்கை, மஹாவலி கங்கை முதலிய ஆறுகளைக் கால்வாய்கள் மூலம் இக் குளங்களோடு தொடுப்பித்தான் பராக்கிரமபாகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் வருகையை உத்தேசித்து 1944-ம் ஆண்டளவில் பொல்லநறுவை வாடிவீடு புதுக்குவிக்கப் பட்டது.

| | |
|---|---|
| பராக்கிரம சமுத்திரத்தின் பரப்பு | — 5950 ஏக்கர். |
| ஆழம் | — 23 அடி. |
| ஷை குளக்கட்டின் நீளம் | — 8 மைல் 2320 அடி. |
| நீர்ப்பாய்ச்சக்கூடிய நிலப்பரப்பு | — 18150 ஏக்கர். |

## நிசங்கமல்லன் மண்டபம்

இம்மண்டபம் பொல்லநறுவை வாடி வீட்டுக்கு அருகில் உள்ளது. இது பராக்கிரம சமுத்திரத்துக்குட் செல்லும் முனை போன்ற ஒரு பகுதியில் செயற்கையாய் நிரப்பப்பட்ட அத்திவாரத்தில் கட்டப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி நிசங்கமல்லனின் சாசனம் கூறுவதாவது :—

"இன்னொரு அரசனாற் கட்டப்பட்ட அரச மாளிகையில் தான் வசித்தல் தன் அந்தஸ்திற்கும் நிலைமைக்கும் உகந்ததல்ல என்று கருதி உடனே தமக்கெனக் கட்டுவிக்கப்பட்ட மாளிகை இஃது என்றும், தம் பராக்கிரமத்தைக் காண்பிப்பதற்காக இம்மாளிகையை ஏழு மாதத்திற் கட்டுவித்தான் என்றும் கூறுகிறது."

இப்போதுள்ள சிதைந்த சின்னங்களை நோக்கும்பொழுது இம் மாளிகை கட்டிய சிற்பிகளின் நோக்கம் மாளிகையின் நிரந்தரத்துவம் அல்லது சிற்பக்கலை நுணுக்கத்தை வெளிப்படுத்தும் முகமாக அன்றிக் குறுகிய கால எல்லையுள் அரசன் விரும்பியவாறு தமக்கெனப் பிரத்தியேகமான மாளிகை கட்டி முடித்தலே நோக்கமாக இருந்த தென்பது தெளிவாகின்றது.

### ஷை மாளிகையில் உள்ள மந்திராலோசனை மண்டபம்

மேற்படி மாளிகையின் முக்கிய பகுதியாய் உள்ளது மந்திராலோசனை மண்டபமாகும். இது நீள்சதுர வடிவானதும், பல தூண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
120866

களை உடையதும், உயரமுமான தொரு மேடையையும் உடைய மண்டப மாகும். இம்மண்டபம் மந்திராலோசனை மண்டபம் என்று நிசங்க மல்லனின் சாசனங்களிலிருந்து அறியக் கிடக்கின்றது. இம் மண்டபத்தில் இருந்த கற்சிங்கம் இப்பொழுது கொழும்பு நூதனசாலையில் இருக்கிறது. அச்சிங்கம் அரசனின் சிங்காசனத்தைத் தாங்கிக் கொண்டிருந்தது. அரசன் கொலுவீற்றிருக்கும் பொழுது மந்திரிமார் தத்தம் தகுதி நிலைக்கியைய வீற்றிருக்க வேண்டிய இடங்களின் விபரம் மேற்படி மண்டபத்தின் தூண்களிற் பொறிக்கப்பட்டிருக்கும் சாசனங்களால் அறியலாகும். இவற்றால் அக்கால அரசியல் முறை, அரசன் கொலு மண்டபத்தில் மந்திரிகள் இருக்கவேண்டிய இருக்கை முறை, பண்பாடு முதலியன விளங்கக் கூடியதாய் இருக்கின்றன. மேலும் 12-ம் நூற்றாண்டில் எவ்வாறு சிங்கள அரசரின் மந்திராலோசனைக் குழு, அதிகார முறை, அந்தஸ்து நிலை போன்றவை எவ்வாறு திட்டமுடையதாய் வகுக்கப்பட்டிருந்த தென்பது விளங்குகின்றது.

இங்கு காணப்படும் சாசன எழுத்துக்கள் பழைய தமிழ் எழுத்துக்கள் போன்றிருக்கின்றன. இவற்றை நாம் ஆராய்ந்து, அநுமானித்து அறியக்கூடிய விஷயங்கள் பல உண்டு.

---

## பொத்கல் விஹாரை

இவ் விஹாரை பராக்கிரமக் குளத்தின் கட்டுக் கருகாமையில் பொல்லநறுவை வாடி வீட்டுக்குத் தெற்கே 1½ மைல் தூரத்தில் இருக்கிறது. இதைச் சுற்றி வேறும் பல கட்டிடங்கள் இருக்கின்றன. இவற்றுட் சில முதலாம் பராக்கிரம பாகுவின் சிறந்த மடங்களும் ஆச்சிரமங்களுமாம்.

பொத்கல் விஹாரை செங்கற்களால் கட்டப்பட்டதொரு வட்ட வடிவமான கட்டிடம். இதற்கு வில்போல் வளைவாகக் கட்டப்பட்ட கூரையுண்டு. இப்பொழுது அவ்விடத்து வழங்கும் பெயரைக் கொண்டு சிலர் இது வாசிகசாலையாக இருந்ததென்று கூறுவர்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பராக்கிரம பாகுவின் சிலை

பொத்கல் விஹாரைக்குச் சற்றுத் தூரத்தில் இச்சிலை உண்டு. கலாநிதி பரணவிதானே இது பராக்கிரம பாகுவின் சிலை என்பர். இச் சிலையின் கையில் ஏட்டுப்பிரதி உண்டு.

இச் சிலையைப் பற்றிப் பலரும் பலவாறு கூறுப.


1. சிலர் இதைப் பராக்கிரமபாகுவின் சிலை என்பர்.
2. வேறு சிலர் அகத்திய முனிவரின் சிலை என்பர்.
3. இன்னும் சிலர் புலஸ்தியரின் சிலை என்பர். இவ்வாறு கூறுவோர் புலஸ்தியர் என்பவரின் பெயரிலிருந்தே பொல்லநறுவை என்ற இடப்பெயர் வந்ததென்று கூறுவர்.

எவ்வாறிருப்பினும் இது ஒரு சிற்பக் கலை நுணுக்கம் வாய்ந்த சிற்பம் என்பதற்கு ஐயமில்லை. ஆனால் தெளிவாக இச்சிலை எக்காலத்தைச் சார்ந்ததென ஆராய்ந்து இன்னும் அறுதியிட்டுக் கூறப்படவில்லை. கல்விஹாரையிலுள்ள சிலைகளின் சிற்ப வேலைக்கும் இதன் சிற்ப முறைக்கும் பல ஒற்றுமைகள் இருந்தலினால் இது 12-ம் நூற்றாண்டைச் சார்ந்ததென்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகக் கூறுமிடத்து இது ஒரு மாபெரும் அரசனின் சிலை என்று சொல்வதற்கில்லை. அரசன் துறவுபூண்ட நிலையிலுள்ள சிலை எனச் சிலர் கூறுவர். ஆனால் இச்சிலை வாசிகசாலைக்கு அண்மையில் இருப்பதால் கலைஞனொருவனின் சிலை என்றும், வேறு சிலர் வள்ளுவரின் சிலை என்றும் கூறுவர்.

---



## சீகிரிய [அல்லது சிங்கக் குன்று]

சீகிரிக் குன்று மாத்தளைப் பகுதியில் உள்ளது. வரண்ட சுவாத்தியம் உடையது. சீகிரியாவைச் சுற்றிக் காடுகள் இருந்த போதிலும் இடையிடை சிறு கிராமங்கள் உண்டு. சீகிரிய என்னுஞ் சொல், சீயகிரி என்னுஞ் சொல்லிலிருந்து உற்பத்தியாகிச், சீகிரிய ஆயது என்று கூறுவர். சீகிரிக் குன்றின் உச்சியில் சிங்கத்தின் உருவத்தின் பகுதியை இன்றுங் காணலாம். இயற்கையான குன்றின் ஒரு புறத்துச் சிங்கத்தின் தலை, முன்னங்கால் செதுக்கப்பட்டும், செங்கற்களால் கட்டப்பட்டும், சிங்கத்தின் வாயினூடாக உட்சென்று குன்றின் உச்சியை அடையும் முறையில் படிகள் அமைக்கப்பட்டும் இருக்கிறது. குன்றின் மறுபக்கத்தே சிங்கத்தின் பின்புறம் அமைக்கப்பட் டிருந்ததாகவும் அப்பகுதி இப்பொழுது சிதைந்து அழிந்து விட்டதென்றுங் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீகிரிக் குன்று அடிவாரத்திலிருந்து 600 அடியும் கடல் மட்டத்திலிருந்து 1200 அடியும் உடையது. முதலாம் காசியப்பன் (கி. பி. 478 – 493) சிகிரிக் குன்றை ஒரு கோட்டையாக அமைத்தான்.

மஹாவம்சம் கூறுவது :—

" தாதுசேனன் என்னும் அரசன் (கி. பி. 460 – 478) அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை அரசாண்டான். அவனுக்கு முகலன், காசியப்பன் என இரு குமாரரும் ஒரு மகளும் இருந்தார்கள். காசியப்பன் பட்டத்து இராணிக்குப் பிறந்த மகனல்ல. முகலன் பட்டத்து இராணியின் மகன். தாதுசேனன் மகளைத் தாதுசேனன் சகோதரியின் மகன் விவாகஞ் செய்தான். மாமிக் கொடுமை பற்றி மகள் தந்தையாகிய தாதுசேனனுக்குரைக்கத் தாதுசேனன் அவள் தன் சகோதரி என்றும் பாராது அவளை மானபங்கம் செய்வித்துக் கொல்வித்தான். இதற்குப் பழிவாங்கும் நோக்கமாகவே அவள் மகன் தன் மைத்துனனாகிய காசியப்பனைத் தூண்டித் தந்தையாகிய தாதுசேனனை உயிரோடு புதைப்பித்து அரசைக் கைப்பற்றச் செய்தான். உடனே முகலன் உதவி நாடி இந்தியாவுக்கு ஓடிச் சென்றான். அவனுக்குப் பயந்தே காசியப்பன் சீகிரியா சென்று நால்வகை அரண்கள் வகுத்து, அரச மாளிகை கட்டுவித்து அங்கிருந்து அரசு புரியலானான்."

சீகிரியாவின் கீழ்ப்பாகம் இயற்கை அரணுடையதாய் இருந்த போதும், காசியப்பன் அப்பாகத்திலும் மதில் அரண்கள் அமைப்பித்தான். சீகிரியாக் குன்றின் உச்சியில் அமைத்த அரண்மனையில் காசியப்பன் வசித்து வந்தான். அவன் செய்வித்த வேலைகளில் இருந்து அவன் ஒரு கலாரசிகனு யிருக்கவேண்டு மென்பது தெளிவு.

---

## நாகபாம்புக் குகை

சீகிரிக் குன்றைக் கிட்டியதும் இடது பக்கத்தில் நாகபாம்புக் குகை உண்டு. இக் குகையில் கி. மு. நூற்றாண்டுகளில் வழங்கிய பிராஹ்மி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வாறு 20 குகைகள் வரை இருந்தன என்றும், இவைகள் துறவிகள் வாசத்தலங்களாய் இருந்தன என்றும் கருதப்படுகின்றது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காசியப்பன் சபாமண்டபம் [ஆசனம்]

இச் சபாமண்டபம் ஒரு பெரிய உடைந்த கற்குன்றில் அமைக்கப்பட்டிருக்கிறது. இம் மண்டபத்துக்கு அண்மையில் குளிக்கும் குளமும் இடமும் உண்டு. மேற்படி குளம் கல்லிற் குடைந்தெடுக்கப் பட்டுள்ளது. இஃதும் குன்றில் இருப்பதால் குளத்துக்கு ஏறிச் செல்வதற்குப் படிகள் உண்டு.

அரசன் தன்னைப் பார்க்க வருவோரைக் காணும் இடமாக இருந்தது இம் மண்டபம் என்று சிலர் கூறுவர்.

---

## சீகிரிக் குன்று

மேற்கூறிய மண்டபத்துக்கு வலப்புறத்தில் சீகிரிக் குன்றுக்குச் செல்லும் படிகளைக் காணலாம். படிகள் பல மடக்கு முறையில் அமைந்துள்ளன. இப்படிகள் மூலம் ஏறிச் சென்றால் $4\frac{1}{2}$ அடி அகலமுள்ள ஒரு நடைபாதையை அடையலாம். நடைபாதை ஆரம்பிக்கும் இடத்தில் குன்றின் கவிவான பகுதி மலை அடிவாரத்தில் உலகப் புகழ் வாய்ந்த சுவரோவியங்களைக் காணலாம். அச் சுவரோவியங்கள் இப்பொழுது நன்கு பாதுகாக்கப் பட்டுள்ளன. அவை நடைபாதையிலிருந்து சுமார் 45 அல்லது 50 அடி உயரத்தில் இருக்கின்றன. அவைகளைப் பார்ப்பதற்கு வளைந்து செல்லும் மாடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிகளை ஏறிச் செல்ல வேண்டும். அம்மாடிப் படிகளில் ஒரு தடவையில் பத்துப் பேருக்கு மேல் ஏறிச் செல்ல அநுமதிக்கப்பட மாட்டார்கள். மேலே ஏறிச் சென்றால் அங்குள்ள சுவரோவியங்களைக் காணலாம். இப்பொழுது பாதுகாக்கப்பட்டு வரும் 22 சுவரோவியங்களைப் போல் சுமார் 500 சித்திரங்கள் சீகிரிக் குன்றைச் சுற்றி இருந்ததாகவும் அவைகள் இப்பொழுது அழிந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

## சீகிரியாச் சுவரோவியங்கள்




1




2



3




4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5




6

இவ் ஓவியங்கள் உலகம் போற்றும் வண்ண ஓவியங்கள். கவின் பெறு அழகுடையன. வர்ணத்தில் வண்ண ஓவியங்கள். காலத்தில் கலையில் நம்மைப் பின்னோக்கி இட்டுச் செல்லும் இயல்புடையன. ரதி போன்ற உருவங்கள். மலைக் குகையே சித்திரசாலை. பாறையே சுவர். சுண்ணத்தால் சுவரை மட்டமாக்கி வர்ணங்களால் ஓவியங்களைத் தீட்டிய வித்தகரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இப்போ காணக்கிடைக்கும் சீகிரிச் சித்திரங்கள் 1500 ஆண்டுகள் வரை சென்றும் வர்ணமும் வண்ணமும் மங்காமல் திகழுகின்றன. எல்லா ஓவியங்களும் மின்னிடை மெல்லியலாரின் எழில் உருவங்கள். மலர்கள் ஏந்திய மங்கையர். வர்ணத்தில் மஞ்சல், பச்சை, சிவப்பு நிறங்கள் அதிகமாக ஊட்டப்பட்டிருக்கின்றன.

மங்கையரின் கயல்விழிகள், நீண்ட மூக்கு, பணைத்த மார்பு, தளிர்க் கரங்கள், நுண்ணிய இடை ஆகியன காவியத்தை ஓவியத்திலே காட்டுகின்றன. இடுப்புக் கீழே தெரியாமல் ஓவியங்கள் தீட்டப்பட்டிருத்தல், கால் நிலம் தோயாக் ககன அரம்பையர் என்பதைக் குறிப்பதற்காக என்று சிலர் கருதுகிறார்கள். சிலர் வேறு வகையிற் கூறுவர்.

வண்ணமலர் தட்டையேந்திப் பணிப்பெண் செல்ல, கோலத் திருமேனியும் அதன் நிறையெழிலும், "இவள் தான் தலைவி" எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டும். எழிலரசியின் உருவத்தில் ஓவியன் கருத்தையும் கவர்ச்சியையும் குழைத்து அமைத்திருக்கிருன். அமைந்த கோலமும் பணிவும், மென்மையின் இலக்கணத்தையும், பெண்மையின் மடப்பத்தையுங் காட்டுகின்றன. நிமிர்ந்த நோக்கு அங்கு இல்லை. ஆனாலும் அந்தப் பணிவிலே மாட்சிமை கெடவில்லை.

கையில் அப்பொழுது அலரும் போதை ஒருத்தி வலிய அலர்த்துகிருள். அவள் விரல்களே இதழ்களாகத் தோன்றுகின்றன. அந்த விரிந்த இதழ்கள் விரியா இதழ்களை விரிக்கின்றன.

மேலும் முடியணியின் அமைப்பும், கழுத்தணிகளின் சிறப்பும், கைவளைகளின் எழிலும் மெல்லியலாரின் அழகை மறைக்கவில்லை. கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமையைத் தரும் அற்புதமான சித்திரங்கள்.


இந்த ஓவியங்களுக்கும் இந்தியாவிலுள்ள அஜாந்தா போன்ற இடங்களிற் காணப்படும் ஓவியங்களுக்கும் பல்வேறு விதத்தில் — அதாவது தோற்றத்தில், அமைப்பில், அசைவில், இயைபில் — ஒற்றுமையைக் காணலாம். உடை அலங்காரம், மார்புக் கச்சு, நீளவிரல்கள், பக்க வாட்டமான அரை முக்கால் பார்வை, தாமரைப் பூ வைத்திருத்தல், அரையின் கீழ் வரையப் பெருமை முதலியனவற்றை அவதானிக்கலாம். சிற்பனுக்குச் சிற்பி, ஓவியனுக்கு ஓவியன் போக்கு வித்தியாசம் இருக்கலாம். இருந்த போதிலும் இவை இலங்கை – இந்தியக் கலாசாரத் தொடர்பைக் காட்டுகின்றன.

இவ்வாருன சுவரோவியங்களைப் பார்த்த பின் கட்டுச் சுவரை அரணுடையதான நடைபாதையிற் செல்லும்பொழுது நாம் அநேக விஷயங்களை அவதானிக்கக் கூடும். நடைபாதைச் சுவர் மிக அழுத்தமாகக் கண்ணடி போன்று வழவழப்புள்ளதாய் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு நூற்றுண்டுகளாக மழை, வெய்யிலால் தாக்கப்பட்டுப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தும் சுவரின் வழவழப்புத் தன்மை குறையவில்லை. இம்மதிற் சுவரிலே இக்குன்றைத் தரிசிக்க வந்த யாத்திரிகர்கள் தம் அபிப்பிராயங்களைப் பொறித்துச் சென்றிருப்பதைக் காணலாம்.

நடைபாதையைக் கடந்து சென்று மேற்படி குன்றின் வடதிசையில் ஒரு சிறிய மைதானத்தை அடையலாம். இங்கிருந்து சுற்றுப்புறத்தை அவதானிக்கவும். இங்குதான் சிங்கவாயில் உண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


120866




## சிங்க வாயில்

சீகிரிக் குன்றின் வட பாகத்தில் சிங்கத்தின் தலை, முன்னங் கால்கள் செங்கல்லாற் கட்டப்பட்டும், கல்லிற் செதுக்கப் பட்டும் இருக்கிறது. சிங்கத்தின் பாதம் சுமார் 4 அடி உயரமானது. சிங் கத்தின் வாயினூடாக மேற்செல்லப் படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப் படிகளின் மூலம் ஏறிச் சென்று குன்றினுச்சியை அடைய வேண்டும். வழியில் தேனீக்களின் உபத்திரவம் உண்டு. ஆகையால் மிகவும் ஜாக்கிரதையாக, அமைதியாக இவ்விடத்தில் செல்ல வேண் டும். இப் பகுதியில் இருந்து குன்றின் உச்சியை அடைய ஏறும் வழிதான் மிகக் கஷ்டமானது. இப்பொழுது அரசாங்கம் குன்றில் வெட்டப்பட்ட படிகளுக்கு அநுசரணையாக இரும்புக் கிறுதிகள் போட்டு வசதி செய்திருக்கின்றது. இவ்வாறான வசதி இருந்தும் குன்றின் உச்சிக்கு ஏறிச் செல்வது எல்லாருக்கும் சுலப சாத்தியமான தல்ல. குன்றின் உச்சியை அவதானிப்பவர்களின் ஆராய்ச்சி உளம் — ஆதிகாலத்தில் – காசியப்பனின் காலத்தில் குன்றினுச்சியில் உள்ள மாளிகைக்குச் சென்ற முறைமை —, இன்னோரன்ன விஷயங்களை அறிய அவாவி முற்பட்டுச் சிந்திக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சீகிரிக் குன்றின் உச்சி

செங்குத்தான சீகிரிக் குன்றின் பகுதியை இவ்வாறு சிரமத்துடன் ஏறிக் குன்றின் உச்சியை அடைந்ததும், சிலவேளைகளில் வாயுபகவான் வேகமாய் வீசி, ஏறுதலால் உண்டான களைப்பைத் தீர்ப்பதும் உண்டு.

குன்றின் உச்சி 4 ஏக்கர் விஸ்தீரணமுடையதாய் இருந்ததென்றும், இப்பொழுது அது சிதைவின் பின் 3 ஏக்கர் ஆயிற்று என்றுங் கூறப்படுகிறது. உச்சியில் உள்ள ஒவ்வொரு அங்குல நிலமும் மிகவும் சிக்கனமான முறையிற் பாவிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கலாம். அநேக அறைகள், மண்டபங்களைக் கொண்ட அரசமாளிகை, அதைச் சுற்றி மதில் அரண், மாளிகையை விட அடுக்கான பல்வேறு கட்டிடங்கள், அரசவை மண்டபங்கள், பெரியதொரு குளம், சிறிய மூன்று குளங்கள் – ஆகிய இவற்றைக் காணலாம். இவை எல்லாவற்றுக்கும் அத்திவாரமாய் அமைந்தது சீகிரிக் குன்றின் உச்சிமலையே. கட்டிடங்கள் செங்கற்களாலானவை. நீரினாற் றாக்கப்படாத சாந்தினாற் கட்டப்பட்டவையாய்த் தென்படுகின்றன.

**சிங்காசனம்:** மேலே கூறிய பெரிய குளத்துக்கு வடபாகத்தில் சிங்காசனம் எனக் கூறப்படும் ஓர் பெரிய கல்லாசனம் உண்டு. அதன் முன் திருவோலக்க மண்டபம் இருந்திருக்க வேண்டும்.

குன்றின் உச்சியில் இருந்து கீழ்த்திசை நோக்கிப் பார்த்தால் நந்தவனமாய் இருந்த பகுதிகள் தென்படும். ஆங்கு அரணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்ட மதிற் சுவர்களையும் காணலாம். இவை யாவற்றை யும் அவதானிப்பவர்கள் இவற்றை நிருமாணித்த சிற்பியின் திறமை யையும், நிறைவேற்றுவித்த அரசனின் திறமையையும், அவர்களின் கலைத்திறன், கலைவாழ்க்கையையும் மெச்சாமல் இருக்க முடியாது.

சிகிரிக் குன்றின் மேற்குத் திசையில் நூறு ஏக்கர் விஸ்தீரண முடைய கழனிகள், அகழிகள், குன்றுகள் அடங்கிய நிலப்பரப்பைக் காணலாம். மேலும் மேற்கேயுள்ள மதில் அரணையும் காணலாம். அதன் நீளம் சுமார் 1½ மைல். சிதைவடையாத பகுதிகளில் மதி லின் உயரம் 30 அடி வரை இருப்பதை இன்றுங் காணலாம்.

மதில் அரண் மட்டுமல்ல. நீரரணும் உண்டு. அகழிகள் ஆழ மாக வெட்டப்பட்டிருக்கின்றன. அகழியின் ஆழம் 14 அடி. ஆனால் அகழி அடித்தளத்தில் 72 அடி அகலமும் மேல் நிலமட்டத்தில் 82 அடி அகலமும் உடையது. அகழியின் பக்கங்கள் கருங்கல்லி னுற் கட்டப்பட்டுள்ளன. இங்கு தான் அரசனின் வேனிற் கால விடுதி இருந்தது. இவ் விடுதி நாற்புறமும் நீரால் சூழப்பட்டுக் குளிர்ச்சியுடையதாய்க் கண்கவர் வனப்புடைய சூழலுடையதாய் அமைக்கப்பட்டிருந்தது.

இவற்றை விட வட பகுதியிலும் தாகபங்கள், குளங்கள், பிர தானிகள் வாழ்ந்த பகுதிகள் இருந்தன என்பதைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கண்ட சான்றுகள் பகருகின்றன. அவை இன்னும் பூரணமாய் ஆராய்ந்து முடிவுகட்டப்பட வில்லை. ஆராய்ச்சிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை பற்றிய விபரம் காலகதியில் வெளியாகும்.

---

## தம்புல்ல [குகைக் கோவில்]

தம்புல்ல மலையைக் குடைந்து கட்டப்பட்ட குகைக் கோவில் (கி. மு. 89 – 76) வலகம்பாகு ஒளித்திருந்த இடம் என்றும், இக் குகைக் கோவில் முதலில் இவனாற் கட்டப்பட்ட தென்றும், பின்பு நிசங்கமல்லன் திருத்திக் கட்டி, ஒரு பொன் விக்கிரகத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பித்தான் என்றார். அதனால் இக் குகைக் கோவில் பொன் மலைக் குகைக் கோவில் என்று அழைக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது. மேலும் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனும் திருத்தியதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கு 47 அடி நீளமுள்ள அறிதுயில் கொள்ளும் புத்த விக்கிரகமும் இன்னும் அநேக புத்த விக்கிரகங்களும் பல்வேறு சிலைகளும் காணப்படுகின்றன. இக்குகைச் சுவர்களில் புத்த மத வரலாறுகளை விளக்கும் வர்ணச் சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன.

இக் குகைக் கோவில் வெவ்வேறு தனி அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இக் குகைக் கோவிலுக்குள் வெளிச்சம் வருவதற்குரிய வழிவகைகள் கிடையா. ஆகையால் குகையின் உட்பகுதி மிகவும் இருளாக இருக்கிறது. குகைக் கோவிலுக்கு உட்சென்று பார்க்க விரும்புவோர் மின் விளக்கு, மெழுகுதிரி அல்லது வேறுவிதமான விளக்குக் கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு கொண்டு சென்றால் தான் அங்குள்ள ஓவியங்களையோ விக்கிரகங்களையோ நன்கு பார்க்க முடியும். இப்பொழுது அரசாங்கம் மின்சார விளக்குகள் அமைக்க ஒழுங்கு உதவிகள் செய்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

இக் குகையின் முகட்டின் நடுப் பாகத்திலே வலப்பக்கத்தில் இருந்து இடப்பக்கம் நோக்கி — அதாவது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி — ஒரு வரை வழியாக நீர் வந்துகொண்டிருக்கிறது. நீர் சரிவிலிருந்து மேடு நோக்கி வந்து சொட்டுச் சொட்டாக ஒரு குறிப்பிட்ட இடத்தால் வந்து விழுவது விசித்திரமாகத்தான் இருக்கிறது. இந்த நீர் பரிசுத்த தெய்வத்தன்மை உடையதாகவும், புனிதம் உடையதாகவும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இது முதலாம் அறை எனப்படும் பெரிய அறையில் உண்டு. இந்த அறையில்

1. வலகப்பாகுவின் சிலை.
2. விநாயகர் படம். வர்ணச் சித்திரம்.
3. சுப்பிரமணியர் படம். ,, ,,
4. சுப்பிரமணியர் சிலை.

**உட்புறக் கூரையில்**

5. விநாயகர். வர்ணச் சித்திர ஓவியம்.
6. சுப்பிரமணியர். ,, ,, ,, (மயில்வாகனத்தில்)

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. விபீஷணர்.
8. இலட்சுமணர் — அநுமார்.

இவை போன்ற சித்திரங்களும் புத்த பெருமானின் 63 பெரிய சிலைகளும், 180 சிறு சிலைகளும் உண்டு. இந்த அறையிற் சில சிறந்த அரசர்களின் சிலைகளையும் காணலாம்.

இக் குகைக் கோவில்,

(a) வலகம்பாகு புத்த மத சுவிசேஷத்தை ஞாபகப்படுத்திக் கட்டியதென்றும்;

(b) வலகம்பாகுவால் சுமத்திராதேவியின் ஞாபகார்த்தமாகக் கட்டுவிக்கப்பட்டதென்றும்;

(c) வலகம்பாகு இறந்தபின், அவன் இராணி சுமத்திராதேவியாற் கட்டுவிக்கப்பட்டதென்றும்;

பலவிதமாகக் கூறப்படுகிறது.

ஆனால் இவ்வாறு நிலவும் கொள்கைகளை மறுத்துக் கலாநிதி மெண்டிஸ் என்ற சரித்திரப் பேராசிரியர் கூறுவதாவது:—

"தம்புல்லக் குகைக் கோவில்கள் வலகம்பாகுவாற் கட்டுவிக்கப் படவில்லை. அவை தீசன் என்ற அரசனால் புத்த பிக்குகளுக்கு அளிக்கப்பட்டதென்று ஒரு சாசனம் கூறுகிறதென்றும், அச்சாசனம் கூறும் தீசன் வலகம்பாகுவின் பின்னேனாய சதாதீசனாய் இருக்கலாம் என்றும்" கூறுவர்.

---

## நாஉல

தம்புல்லையிலிருந்து குன்றுகளுக்கு ஊடாகச் செல்லும் மார்க்கமாகச் சுமார் 12 மைல் பிரயாணம் செய்து சேனைப் பயிர்ச்செய்கை அதிகமாக உடைய பன்னம்பிட்டிய என்னும் இடத்தையும் அதன் பின் நாஉல என்னும் இடத்தையும் அடையலாம். இவ்விடம் ஆயிரம் அடி உயர மலைச்சரிவு ரேகை உண்டு. இதைத் தாண்டி உயர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைப் பகுதிகளுக்குச் செல்லவேண்டும். இச் சந்தர்ப்பத்தில் **மலைப் பிரதேசத்தைப்** பற்றி அறிந்து கொள்ளுதல் சாலவும் பொருத்த முடையதாகும்.

---

# மலைப் பிரதேசம்

கடல்மட்டத்தில் இருந்து சுமார் ஆயிரம் அடிக்கு மேல் உள்ள பகுதி மலைப் பிரதேசமாகும். அதிக உயரமுள்ள பகுதி 5000 — 7000 அடி உயரமுள்ள பிரதேசமாகும்.

மலைப் பிரதேசத்தில் முக்கியமாக மூன்று பீடபூமிகள் உண்டு அவையாவன :–

1. ஹற்றன் பீடபூமி.
2. வெலிமடைப் பீடபூமி.
3. கண்டிப் பீடபூமி.

இப் பிரதேசத்தின் தென் பகுதியில் பலாங்கொடை, கொஸ் லாந்தை போன்ற பீடபூமிகளில் செங்குத்தாகச் செல்லும் பாதாளம் போன்ற பள்ளத்தாக்குகள் இருப்பதை அவதானிக்கலாம்.

இப் பிரதேசத்தின் கீழ்ப்பகுதியில் பதுளையிலுள்ள துன் ஹிந்த நீர் வீழ்ச்சியையும், அளுத்நுவர மலைத்தொடரையும், தென் கீழ்ப் பகுதியில் தியலும என்னும் அழகான நீர் வீழ்ச்சியையும், தெற்கு மேற்குப் பகுதியில் லக்சப்பான, அபர்டின், டேவன் போன்ற நீர் வீழ்ச்சிகளையும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல கணவாய்களையும் காணலாம்.

மேற்குப் பகுதியில் உள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கணவாய்களுள் கலகெதரவும் ஒன்று. இதனூடாகவே 1765-ம் ஆண்டில் **வான்எக்** என்பான் புத்தளம் இருந்து கண்டியைக் கைப் பற்றச் சென்றான். இப்பொழுது கண்டி — குருநாகலை வீதி இவ் வழியே செல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலானுக் கணவாய் இப்பகுதியில் உள்ள இன்னொரு கணவாயாகும். இக் கணவாய் வழியேதான் போர்த்துக்கேயர் கண்டியைக் கைப்பற்றச் சென்றதும், டிசூசா, அஸவிடோ ஆகிய இருவரும் பொறிப்படுத்தப்பட்டு அழிக்கப்பட்டமையும் ஆகும். இப்பொழுது கேகாலை மார்க்கமாகச் செல்லும் கொளும்பு — கண்டி வீதி இக் கணவாயினூடே தான் செல்கின்றது.

இன்னும் சற்றுத் தெற்கில் கினிகத்தேனைக் கணவாய் உண்டு. போர்த்துக்கேயர் சீதவாக்கை இராச்சியத்தைத் தாக்கிய போது மாயாதுன்னை (யும் அங்கு அரசு செய்தோரும்) இவ் வழியாகவே மலைப் பிரதேசத்துக்குப் பின்வாங்கி ஒதுக் கிடத்துக்குச் சென்றனர். இப்பொழுது கொளும்பு — ஹற்றன் வீதி இவ் வழியே செல்கின்றது.

இனி நாஉலவின் பின் தொடர்ந்து வரும் மலைப் பிரதேசப் பகுதியிலுள்ள பட்டினங்களைப் பார்ப்போம்.


---

# நாலந்த

மெதுவாக உயர்ந்து செல்லும் பாதையினூடே 4 மைல் வரை பிரயாணம் செய்து நாலந்தாவை அடையலாம். இங்கு "கெடிகே" என்னும் பழைமைபொரு கோவில் உண்டு. இது இப்பொழுது வயல் ஒன்றின் மத்தியில் இருக்கிறது. இதன் சுவரும் கூரையும் செங்கற்களினுல் கட்டப்பட்டிருக்கிறது. இஃது எந்தக் காலத்தில் கட்டப்பட்டதென்பது தெரியவில்லை. இது தாந்திரிக நிகாயக் கொள்கையைப் பின்பற்றிய விஹாரை யென்று எண்ணப்படுகிறது. கலாநிதி கீல்ஹொத் அவர்கள் "கட்டிகா" என்ற சொல்லுக்கும் "கெடிகெய" என்ற சொல்லுக்கும் தொடர்புண்டென்றும், கட்டிகா விஹாரை கல்விக்கு மத்தியத் தானமாய் விளங்கிய தென்றும், ஆகவே இது இரண்டாவது நாலந்தா என்று ஐயப்படக் கூடியதாய் இருக்கிறதென்றும் கூறுவர்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அலுவிஹாரை

இது ஒரு கல் விஹாரையாகும். இந்த விஹாரையில் தான் வலகம்பாகுவினல் திரிபிடகம் எழுதுவிக்கப்பட்டது. இங்கே கிறீஸ்து காலத்துக்கு முந்தியுள்ள பிரஹ்மிய எழுத்துக்களால் ஆன சிலாசாசனம் ஒன்றும், ஸ்ரீபாத பங்கயத்தின் சிறிய உருவம் ஒன்றும் இருக்கின்றது.

---

## மாத்தளை

நாலந்தாவில் இருந்து தேயிலை, றப்பர், கொக்கோ முதலிய பயிர்கள் சூழ்ந்த வீதி வழியே சென்று மாத்தளைத் தொடர் அல்லது நக்கிள்ஸ் தொடர்ப் பிரதேசத்தின் முக்கியத் தானமாகிய மாத்தளையை அடையலாம். இதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 1150 அடி ஆகும். இங்குள்ள பூமி டொலொமயிற் என்னும் வகையைச் சார்ந்த மண்படையை உடையது.

கண்டி இராசதானியாய் இருந்த காலத்திலே இது யுவராஜாவின் இருப்பிடமாக இருந்திருக்கிறது. சேனரதனுடைய புத்திரனாகிய விஜயபாலன் இங்கிருந்து அரசாண்டான். இது வடபகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் இருந்து வரும் சத்துராதிகளைத் தடுத்து நிறுத்தும் இடமாக அமைந்துள்ளது. பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றவும் தமது பரிபாலனத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் "மக்டொவல்" என்னுங் கோட்டையை இங்கு நிறுவினார்கள். 1848-ம் ஆண்டு கலகத்திலும் மாத்தளை சரித்திரத்தில் ஒரு முக்கிய இடம் பெற்றது.

---

## கட்டுகாஸ் தோட்டை

மாத்தளையிலிருந்து சுமார் 14 மைல் தூரத்தில் உள்ள கட்டு காஸ் தோட்டை இலங்கையின் புராதன பிரிவாகிய றுஹுணு, மாயா, பிஹிற்றி ஆகிய மூன்று பிரதேசங்களும் ஒன்று கூடும் இடமாகும். மகாவலி கங்கையின் தொங்கு பாலமும், யானை குளிப் பாட்டும் இடமும், ஆங்குள்ள வயல்கள் தென்னந் தோப்புகளின் காட்சிகளும் மிகவும் ரமணீயமானவையும் மனோரம்மியமானவையா யும் இருக்கின்றன. இது இயற்கை அழகுவாய்ந்த ஒரு இடமாகும்.

---

## கண்டி

கண்டி வரண்ட பூமிக்கும் ஈரலிப்பான பூமிக்கும் இடையில் மகாவலிகங்கையின் வளைவிலே நதிக்குத் தென் புறத்தில் அமைந்து, மத்திய மாகாணத்தின் தலைநகராக விளங்குகின்றது. கொளும்பு, குருநாகல், நுவரஎலிய, திருக்கோணமலை ஆகிய நகரங்களின் பெரு வீதிகள் சந்திக்கும் கேந்திரத் தானமாகவும், மலைநாடு முழுவதற்கும் பிரதான வியாபார மத்தியத் தானமாகவும் கண்டி விளங்குகின்றது.


கண்டியின் புராதனப் பெயர் செங்கடகல புரமாகும். 1592-ம் ஆண்டில் இருந்து 1815-ம் அண்டு வரை கண்டி இலங்கையின் ஒரு முக்கிய சிங்கள இராசதானியாக இருந்து வந்தது. 2-ம் விக்கிரம பாகுவால் கண்டி முதன் முதலில் இராசதானியாக்கப் பட்டது. அதன்பின் முதலாம் விமலதர்மசூரியன் தனது பிரதான தலைநக ராக்கினன். சத்துருக்கள் தாக்க முடியாத முறையில் இயற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்களை உடையதாய் முந்நூறு வருடங்களுக்கு மேல் பாதுகாப்புடன் விளங்கியது. தலதா மாளிகாவை, அஸ்கிரி விஹாரை மற்றும் தேவாலயங்கள் இவ்விடம் விசேஷமாய் உள்ள சமய சம்பந்தமான கட்டிடங்கள் ஆகும். அகில உலக புத்த சமயத்தவர்களும் போற்றிப் பூசிக்கும் புத்த பகவானின் தந்ததாது தலதா மாளிகாவில் உண்டு. வருடந் தோறும் நிகழும் கண்டிப் பெரஹர விழாவானது சிங்களரின் பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும் பிரதிபலிக்கிற தெனலாம். இராணிமாளிகை, நூதனசாலை போன்றவை கண்டியிலுள்ள மற்றும் விசேஷ கட்டிடங்களாகும். இங்கு மலைநாட்டு மனை அமைப்பு முறைகளை விசேஷமாய் அவதானிக்கலாம்.

கண்டி நகரை அழகு படுத்தும் கண்டி வாவி கடைசிக் கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரமராச சிங்கனுற் கட்டுவிக்கப்பட்டது. இவ்வாவி கண்டியின் இயற்கை அழகை அதிகப்படுத்தும் முறையில் அமைந்துள்ளது.

---



## தலதா மாளிகாவை [கண்டி]

கண்டியிலுள்ள தலதா மாளிகாவை கி. பி. 304 – 332 வரை ஆண்ட ஸ்ரீ வர்ணன் என்னும் அரசனுற் கட்டுவிக்கப்பட்ட தென்பர் ஒரு சாரார்.

ஆனால் மஹாவம்சம் என்னும் இதிகாசம் பின்வருமாறு கூறு கின்றது. கண்டியின் முதலாம் அரசனாகிய விமலதர்மசூரியன் அரசு கட்டில் ஏறியதும் கண்டியில் தந்ததாதுவை வைத்துப் பூசிப்பதற் காக இரண்டு மாடிகள் கொண்ட தலதா மாளிகாவைக் கட்டுவித்தான் என்றும், பின்னர் இரண்டாம் விமலதர்மசூரியன் அதை மூன்று மாடிகளுடையதாகப் புனருத்தாரணஞ் செய்வித்தான் என்றும் கூறப் படுகின்றது. இக் கட்டிடமானது காலகதியிற் பழுதடைந்து, பின் ஒல்லாந்தரால் உடைக்கப்பட்டதும், அதே பாணியில் கடைசிச் சிங்களக் கண்டி மன்னனாகிய நரேந்திரசிங்கன் அம்மாதை இரண்டு மாடிக் கட்டிடமாய்க் கட்டுவித்தும், சாதகக் கதைகளை ஓவியமாகக் கீறவும் செய்வித்தான். இப்போது காணப்படும் கர்ப்பக்கிரகம் — அதாவது மூலஸ்தானம் — கீர்த்தி ஸ்ரீ இராச சிங்கனாற் கட்டுவிக் கப்பட்டது. மேற்படி கீர்த்தி ஸ்ரீ இராச சிங்கன் வைத்து வணங் கிய புத்த பெருமானின் மாணிக்கச் சிலையும் இரத்தின மாலை ஒன் றும் தலதா மாளிகாவில் உண்டு.

இப்போதுள்ள எண்கோணக் கட்டிடத் தலதா மாளிகாவும், கண்டி வாவியும் கடைசிக் கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராசசிங்க னால் கட்டுவிக்கப் பட்டது.

---

## நூதன சாலை [கண்டி]

தலதா மாளிகாவைக் கருகில் கண்டி நூதனப் பொருட் காட் சிச் சாலை உண்டு. இங்கு பண்டைய கண்டி மன்னரின் ஆயுதங்கள், அணிகலன்கள், பல்லக்குகள், அக்காலப் பெண்களின் ஆடை ஆபர ணங்கள், மரப் பொருள்கள், மற்றும் உலோகப் பொருள்கள், ஒல் லாந்தர் பிரித்தானியருடன் செய்த உடன்படிக்கைகளின் பிரதிகள், அக்காலத்து அந்நிய இராச தூதர் கண்டி அரசவையில் சமுகம் அளித்த முறைகள் அடங்கிய படங்கள் போன்ற அநேக விஷயங் கள் அங்கு இடம் பெற்றிருப்பதை அவதானிக்கலாம்.

இந் நூதன காட்சிச் சாலைக்குச் சற்றுத் தூரத்தே, கண்டி வாவிக்கரையிலே கைப்பணிப் பொருட்காட்சிச் சாலை ஒன்றுண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கு கண்டியன் கலை முறையிற் செய்த வெள்ளி, பித்தளை, பிரம்பாலான பொருள்கள் விற்பனைக்குப் பெறலாம்.

**கண்டி வாவி:** தலதா மாளிகாவைக்கு முன்னால் கண்டி நகருக்கு விசேட அழகைக் கொடுக்கும் கண்டி வாவி உண்டு. மாலை வேளைகளில் இதன் காட்சி மிகவும் மனோரம்மியமாயிருக்கும்.

---

## கிருஷிக பாடசாலை [பேராதனை]

இக் கிருஷிக பாடசாலை ஓர் பரிசோதனை நிலையமாகும். இங்கு கிருஷிக முறைகள், மிருகவளர்ப்பு, கோழி வளர்ப்புப் பண்ணைகள் சம்பந்தமாகச் சாதனை மூலமும் போதனை மூலமும் பயிற்சி கொடுக்கும் பாடசாலையாகும். இங்கு சுமார் 100 பேர் வரை பயிற்சிபெற வசதி உண்டு. நவீன உபகரணங்களை விவசாயத்தில் உபயோகிக்கும் முறைகள், உபயோகித்துக் கூடிய பயன்பெறு முறைகள், இலங்கையிலும் மற்றும் இடங்களிலும் காணப்படும் பல்வேறு தாவர வகைகள், பழவகைகளின் மாதிரித் தோட்டங்கள், கலப்பினப் பசு, கோழி முதலியவற்றின் தன்மை இன விருத்தி — இவைகளை அவ்வவற்றுக்குரிய ஆய் கூடங்களிலேயே நேர் முறையிற் பயிற்சி கொடுக்கப்படுகின்றது. மாணவர் வருடா வருடம் (1955) உணவு முதலியவற்றுக்காக ரூபா 450/- கட்ட வேண்டும். ஆனால் படிப்பதற்குச் சம்பளம் கிடையாது. பாடசாலைக்குரிய நிலப்பரப்பு 550 ஏக்கர். ஆனால் 275 ஏக்கரில் தான் பயிர் செய்யப்படுகின்றது.

மேற்படி விவசாய பாடசாலைக் கண்மையில் மகாவலிகங்கையில் போடப்பட்ட தொங்கு பாலத்தால் பேராதனைப் பூந்தோட்டத்துக்குச் செல்லலாம்.

---




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொல்கொல்ல

இங்கு சுவாத்தியம் குளிர்ந்ததாய், ஆனால் இன்பங் கொடுக்கும் அளவினதாய் மெல்லென் றிருக்கும். இங்கு அரசினர் பெண்கள் பயிற்சிக் கலாசாலை உண்டு. மேலும் உலகப் பிரசித்தி வாய்ந்ததும் இலங்கைக் கூட்டுறவு உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பயிற்சிக் கலாசாலையும் இங்கு உண்டு. இங்கு மிகவும் செழுமையாகத் தென்னை மரங்கள் வளர்ந்திருப்பதை அவதானிக்கலாம். அண்மையில் உள்ள உயன்வத்தையில் இன்னும் ஒரு பெண்கள் விசேஷ பயிற்சிக் கலாசாலை உண்டு.

---




# பேராதனைப் பூந்தோட்டம்

கடல் மட்டத்தில் இருந்து சுமார் 1570 அடி உயரமும், மூன்று பக்கமும் மகாவலி கங்கையாற் சூழப்பட்டதுமான பேராதனையில் புகழ் பெற்ற பூந்தோட்டம் இருக்கிறது. தவிரவும் அங்கு புதிதாய் அமைக்கப்பட்டுள்ள சர்வகலாசாலையினாலும் விவசாய பாடசாலையினாலும் பேராதனையின் புகழும் மதிப்பும் இன்னும் அதிகமாகச் சிறப்புறுகின்றது. இப்பொழுது விவசாய பாடசாலை இருக்கும் இடமே சரித்திரப் புகழ் வாய்ந்த கன்னொறுவா யுத்தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்த இடத்தின் ஒரு பகுதியாகும். மேற்குப் பக்கத்தில் இருந்து கண்டியை அணுக எண்ணும் எதிரிகள் அனைவரும் இந்த இடத்தில் மகாவலி கங்கையைக் கடக்க வேண்டும். அவ்வாறாய சந்தர்ப்பங்களில் அதி பயங்கர யுத்தங்களுக்கு இலக்காகி இருந்த இடம் இது வாகும். அவற்றுள் இரண்டாம் இராச சிங்கனுக்கும் சேனாதிபதி மெல்லோவுக்கும் இடையில் நடந்த யுத்தம் முக்கிய இடம் பெறுகின்றது. முதலாம் விமலதர்ம சூரியனின் தந்தையான வீரசுந்தர பண்டாரனுடைய பிறப்பிடமும் பேராதனை ஆகும்.

---

# இலங்கைச் சர்வகலாசாலை [பேராதனை]

இலங்கையிலுள்ள புதிய சர்வகலாசாலை பேராதனைப் பூந்தோட்டத்துக்கு அண்மையில் உள்ளது. 1942-ம் ஆண்டு ஜூலை மாதம் முதலாந் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை வைத்திய கலாசாலை 1870-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அது 1921-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யூனிவர்சிட்டிக் கலாசாலையுடன் சேர்க்கப்பட்டது.

இப்பொழுது (1955) இலங்கை சர்வகலாசாலையில் சுமார் ஆயிரம் மாணவ மாணவிகள் கல்வி கற்கிறார்கள். மேற்படி சர்வகலாசாலைக்குச் சொந்தமான 1700 ஏக்கர் காணி நிலம் உண்டு. இன்னும் சுமார் 700 ஏக்கர் நிலம் வரை சுவீகரிக்கப்பட இருக்கிறது.

அங்கு இப்பொழுது எட்டு விடுதி மண்டபங்கள் உண்டு. அங்கு படிக்கும் ஒவ்வொரு மாணவ மாணவியும் தங்கி இருப்பதற்குத் தனித் தனி அறை தளபாடங்களுடன் கொடுக்கப்படுகின்றது.

மேற்கூறிய எட்டு விடுதி மண்டபங்களிலும் ஐந்து ஆண்களுக்கு உரியவை. அவையாவன :-

| | | | |
|---|---|---|---|
| 1. | அருணாசலம் மண்டபம். | — | 64 அறைகள். |
| 2. | ஜயதிலக மண்டபம். | — | 64 „ |
| 3. | மார்ஸ் மண்டபம். | — | 84 „ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மார்க்ஸ் பெர்னுந்து மண்டபம் — 86 அறைகள்.
5. இராமநாதன் மண்டபம் — 283 „

ஒரு மாணவனுக்குச் செலவு நாளுக்கு சுமார் ரூபா 3/- ஆகும். வருடத்துக்கு ரூபா 630/-. அநேக மாணவருக்கு — மொத்தத் தொகையில் சுமார் மூன்றில் ஒரு பகுதி மாணவர்களுக்கு — உதவிப் பணம் வழங்கப்படுகின்றது. (குறிப்பு: இவ்விவரம் 1955-ம் ஆண்டு எடுத்த குறிப்பின்படி.)

சர்வகலாசாலை நாடக அரங்கு மண்டபத்தில் 525 பேருக்கு இடவசதி உண்டு. மேற்படி மண்டபத்தில் இலங்கைக் குரித்தான கலையின் செல்வாக்கைக் காணலாம். பட்டமளிப்பு மண்டபம் ஆயிரத் துக்கு மேற்பட்ட ஆசனங்களை உடையது. வாசிகசாலை புறம்பாக உண்டு. இப்பொழுது (1955) அடுக்கு மாளிகை கட்டப்படுகின்றது.

விரிவுரை மண்டபங்கள் மிக விசாலமான முறையில் அமைக்கப் பட்டுள்ளன. விஞ்ஞான விருத்திக்கான ஆய் கூடங்கள் ஆரம்பிக் கப்பட்டுப் பூரணம் அடையும் நிலையை நோக்கிச் சென்று கொண் டிருக்கின்றன. இன்னும் சர்வகலாசாலைக்கு வேண்டிய பல கட்டிடங் கள் தொடங்கப் பட்டு வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல்கலைக்கழகத் துணை வேந்தர் விடுதி, பேரா சிரியர் விடுதிகள் பல உண்டு.

சர்வகலாசாலைச் சமூகம் பேராதனைப் பகுதிக்கு ஒரு புத்துயிர் கொடுத்துக் கொண்டு வருகிறது. பேராதனை காலக்கிரமத்தில் கலைக் கோயிலின் மத்தியத் தானமாய்க் கலா பீடமாக விளங்கும் நிலையில் தீவிரகதியில் வளர்ந்து கொண்டு வருகிறது.

---

## கிருகம

பேராதனையில் இருந்து 1000 — 3000 அடி உயரத்தில் அமைந்த இடங்களுக்கு ஊடாக, மகாவலி கங்கைக் கரையோரமாக 8 மைல் தூரத்தில் கிருகம உண்டு. இங்கு அரசினர் பயிற்சிக் கலாசாலை உண்டு.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுகண்ணாவை

கடல் மட்டத்திலிருந்து 1700 அடி உயரமானது. கொழும்பு — கண்டிப் பாதையில் உள்ள ஒரு வியாபாரத்தலம். பலாணுக் கணவாய்க்கு அருகில் உள்ளது. இங்கு பல யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றுள் முதலாம் இராசசிங்கனுக்கும் கோணப்பு பண்டாரனுக்கும் இடையில் நடந்த யுத்தமும், அஸவேதுவுக்கும் முதலாம் விமலதர்ம சூரியனுக்கும் இடையில் நடந்த யுத்தங்கள் பிரதானமானவை. மலை நாட்டுக்கு ஒரு வாயிலும், ஒரு கோட்டை போலவும் அமைந்திருக்கிறது கடுகண்ணாவை நகரமாகும்.

# கம்பளை

கடுகண்ணாவையில் இருந்து 10 மைல் தூரத்தில் அல்லது கிறுகமத்திலிருந்து சுமார் 8 மைலுக்கு அப்பாலும் கம்பளை இருக்கின்றது. இது ஒரு பழைய இராசதானியாகும். இப்பொழுது சனநெருக்கம் உள்ள ஒரு பட்டினமாகும். கம்பளை புகையிரதஸ்தானத்துக்குச் சற்றுத் தூரத்தில் இதை இராசதானியாகக் கொண்டு அரசாண்ட நாலாம் புவனேக பாகுவின் மாளிகை சிதைவுற்ற நிலையில் நியகம்பாய என்னும் விஹாரைக் கண்மையில் காணக் கூடியதாக இருக்கிறது. மேலும் புவனேகபாகுவின் பிரிவேன இங்கு இருந்தது. சமீபத்தில் உள்ள வல்லஹாகொடை என்னும் இடத்தில் ஒரு தேவாலயமும் உண்டு.

நாலாம் புவனேகபாகு இலங்காதிலக விஹாரையையும், கடலதெனிய விஹாரையையும் கட்டுவித்தான். இவைகளில் இருந்து இந்து சமயச் செல்வாக்கு, அக்காலக் கலை, பண்பாடு முறைகளை அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லங்காதிலக விஹாரை

இவ் விஹாரை தவுலாகலையில் இருந்து சுமார் 3 மைல் தூரத்தில் உண்டு. இதைச் சுற்றிப் பல தேவாலயங்கள் உண்டு. இவ் விஹாரையின் உட்புறச் சுவர் கண்டிக் காலத்து அமைப்பு முறையைச் சார்ந்தது. இதைப் பற்றி வேறுவிதமாகக் கூறுவாரும் உளர். சுதையாலான பெரிய இரண்டு விக்கிரகங்களும், சயன நிலையில் உள்ள விக்கிரகம் ஒன்றும் இங்கு உண்டு. பின்னைய விக்கிரகத்தின் மேல் மகர தோரணமும், அதன்மேல் தெய்வ உருவங்களும் இருக்கின்றன. தவிரவும் வாயிற் பக்கத்தில் இந்து சமய சம்பந்தமான பல விக்கிரகங்கள் இருக்கின்றன.

---

# கடலாதெனிய விஹாரை

இதுவும் தவுலாகல பாதையில் உள்ளது. இந்த விஹாரை நாலாம் புவனேக பாகுவின் மந்திரி சேனுதிலங்காரன் என்பவனால் மலைக்குன்றில் உள்ள அழகிய கருங்கல் பீடத்தில் கட்டப்பட்டது. இங்கு ஒரு சிறிய குகை உண்டு. அதற்குள் புத்த விக்கிரகம் உண்டு. அதற்கண்மையில் 15 அடி உயரம் உள்ள கருங்கல்லாலான ஒரு மண்டபமும் அதற்கு மேல் அழகிய சைத்தியமும் இருக்கின்றது. மேலும் அங்கு சமாதி விக்கிரகமும், அதைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் விக்கிரக அறைகளும் இருக்கின்றன. லங்காதிலக விஹாரை செங்கல்லாற் கட்டப்பட்டது. ஆனால் கடலாதெனிய விஹாரையோ இந்து தேவாலயங்களைப் போலவே முற்றும் தனிக் கல்லினுற் கட்டப்பட்டது. இதன் சிற்பமுறை விஜயமன்னர் காலத்து ஆலயச் சிற்பமுறையை ஒத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவர எலிய

நுவரெலி இலங்கையின் மிக உயர்ந்த பீடபூமியில் அமைந்துள்ளது. கடல்மட்டத்திலிருந்து 6208 அடி உயரமானது. இது குளிர் மிகுந்த ஒரு நகரமாகும். நல்ல வீதிகள், குதிரைப்பந்தய மைதானம், சோலைகள், மீன்வளர்ப்புத் தடாகங்கள் முதலியன உண்டு. தேசாதிபதி இங்கு வசிப்பதற்கெனப் பிரத்தியேகமான மாளிகை ஒன்றுண்டு.

இலங்கையில் அதிக உயரமான **பிதுறுதலாகல** மலை இந்நகரின் கீழ்ப்பாகத்தில் இருக்கிறது. இந்நகர் ஒரு சுகஸ்தானமும், கறிவர்க்கம், பழவர்க்கம் ஆகியவற்றுக்குப் பெயர் போன இடமாகும்.

---



# ஹக்கலை


நுவரெலியிலிருந்து சிறிது தூரத்தில் உள்ளது ஹக்கலை. இங்கு ஒரு சிறந்த பூங்கா உண்டு. உடலை ஊடுருவிச் செல்லும் குளிர்ந்த காற்று; உள்ளத்தை உவப்பிக்கும் பச்சைப்பசேலெனும் தோற்றம்; பலவர்ணஜாலப் பூக்கள்; இவ்வாறான காட்சியையும் உணர்ச்சியையும் கொடுப்பது இப்பூங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது அசோக வனம் என்றும் சொல்லப்படும். இங்குதான் இராவணன் சீதையைச் சிறை வைத்திருந்தான். ஹக்கலைக் குன்றின் சிகரத்தில் சீதையைச் சிறை வைத்த குகை உண்டென்றும், ஆங்கு அது சம்பந்தமான சில சின்னங்களுண்டென்றும், அவ்விடத்தைச் சென்றடைதல் மிகவும் சிரமமான தென்றுங் கூறப்படுகிறது.

ஹக்கலைப் பூங்கா 1861-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| கடல்மட்டத்திலிருந்து உயரம் | 5581 | அடி. |
| மழை வீழ்ச்சி | 94·81 | அங்குலம். |
| உஷ்ணம் | 60·05 | பாகை. |
| கூடிய உஷ்ணம் | 82·02 | ,, |
| குறைந்த உஷ்ணம் | 38·08 | ,, |
| விஸ்தீரணம் | 55 | ஏக்கர். |
| ஹக்கலைச் சிகரத்தின் உயரம் | 6981 | அடி. |



## சீதா எலிய

சீதா எலிய ஹக்கலைப் பூங்காவாகிய அசோக வனத்தில் இருந்து சுமார் 2 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கு ஒரு சீதை அம்மன் கோவில் உண்டு. இக் கோவிலுக்குப் பக்கத்தே ஒரு நீர்ச்சுனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. அது கற்பாறைகளுக் கூடாக மிக வேகமாக ஓடி வருகிறது. இச் சுனையிலேதான் சீதா தேவி குளித்ததாகக் கூறப்படுகிறது. அதற்குச் சான்றாக சீதை இருந்து குளித்ததாக ஓர் இடத்தை அச் சுனையிற் குறிப்பிட்டுக் காட்டுவர் சிலர்.

பின் நுவரெலியாவிலிருந்து நனு ஓயா, லிண்டுலா, வட்டகொடை, ஹற்றன், டிக்கோயா ஆகிய இடங்களுக்கு ஊடாகச் செல்லும் பொழுது பாதையின் இருமருங்கிலும் தேயிலைத் தோட்டங்களையும், இந்தியத் தொழிலாளிகள் தேயிலைச் செடிகளில் தளிர்களைக் கொய்வதையும், அதை மேற்பார்வை செய்யுங் கங்காணிமார்களையும், தேயிலை ஆலைகளையும் காணலாம்.

---

## தலவாக் கொல்லை




தேயிலை ஆலை



தேயிலை பறித்தல்

224 R-C 13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேயிலை நிறுத்தல்




தேயிலை அரைக்கும் யந்திரம்




தேயிலை தரப்படுத்தும் யந்திரம்

## சிவனொளிபாத மலை

சிவனொளிபாதம், ஸ்ரீபாதம், சமந்தகூடம், ஆதம்மலை, அடம்ஸ் பீக் என்னுஞ் சொற்கள் ஒரு பொருளையே குறிக்கின்றன. இது சாதி மத பேதமின்றி எல்லா மதத்தவரும் — புத்த சமயத்தவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயத்தவர், கிறிஸ்து சமயத்தவர் ஆகிய அனைவரும் வேறு பாடின்றிச் சென்று வழிபாடாற்றும் புண்ணியத் தலமாகும். இம் மலை சப்பிரகாமமாகாண எல்லையை அழகுபடுத்தி அதிக தூரத்துக் கப்பாலும் பக்த கோடிகளுக்குக் காட்சி கொடுக்கும் முறையில் வானளாவி உயர்ந்து நிற்கின்றது. இது கடல் மட்டத்திலிருந்து 7360 அடி உயரம் உள்ளது. ஆகையால் இதை எல்லாக் காலங்களி லும் சென்று தரிசிக்க முடியாது. மார்கழி மாதம் தொடங்கி வைகாசி மாதம் வரை சென்று தரிசிக்கலாம். அக் காலங்களில் அதற்கு வேண்டிய பிரயாணவசதி ஒழுங்குகளும் அரசாங்கம் செய்து கொடுக்கிறது.

சிவனொளிபாதத்திற்குச் செல்வதற்கு இரண்டு பாதைகள் உள. இரத்தினபுரியில் இருந்து செல்லும் பாதை மிகவும் கஷ்டமானது. மற்றது மஸ்கேலியாவுக்கு ஊடாகச் செல்லும் பாதை. இப்பாதை வழியே சென்று, சிவனொளி பாதத்தின் அடிவாரத்தை அடைந்து, அங்கிருந்து உச்சியை அடைய எட்டு மைல் ஏறி ஆகவேண்டும். ஐந்து மைல் சரிவாகவும், மூன்று மைல் செங்குத்தாகவும் அமைந் திருக்கிறது. சரிவாகச் செல்லும் பாதை செப்பனிட்டுச் சாதாரண மான படிகள் உடையதாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் செங் குத்தாகச் செல்லும் மூன்று மைலுக்கும் சிமெந்தினால் படிக்கட்டு கள் கட்டப்பட்டு நடுவிலே கம்பி போடப்பட்டிருக்கிறது. இக்கம்பி படிக்கட்டுகளை இரண்டு பகுதிகளாகப் பிரித்து, ஒன்று ஏறுவதற் கும் மற்றது இறங்குவதற்குமாக வகுக்கப்பட்டிருக்கிறது.

சரிவான ஐந்து மைல் பாதை ஊசிமலை என்னும் பகுதியிலே முடிவடைகிறது. இங்கு இருந்து செங்குத்தான ஏற்றம், இடைக் கிடை தங்குமடங்கள் உண்டு. தாகசாந்தி செய்யும் இடங்கள் உண்டு. ஊசிமலை சம்பந்தமான பல ஐதிகக் கதைகள் உண்டு. மேலும் பரி பக்குவம் அடைதல் பற்றிப் பட்டணத் தடிகள் கூறிய பாட்டை இந்த ஊசிமலை மரபுடன் தொடர்பு படுத்தி ஒப்பு நோக்கலாம் என்று சிலர் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளிபாத மலையின் உச்சி

மேலே மலையின் உச்சியில் பாதச் சுவடு உண்டு. வெளியில் தெரியும் சுவட்டு அடையாளம் மிகவும் பெரிதாக இருக்கிறது. ஆனால் உண்மையான சுவடு அதுவன்று. உண்மையான சுவடு இரத்தினக் கற்களால் அலங்கரிக்கப்பட்டுச் சிமெந்தினால் மூடிக் கட்டப்பட்டுள்ளது. ஏனெனில் வணங்கும் யாத்திரிகர்களால் உண்மைச் சுவடு பங்கமுறும் என வெண்ணி, அதை மூடிக்கட்டி அதைத் தரிசித்து வணங்கத் துவாரம் விடப்பட்டிருக்கிறது.

மேற்படி சுவடு சம்பந்தமாக,

1. இந்துக்கள் சிவபெருமானின் ஊன்றிய பாதத்தின் சுவடு என்றும்,
2. புத்தர்கள் புத்த பெருமானின் பாதச் சுவடு என்றும்,
3. கிறிஸ்தவர்கள் ஆதாமினுடைய பாதச் சுவடு என்றும் கூறுவர்.

இதைத் தவிர மலையின் உச்சியில் ஒரு பக்கத்தில் விஷ்ணு கோவில் ஒன்றுண்டு. இங்கு ஒருவர் சந்தனப் பேழை ஒன்று வைத்துக் கொண்டு அங்கு தரிசனஞ் செய்ய வரும் பக்த கோடிகளை ஆசீர்வதித்துத் திலகம் இடுவர்.

புத்த பெருமான் இலங்கைக்கு மூன்று முறை எழுந்தருளினர் என்றும், அப்பொழுது மஹியங்கனையிலும், ஸ்ரீபாத பங்கய மலையிலும், களனியாவிலும் தங்கி அருளினரென்றும் மஹாவம்சம் கூறுகிறது.

தீபவம்சம் கூறுவதாவது :

சமந்த கூடம் என்ற பெயர் காரணப் பெயர் ஆகும். சமன் என்ற தெய்வம் வசித்து வந்தமையால் சமந்த கூடம் எனப் பெயராயிற்று. புத்த பெருமான் எழுந்தருளியபோது, "சமன்" தெய்வத்தின் வேண்டுகோளுக் கிணங்கி ஞாபகார்த்தமாகத் தம் பாதச் சுவட்டைப் பதித்துச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 1065-ல் முதலாம் விஜயபாகு யாத்திரீகர்களை உபசரிப்பதற்கென மானியங்களை வழங்கினான்.

கி. பி. 1250-ல் இரண்டாம் பராக்கிரமபாகு சமந்தகூடத்துக்கு ஏறும் ஒற்றையடிப் பாதை ஒன்று செப்பனிடுவித்தான்.



# நோட்டன் பாலம்

ஹற்றனிலிருந்து வட்டவளைக்குச் செல்லும் வழியின் இருமருங்கிலும் தேயிலைத் தோட்டங்களையும் அழகு சொட்டுங் காட்சிகளையும் கண்டு களித்துக் கொண்டு நோட்டன் பாலம் செல்லவேண்டும்.

கல்கமுவா ஓயாவை மறித்து நிற்கும் மலையைக் குறுக்கே 1¾ மைல் தூரம் குடைந்து நீர் எடுக்கப்படுகின்றது. இல்லாவிட்டால் 14 மைல் தூரம் சுற்றித்தான் நீர் இங்கு வரவேண்டும். 4 அடி விட்டமுள்ள குழாய்களின் மூலம் நீர் இங்கு வந்து சேர்கின்றது.

55 அடி ஆழமான 4 குழங்கள் கட்டப்பட்டுள்ளன. இரண்டு குளங்களின் திட்டம்தான் (1954) பூர்த்தி அடைந்திருக்கின்றது. ஏனையவை திட்டப்படி அடுத்தடுத்த ஆண்டுகளில் பூர்த்தியடையும். இங்கிருந்துதான் கொழும்பு, கண்டி, நுவரெலி ஆகிய இடங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சாரம் விநியோகிக்கப் படுகின்றது. நோட்டன் பாலத்துக்குப் பக்கத்துள்ள நீர்வீழ்ச்சி லக்சப்பானு நீர் வீழ்ச்சியாகும்.

நோட்டன் பாலத்திலிருந்து மேற்கு நோக்கிப் போகும்போது செங்குத்தான மலைச் சரிவுகளில் இறங்கிச் செலல வேண்டியிருப்ப தால் இச் சந்தர்ப்பத்தில் தென்மேல் சமவெளியைப் பற்றி அறிதல் மிகவும் இன்றியமையாததாகும்.

---

# தென்மேல் சமவெளி

வடக்கில் தெதுறு ஓயாவில் இருந்து தெற்கில் வளவ கங்கை வரை உள்ள பிரதேசம் தென்மேல் சமவெளி எனப்படும். இக் கரையோரத்தில் ஆயிரம் அடி வரை உயரம் உள்ள இடப்பகுதிகள் இச் சமவெளியுள் அடங்கும். அவிசாவலையில் இருந்து கொளும்புக் குப் போகுந் தெரு எவ்வாறு மலைச் சரிவுகளுக்கிடையிலும், பள்ளத் தாக்கிலும் செல்கிறதென்பதைப் போகும்போது நன்கு அவதானிக்கலாம். இவ்வாறன இயற்கைத் தன்மையையே இப்பகுதிச் சமவெளியில் சிறப்பாக, அவிசாவலை — இரத்தினபுரி — பாணந் துறைக்குச் செல்லும் வீதிகளில் அவதானிக்கக் கூடியதாய் இருக்கும். இச்சமவெளியின் தென்பாகத்தே இறக்குவானைத்தொடர் அல்லது புளத்தோட்டைத் தொடர் என்னும் மலைத் தொடர் உண்டு. இப் பகுதியை நீர்ப்பாய்ச்சும் ஆறுகளின் அண்மையில் நெற்கழனிகள் மலிந்து கிடப்பதைக் காணலாம். இப் பகுதியில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுவதுண்டு.

இச் சமவெளியின் வட பகுதி பெரும்பாலும் சமபூமியாகவே காணப்படுகின்றது. மத்திய தென் பகுதிகளில் சில இடங்களில் பழைய கறுவாத் தோட்டங்களும், றப்பர் தோட்டங்களும் உண்டு.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கினிகத்தேனை

கினிகத்தேனை மலைநாட்டுக்கு மேற்குப் பக்கத்தில் இருந்து வருவதற்கு உள்ள கிட்டிய பாதையில் இருக்கும் ஒரு ஸ்தானமாகும். நோட்டன் பாலத்தில் இருந்து கினிகத்தேனையை நோக்கிச் செல்லும் போது செங்குத்தான பாதையையும், பள்ளத் தாக்கையும் காணலாம். நோட்டன் பாலப் பகுதி கடல் மட்டத்தில் இருந்து 3000 அடி உயரமும், அதற்கு சுமார் 3 மைலுக்கு அப்பால் 1000 அடி உயரமான பகுதியையும், மேலும் 10 மைல் சென்றபின் 500 அடி உயரமான பகுதியையும் — இவ்வாறான செங்குத்தான சரிவுகளைத் தாண்டிச் செல்வதை அவதானிக்கலாம். இப் பகுதிகளில் தான், டேவன் நீர்வீழ்ச்சியும், அபர்டீன் நீர்வீழ்ச்சியும் இருப்பதையும் அவதானிக்கலாம். இவ் வீதி வழியாய் அவிசாவலையை அடைந்து பின் கொழும்பை அடையலாம்.

---

# கொழும்பு




...நூலகப் பிரிவு
...நூலக சேவை

பாராளுமன்றக் கட்டிடம்

இலங்கை அரசாங்கத்தின் அதிகாரபீடமாகிய மக்கள் பிரதிநிதி சபை இங்குதான் கூடுகிறது. இதற்குச் சற்றுத் தூரத்திலே மது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசாதிபதியின் வசிப்பிடமாகிய இராணி மாளிகையும், அதற்கு அருகாமையில் கோர்டன் நந்தவனமும், துறைமுகமும் அதன் காரியாலயமும், செனற் சபை மண்டபமும், மந்திரிசபை காரியாலயமும், தபாற் கந்தோர் தலைமைக் காரியாலயம் முதலியனவும் உண்டு.

# ஏரிக்கரைப் பத்திரிகை நிலையம்

இப் பத்திரிகை நிலையத்தில் அச்சடிக்கும் யந்திரம் சம்பந்தமாக அநேக நுணுக்க விஷயங்களை அறியமுடியும். ஒரு மணித்தியாலத்துக்கு 35000 புதினத்தாள் அச்சடித்து மடித்து வெளியே கொடுக்கும் யந்திரத்தின் விசித்திரமான வேலையைப் பார்க்கலாம். தவிரவும் மேற்படி அச்சடிக்கும் புதினத்தாள் ஒரு சுருளின் நீளம் 3½ மைல் இருக்கும். இவ்வித நீளமுள்ள சுருள் அச்சடிக்கும் யந்திரத்தில் இடப்பட்டதும், புதினங்கள் அச்சடிக்கப்பட்டு, உரிய பக்கங்களாக வெட்டப்பட்டு, பின் மடிக்கப்பட்டு வரிசையாக வெளியேற்றப்படுவதை அவதானிக்கலாம். இவ் வேலை எல்லாவற்றையும் யந்திரமே செய்கின்றது. இக் காட்சியைப் பார்க்க வெகு அழகாய் இருக்கும். இவ்வாறான (விஞ்ஞை - ரைப்) யந்திரம் தென்கிழாசியாவிலே இங்குதான் உண்டெனக் கூறப்படுகிறது.

இதைப் பார்வையிட்ட பின் புறக்கோட்டையில் உள்ள கரிமடுவத் தொழிற்சாலை, மருதானையிலுள்ள தொழிற்றுறைக் கலாசாலை, பொறளையிலுள்ள வைத்திய ஆய்கூடம், கறுவாக் காட்டிலுள்ள சித்திரக் கலாசாலை, கலாபவனம், நீரியங்கு சக்தி ஆராய்ச்சி சாலை, நூதனசாலை, விக்ரோறியா நந்தவனம் முதலியவற்றை முறையே சென்று பார்க்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு நூதனசாலை

மேற்படி நூதனசாலை கறுவாக் காட்டில் இருக்கிறது. இது கட்டுவிக்க உதவி புரிந்த சோனகப் பெரியாரின் வேண்டுகோளுக் கியையவும், ஞாபகார்த்தமாகவும் வெள்ளிக் கிழமைகளில் திறக்கப் படுவதில்லை.

இலங்கைச் சரித்திர சம்பந்தமான அநேக சான்றுகள், சின்னங்கள், பல்வேறு துறைகளிலும் இயன்றளவு படிமுறையான வளர்ச்சியைக் காண்பிக்கக்கூடிய முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றது. வரலாற்று விருத்தியை, சரித்திரத்தை பிரத்தியட்சமான சான்றுகள் மூலம் அறிவதற்குத் தேவையான மூலப்பொருட்கள் அநேகம் இங்கு இருக்கின்றன.

---




இலங்கை வானொலி நிலையம்

---

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரின் இயங்கு சக்தியின் தன்மையை ஆராயும் சாலை

இந்த ஆராய்ச்சி சாலை சுறுவாக்காட்டில் ஜாவத்தை வீதியில் உண்டு. மகாவலி கங்கையின் பாதிரி அமைப்பை இங்கு காணலாம். இங்கே ஆற்று நீரின் அரிப்பு சக்தியையும், ஓட்ட வேக சக்தியையும் ஆராய்ச்சி செய்யும் முறையை இங்கு அவதானித்து அறியலாம்.

கன்ஞெறுவாக் குன்றுக் கிடையில் மகாவலி கங்கையின் நீர்ச் சக்தி மூலம் எவ்வளவு குதிரைப் பலம் வாய்ந்த மின்சாரம் உற்பத்தி செய்பலாம் என்று (1955) ஆராயப்படுகின்றது.

மேலும் இவ்வாய் கூடத்தில் மண்ணின் குணத்தை வகைப் படுத்தி அறியக்கூடிய இயந்திரங்கள் உண்டு. பல்வேறு வகை மண் கொண்டுவரப்பட்டு ஆராய்ச்சி செய்வதையும் நாம் அவதானிக்கலாம்.


---

## தெஹிவலை மிருகக்காட்சி சாலை

இங்கு பல்வேறு மிருகங்களையும், பட்சி வகைகளையுங் காணலாம். மிருகக்காட்சிச் சாலைக்கு உட்செல்வதற்குச் சாதாரண நாட்களில் கட்டணப் பணம் 25 சதமும், ஞாயிற்றுக்கிழமைகளில் 50 சதமும் செலுத்த வேண்டும்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரத்மலானை புகைரத வேலைத்தலம்

இவ் வேலைத் தலத்தில் கீழ்க்காணும் பல்வேறு பகுதிகள் உண்டு.

1. சக்கரத்தின் அச்சுச் செய்யும் இடம்.
2. காற்றின் அமுக்க சக்தியால் உலோகத்தில் துளை செய்யும் இடம்.
3. யந்திரங்களும் யந்திரப் பகுதிகளும் செய்யும் உலையும் இடமும்.
4. பூட்டுகள், தொடர்புக் குளாய்கள், இபங்கு குளாய்கள் செய்யும் இடம்.
5. சக்கரம் செய்யும் இடமும், வெட்டி அழுத்தமாக்கும் இடமும்.
6. இயந்திரப் பகுதிகளைத் திருத்துவதற்குக் கழற்றும் இடம்.
7. இயந்திரப் பகுதிகளைப் பொருத்தும் இடமும் ஒட்டும் இடமும்.
8. இயக்கு யந்திரம் செய்யும் இடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. புகைரத வண்டியின் மரப்பெட்டிப் பகுதி செய்யும் இடம்.

10. இரும்பை உருக்க 1400° பாகை சதாம்ச உஷ்ணமும், செம்பை உருக்க 950° பாகை சதாம்ச உஷ்ணமும் தேவை. இவை உருக்கும் பகுதி.

---



## குருடர் செவிடர் பாடசாலை [ரத்மலானை]


ரத்மலானையிலுள்ள குருடர் செவிடர் பாடசாலை 1912-ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து கொண்டு வருகிறது. சமூகசேவை, தேசசேவை போல் வலது குறைந்த பிள்ளைகளுக்கு உபயோகமான முறையில் கல்வி பயிற்றி அதில் வெற்றியும் கண்டு கொண்டு வருகிறது இத்தாபனம்.

இங்கு குருடர், செவிடர் ஆகிய இரு பாலார்க்கும் எழுத, பேச, வாசிக்கவும் கற்பிக்கப்படுகிறது. மேலும் செய்கை முறைக் கல்வியும் — பிரம்பு வேலை, தும்பு வேலை, களிமண் வேலை, சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பொறி அடிக்கல் முதலியனவும் கற்பிக்கப்படுகிறது. இவற்றை விடப் பல்வேறு விளையாட்டுகளும், நடனம், நாடகம் முதலியனவும் அப் பாடசாலைப் பாடத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இங்கு பயிற்சி பெற்ற பல குருடர், செவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டர் மாணவர்கள் சமூகத்திலே மற்றும் மனிதர்களைப்போல் வேலையில் அமர்ந்து, நல்ல வேதனமும் பெற்று, தமக்கும் பிறர்க்கும் பயனுடையவர்களாய்ச் சமூகத்துக்குப் பாரமாயிராது தாம் பெற்ற கல்வியின் பூரண பயனைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது இக் குருடர் செவிடர் பாடசாலையின் நிகரற்ற சேவையை விளக்கும்.


இவற்றைவிட ரத்மலானையில் விமான நிலையம், பாட்டா சப்பாத்துத் தொழிற்சாலை — பார்க்க வேண்டிய இடங்களாகும்.




# கொழும்பு - பொன்னம்பல வாணேஸ்வரர் கோவில்

மேற்படி சிவாலயம் தென்னிந்திய சிற்ப முறையில் கருங்கற் பணியாகக் கட்டப்பட்டுள்ளது. இச் சிவாலயத்துக்கு அண்மையில் எல்லா மதத்தவரும் வேறுபாடின்றி வழிபாடாற்றும் அந்தோனியார் கோவிலுண்டு. இவற்றைவிட ஆட்டுப்பட்டித் தெருவில் டச்சு வேதக் கோயிலும், கொட்டாஞ்சேனையில் உள்ள கத்தோலிக்க தேவாலயமும் மிகப் பழமையானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# களனி ராஜமஹா விஹாரை

களனி மகாவிஹாரை புத்த சமயிகளுக்கு ஓர் விசேஷித்த புண்ணியத் தலமாகும். இலங்கைக்குப் புத்த பகவான் மூன்று முறை வந்தாரென்றும், அவற்றுள் ஒரு தடவையில் களனியில் எழுந்தருளி இருந்தாரென்றுங் கூறப்படுகின்றது. அவர் எழுந்தருளிய இடத்திலேயே களனி ராஜமஹாவிஹாரை கட்டப்பட்டிருக்கிறது.

முன் வாயிலில் நரசிங்க உருவமும், வெளிப் பிரகாரத்தில் விநாயகர் எலி வாகனத்தில் எழுந்தருளியிருக்கும் விக்கிரகமும் உண்டு.

உட் பிரகாரத்தில் மஹிந்தன் வெள்ளரசுக் கிளை கொண்டு வருதல் போன்ற காட்சிகள், புத்த பெருமான் ஞான ஒளி பெற்ற முறைமை, உபதேசம் செய்தல் போன்றனவும், ஜாதகக் கதைகள், புத்தசமய சம்பந்தமான பல ஓவியங்கள் உட்பிரகாரங்களில் உண்டு.

இந்த ராஜ மஹாவிஹாரை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட தென்றும், 11-ம் நூற்றுண்டளவில் கலிங்க தேசத்து மாகன் என்பவனுல் அழிக்கப்பட்டுப் பின் சிங்கள மன்னர் அதைத் திருப்பிக் கட்டுவித்தார்கள். மேலும் போர்த்துக்கேயர் இலங்கையில் ஆட்சி செலுத்திய காலத்து மறுபடியும் அது அழிக்கப்பட்டது. இவ்வாருக இம் மகா விஹாரை பலமுறை அழிக்கப்பட்ட போதிலும் அதே இடத்தில் திரும்பவும் கட்டப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களனியா சம்பந்தமாக பல்வேறு கதைகள் உண்டு.

1. அங்கு அண்ட நாகராசனுக்குப் புத்த பிரான் பிக்குகளுடன் எழுந்தருளி வந்து போதனை செய்தது.

2. கடல் கொந்தளித்து நாட்டை அழிக்க, அதைத் தடுக்க நரபலி கொடுக்கப் பட்டது.

3. கன்னதீசன் தம்பி உத்தியன் பட்டத்து இராணியுடன் கொண்டிருந்ததெனக் வழங்கும் காதல் கதை.

---

## சவர்க்காரத் தொழிற்சாலை [கந்தானை]

சவர்க்காரம் செய்யத் தேவையான பொருள்கள் :-

| | | |
|---|---|---|
| ரோசின் | — | 30 வீதம். |
| பிசின் | — | 10 வீதம். |
| சொழுப்பு | — | 50 வீதம். |
| தேங்காயெண்ணெய் | — | 10 வீதம். |

இந்த விகிதத்தில் கலக்கும் இடத்திலும், அரைக்கும் இடத்திலும், கூருக்கும் இடத்திலும், சவர்க்காரம் பூரணம் எய்தும் இடத்திலும் — ஒவ்வொரு படிநிலையிலும் உள்ள தன்மைகளையும் இலக்கணங்களையும் அவதானிக்கலாம்.

சவர்க்காரத் தொழிற்சாலைக்கு அண்மையில் நெருப்புப்பெட்டி செய்யும் இடமும், பிளாஸ்டிக்கில் பேணி, சீப்பு, தட்டம் முதலியன செய்யும் இடத்தையும் பார்க்கலாம்.

---

## தோல் தொழிற்சாலை [மட்டக்குளிய]

இங்கு தோல் பதனிடப்பட்டுப் பல்வேறு வகையான தோலாலான பொருட்கள் செய்வதை அவதானிக்கலாம்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாப்பாகுவ

யாப்பாகுவ குருநாகல் மாவட்டத்தில் மஹோவிற்குக் கிழக்கில் மூன்று மைல் தூரத்தில் உள்ளது. பழைய காலத்தில் இருந்தே யாப்பாகுவ புத்தமதத் துறவிகளின் இருப்பிடமாக இருந்து வந்தது. அதற்குச் சான்றாக அநேக குகைகளும், கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக்குரிய பிரமி எழுத்துக்களாற் பொறிக்கப்பட்ட சில குறிப்புகளுங் காணப்படுகின்றது. அங்குள்ள ஒரு சிலாசாசனம் அரசனால் அக்கோவிலுக்கு விடப்பட்ட மானியங்களைப் பற்றிக் கூறுகின்றது.

கி. பி. 13-ம் நூற்றாண்டில் யாப்பாகுவ முக்கியத்துவம் பெற்றது. கலிங்க தேசத்து மாகன் என்னும் மன்னனால் பொல்லநறுவை இராசதானி அழிக்கப்பட்ட பின்பு யாப்பாகுவ இராசதானியாக வந்தது.

மஹாவம்சம் யாப்பாகுவ பற்றிக் கூறுவதாவது :-

மாகனுடைய காலத்தும் பின்பும் "சுப்பா" என்பவன் யாப்பாகுவில் கோட்டை கொத்தளம் கட்டிப் புத்த சமயத்தைப் பாதுகாத்து வந்தான். அதனால் அது "சுப்பாக் குன்று" என அக்காலத்து அழைக்கப்பட்டது.

நாலாம் விஜயபாகுவின் ஆட்சிக் காலத்து இக்குன்று சுந்தரமலை என்று அழைக்கப்பட்டது. இம்மலையில் ஷெடி விஜயபாகு தன் இளைய சகோதரனான புவனேகபாகுவைச் சேனையுடன் சென்று, அங்கு தங்கித் தென் இந்தியர் தெற்கே ஆக்கிரமித்து முன்னேறாதபடி காவலாய் இருக்கச் செய்தான்.

அப்பொழுது சோழ பாண்டியர் துணைபெற்றுத் தாய்லந்திலிருந்து வந்த புத்த சமயத்தரசனான சந்திரபானுவை 4-ம் விஜயபாகு முறியடித்து யாப்பாகுவ நகரத்தைப் பாதுகாத்தது மன்றிச் சுற்றி அரணுங் கட்டுவித்து அகழியும் வெட்டுவித்தான். புத்த சமயத்துறவிகளுக்குத் தானதருமங்கள் செய்யவும்; உண்டி, உறையுள் கொடுக்கவும் ஒழுங்குகள் செய்தான்.

தம்பதெனியாவாகிய இராசதானியில் விஜயபாகு அவன் தளபதி மித்த என்பவனால் கொல்லப்பட முதலாம் புவனேகபாகு (கி. பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1273 – 1294) யாப்பாகுவை இராசதானியாக்கி அரசனானான். யாப்பாகுவ தலைநகராகியது. தமிழரையும் வன்னி அரசரையும் வலி தொலைத்தான். இவனை எகிப்துக்குத் தூதனுப்பிச் சமாதானமாய் வாழ்ந்தான். இவனுக்குப் பின் யாப்பாகுவ வீழ்ச்சி அடைந்தது. ஒரு தமிழ்த்தளபதி — ஆரியச்சக்கரவர்த்தி படை எடுத்து வடமேல் பகுதியை அழித்து யாப்பாகுவை அடிப்படுத்தினான்.

---

## யாப்பாகுவக் குன்றும், கோட்டையும் அரணும்

யாப்பாகுவக் குன்று 300 அடி உயரமானது. செங்குத்தானது. குன்றின் விட்டம் சுமார் 450 யார் இருக்கும். கீழ், மேல், தென் புறங்களில் மதிற் சுவர்கள் உண்டு. உள் மதிலும் ஒன்றுண்டு. அதன் விட்டம் சுமார் 200 யார். மதிற்சுவர் 8 அடியிலிருந்து 10 அடிவரை உயரமானது. கல்லாற் கட்டப்பட்டது. அரச மாளிகை குன்றின் உச்சியிற் கட்டப்பட்டிருக்கிறது. உச்சியிலிருந்து பார்க்க நாலாபக்கமும் வெகுதூரம் வரையில் தெரியும். கண்கவர் வனப்புடைய காட்சிகளைக் காணலாம். எதிரிகள் எத்திசையிருந்து வரினும் குன்றின் உச்சியிலிருந்து அவதானிக்க முடியும். அகமதில், புறமதில், அகழிகள், கட்டிடங்கள் இருந்த அடையாளங்களைக் காணலாம்.

கிழக்குப் பக்கத்தில் வாயிலொன்றுண்டு. இஃதே அதிகமாகப் பாவிக்கப்படும் வாயிலாகும். இங்கு, வாயிலின் முன்பு துறவிகள் ஆச்சிரமங்கள் உண்டு. இவ்வாயிலைத் தாண்டி உட்செல்லும் பொழுது அநேக சிற்பங்களைக் காணலாம். இவை பொல்லநறுவைக் காலச் சிற்ப முறையைத் தழுவியனவாய்க் காணப்படுகின்றன. தென்னிந்தியக் கோவிற் கட்டிடங்களிற் காணப்படும் நாட்டியச் சிற்பங்களையும் இவ்விடம் காணக்கூடியதாய் இருக்கிறது. ஆனால் அவற்றிற் சிங்களச் சிற்ப முறைக் கலப்பையும் அவதானிக்கலாம். உதாரணமாக நடன இராணிகளின் உடை முறை சிங்களர் அணியும் பாணியில் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இக் கட்டிடத்தைச் சிலர் அரச மாளிகை என்பர். இங்கு காணப்படும் சிற்பங்களை நோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடத்து, இக் கட்டிடம் அரச மாளிகை என்று கூறுவதினும் பார்க்க, தலதா மாளிகாவையாய் இருக்கலாம் என்று அநுமானிக்க இடம் உண்டு.

---

## குன்றின் உச்சி

மேலே குன்றின் உச்சியில் ஒரு தாகபமும், விக்கிரக அறையும், தடாகமும் உண்டு. இவற்றை விட வேறு கட்டிட அத்திவாரங்களும் காணப்படுகின்றன.

குன்றின் அடிவாரத்தில் ஓர் பாங்கரில் அழகிய கோவில் ஒன்றைக் காணலாம். அங்கே பல புத்த விக்கிரகங்களுண்டு. அது "தலதாகே" என்று கூறப்படுகிறது. ஆனால் நகருக்குப் புறத்தே தந்ததாது வைக்கப்பட்டிருந்திருக்க வேண்டுமென அநுமானித்தல் அவ்வளவு பொருத்தமானதா யில்லை.

---

## பாண்டுவாச நுவர

இந்நகரமும் குருநாகலைப் பகுதியில் உள்ளது. முற்காலத்திலே இந்நகரம் பராக்கிரமபுரம் என்று அழைக்கப்பட்டது. ஆங்குள்ள சிலாசாசனத்திலிருந்து — நிசங்க மல்லன் ஆங்கிருக்கும் ஆசனத்திலிருந்து இன்னிசைவிழா, நடனக்கச்சேரி, விளையாட்டுக்கள் முதலிய வற்றைக் கண்டு களித்தான் என்று கூறுகின்றது.

இங்குள்ள மாளிகை முழுமையும் மரத்தினாலேயே ஆக்கப்பட்டிருக்கிறது. இங்கு மாளிகை, உள் மண்டபம், கல்லாலான சிம்மாசனம், அந்தப்புர அறைகள் முதலியன உண்டு. முழுக்கட்டிடத்தின் நீள அகலம் முறையே 268 அடி, 168 அடி எனக் கூறப்படுகிறது. மாளிகையைச் சுற்றிச் செங்கற்களான மதிற் சுவருண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின் கொளும்பு மார்க்கமாகக் களுத்துறைக்குப் போகும் கடற்கரையோர வீதியில் வளரும் பட்டினங்களையும், நகரங்களையும் காணலாம். மொறட்டுவையில், மொறட்டுமுல்லையில் இலங்கையில் விசேஷித்த மரத் தொழில் வேலைகளையும் சாலைகளையும் காணலாம்.

## களுத்துறை

களுத்துறை காலுகங்கை முகத்துவாரத்தில் உள்ள ஓர் கடற்கரைப் பட்டினம். இலங்கையிற் சிறந்ததொரு சுகாதார நிலையமும் ஆய்கூடமும் இங்குண்டு. களுத்துறையிற் பல்வேறு தொழிற் பயிற்சி நிலையங்கள் உண்டு. சாலி வீதியில் காலு கங்கைக் கழிமுகத்திலே பழைய புத்தகோவில் ஒன்றுண்டு. அண்மையில் ஒரு சிறு கோட்டையும் உண்டு. களுத்துறையில் பிரம்பு வேலை, பின்னல் வேலை, பன்ன வேலை நிலையங்களையும் காணலாம்.

## ஹிக்கடுவை


நிலத் தன்மை வேறுபாடு இங்கு அவதானிக்க முடியும். சுண்ணாம்புக்கல், செங்கற் சூளைகளைக் காணலாம். வழியின் இரு மருங்கிலும் கயிறு பின்னுதலைத் தொழிலாகவுடைய அநேக குடும்பங்களைக் காணலாம்.

## ஜிந்தோட்டை

ஜிந்தோட்டை காலியிலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. இங்கே ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை இருக்கிறது. இத் தொழிற்சாலையிலே மரங்கள் அறுக்கும் பல்வேறு முறையான யந்திரங்களையும், ஒட்டுப் பலகை செய்யும் முறைகளையும், அவற்றாலான பொருள்களையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி





காலிக் கோட்டை




காலிக் கோட்டை வாயில்

காலிப் பட்டினம் மூன்று பக்கமும் இயற்கையான மலையரணாலும், நீரரணாலும் சூழப்பட்டுள்ளது. இக் கோட்டையைப் போல் மட்டக்கிளப்பு, திருக்கோணமலை, யாழ்ப்பாணத்திலும் கோட்டைகள் உண்டு. இவை ஒல்லாந்தரால் கட்டப்பட்டவை. அமைப்பு முறை கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவை.





காலிக் கலங்கரை விளக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரஞ்சீவி மலை

அநுமார் இந்தியாவினின்றும் சிரஞ்சீவி மலையைத் தூக்கிக் கொண்டு வந்த பொழுது அம்மலையின் ஓர் பகுதி உதிர்ந்து வீழ்ந்த தெனவும், அவ்விடமே சிரஞ்சீவி மலை என்னும் பெயரால் வழங்கப் படுகிற தெனவுங் கூறப்படுகின்றது. இது காலியிலிருந்து சற்றுத் தூரத்தே மாத்தறை வீதிக் கருகாமையில் உள்ளது. இங்கு எல்லா விதமான மூலிவகைகள் உண்டென்றும், இப் பகுதியிலுள்ள சுதேச வைத்தியரும் ஏனையோரும் தமக்குத் தேவையான பல்வேறு மூலி வகைகளையும் இங்கு தேடிவந்து பெற்றுக்கொள்வர். இவ்வாறே மன் னூர்ப் பகுதியிலும் ஓர் இடம் உண்டு.



# மாத்தறைக் கோட்டை

காலியிலிருந்து செல்லும் கடலோர வீதி மார்க்கமாக ஹபற துவ, அஹங்கம, வெலிகம ஆகிய கிராமங்கள் பட்டினங்களைக் கடந்து 28 மைலுக்கு அப்பாலுள்ள மாத்தறையை அடையலாம். ஒல்லாந் தர் கட்டிய கோட்டை ஒன்று இங்குண்டு. தவிரவும் இப்பட்டினம் நில்வள கங்கையின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள ஒரு அழகிய பட்டினமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தீவாந்தரமுனை விஷ்ணு தேவாலயம்

தீவாந்தரமுனை இலங்கையின் அதிதெற்கில் உள்ள ஒரு முனையுமாகும். இங்கு ஒரு பழைய விஷ்ணு தேவாலயம் உண்டு. இத் தேவாலயம் எப்பொழுது கட்டப்பட்டதெனக் கூற முடியாது. ஆனால் கி. பி. 641-ம் ஆண்டிற்கு முன் “தெவி நுவர ஸ்ரீவிஷ்ணு தேவாலயம்” இருந்ததென “ரனன்ற்” என்னும் சரித்திர ஆசிரியர் தம் நூலிற் கூறியுள்ளார்கள். இங்கு ஆதியிற் சந்தன மரத்திற் செய்த விஷ்ணு விக்கிரகம் இருந்ததென்றும், பின் 1661-ம் ஆண்டில் ஐப்பொன் விஷ்ணு விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

தம்பதெனியாவில் அரசாண்ட இரண்டாம் பராக்கிரம பாகு இக் கோவிலின் மகத்துவத்தைக் கேள்விப்பட்டு இங்கு வந்து 55 அடி உயரமுள்ள ஒரு மூன்றடுக்கு மாளிகை கட்டி, ஆலயத்தையும் புனருத்தாரணஞ் செய்வித்தான். இக் கோவிலின் முன் 400 அடி நீளமுள்ள ஒரு பெரிய மண்டபம் இருந்தது. அதன் சான்றுகளான தூண்களை இன்றுங் காணலாம். இதைப் பற்றிய விபரம் மஹாவம்சம் 85-ம் அத்தியாயத்திலும் கூறப்பட்டுள்ளது. “பாலாவிசந்தேச” என்னும் இலக்கியம் இக் கோவிற் கூரை பொற்றகடுகளால் வேயப்பட்டிருந்ததென்று கூறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தினமும் பூசை நடைபெறுகிறது. பிராமண வம்சத்தவர் பூசை செய்து வந்ததாகச் சிலாசாசனம் கூறுகிறது. இப்போதுள்ள சிங்கள பூசகரும் (1955) தாமும் தம் சுற்றமும் அப்பிராமண வழித் தோன்றல்களே என்று கூறிக் கொள்கிறார்கள்.

இக் கோவில் 1587-ம் ஆண்டு மாசி மாதத்தில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டுக் கோவிற் பொருள்கள் முழுமையும் அவர்களாற் சூறையாடப்பட்டன.

இக் கோவிலுக்குப் பக்கத்தே வட்டதாகே என அழைக்கப்படும் ஒரு தாகபம் உண்டு. மண்ணாலான ஒரு சாதி ஓடுகளால் வேயப்பட்டுள்ளது. இது விஜயபாகுவினாற் கட்டப்பட்டதென்பர்.



# தீவாந்தரமுனை கலங்கரை விளக்கம்

இலங்கைத் தீவின் தெற்கிலுள்ள தீவாந்தரமுனையில் ஒரு வெளிச்சவீடு உண்டு. இந்த வெளிச்சவீடு (1955-ல்) ஆங்கிலேயர் கண்காணிப்பில்தான் இருந்து வருகிறது. இது 1806-ம் ஆண்டில் ஆங்கிலேயராற் கட்டப்பட்டது. அதன் உயரம் 160 அடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குஷ்டராசன் சிலை

---

# தங்காலை

இப்பகுதி வேறான சுவாத்திய நிலையுடையதாய் இருப்பதை பிரயாணஞ் செய்யும் பொழுதே அவதானிக்கக் கூடியதாய் இருக்கும். இங்கு வயல்களையும் வேறு கழனிகளையும் பற்றைக் காடுகளையும் காணலாம். மேலும் இது ஈரலிப்புப் பிரதேசத்தின் எல்லைப் பகுதியாய் இருப்பதையுங் கவனிக்கலாம். தங்காலையின் பின் சுவாத்தியம் தன்மை முதலியன வேறுபடுவதையும் அவதானிக்கலாம்.

---

# தென்கீழ் சமவெளி

இதன் எல்லையாக வடமேல் பகுதிகளில் முறையே மதுறுஓயா, மகாவலி கங்கை, வளவ கங்கை முதலியன உண்டு. கரையோரப் பகுதியிற் குடாக்கள் அநேகம் உண்டு. இப் பகுதி இப்பொழுது வளர்ச்சியடைந்து வருகிறது. பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. கல்ஓயாத் திட்டம் அவற்றுள் மிகவும் பெரியதும் அதிக பயன் பயப்பதும் ஆகும். மேலும் இப் பகுதியில் சிறு மலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றுகள் உண்டு. தென்கீழ் சமவெளி ஆதிகாலத்தில் — அதாவது பொல்லநறுவைக் காலத்தில் உறுகுணை ரட்டை என வழங்கப் பட்டது.

---

## அம்பாந்தோட்டை

றன்ன ஓயாவையும் வயல்கள் மலிந்த ஹுங்கமத்தையும், வாழை, மரக்கறி வகைகளுக்குப் பேர்போன அம்பலாங்தோட்டையையும், வளவகங்கையையும் கடந்து வரண்ட பிரதேசத்தைக் கிட்டுவதை உணரலாம். ஈரலிப்புப் பிரதேச சுவாத்தியம் அருகிக் குறையவும் வரண்ட பிரதேச சுவாத்தியம் தொடங்குவதையும் காட்சியிலும் உணர்ச்சியிலும் நாம் அறியக்கூடியதாய் இருக்கிறது. இது தென் பகுதி வரண்ட பிரதேசம். அம்பலாங்தோட்டையிலிருந்து 8 மைல் தூரம் சென்று ஹம்பாந்தோட்டையை அடையலாம். அம்பாந்தோட்டையில் துறைமுகமும் உப்பளமும் உண்டு. இங்கிருந்து தென்னை மரத்துக்குப் பதில் பனை மரமும் மற்றும் உஷ்ணப் பிரதேசத்துக்குரிய மரங்களையும் அவதானிக்கலாம்,

---

## திஸமஹாரும

இலங்கையின் தென்கீழ் பாகத்தில் உஷ்ணப் பிரதேசத்தில் அமைந்துள்ள திஸமஹாரும என்னும் பட்டினத்தின் வருட மழைவீழ்ச்சி 50 அங்குலத்திலும் குறைவானது. இப் பகுதியில் பூமி மணற்பாங்கானது. பற்றைக் காடுகள் நிறைய உண்டு. இலங்கையில் ஆதியில் ஆரியர் குடியேறிய இரு இடங்களுள் திஸமஹாறம ஒன்றாகும். அநுராதபுரத்தில் அமைக்கப்பட்ட நீர்ப்பாசன வாவிகள் போன்று இங்கு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விஷயமாகும். தெபறவீவா, யோதவீவா, யோதகண்டியவீவா, திசைவீவா போன்ற குளங்கள் இக்காலத்திலும் இப்பிரதேசத்தின் பொருளாதாரத்தை உயர்த்த உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திஸமஹாறம என்பது அங்குள்ள தாகபத்தின் காரணமாக ஏற்பட்ட பெயராகும். இத்தாகபம் காவன்திசாவினால் கட்டுவிக்கப் பட்டது. இது முன்பு மஹாதாகபம் என்று வழங்கப்பட்டது. இதை விட மகாநாகன் கட்டுவித்த யதால விஹாரை, மற்றும் சந்தகிரி விஹாரை தெபறவீவாக் கண்மையிலுள்ள மாணிக்க விஹாரை என் பன இங்கு உள்ள மற்றும் விஹாரைகளாகும்.

திஸமஹாறம தாகபம் பழைய காலத்தது. அதன் அமைப்பில் கொட்டுவப் பகுதியில் ஆலிலை போற் கட்டப்பட்டிருப்பதைக் கவனிக்கலாம்.

இத்தாகபத்தில் புத்த பகவானின் லலாட எலும்பு எழுந்தருளு விக்கப்பட்டிருக்கிற தென்று சிலர் கூறுகின்றனர்.

---

## கதிர்காமம்

திஸமஹாருமையிலிருந்து 12 மைல் தூரத்தில் மாணிக்க கங்கை யில் கதிர்காமம் என்னும் தலம் உண்டு. கதிர்காமம் முதலாம் தப் புளு அரசனின் ராஜதானியாக இருந்தது. பின் பொல்லநறுவையில் ஆண்ட முதலாம் விஜயபாகு எனும் கீர்த்தி குமாரனுடைய றுஹுணு ராஜதானியும் கதிர்காமம் ஆகும்.

இப்பொழுது கதிர்காமம் இந்து பௌத்தர்களுக்கு ஓர் புண் ணியத் தலமாக விளங்குகிறது. இந்தியாவிலிருந்து முருகப் பெரு மான் எழுந்தருளி வந்து, கதிர்காமத்தில் தினைப்புனத்தில் வளர்ந்த வள்ளியை மணந்ததாகப் புராணங்கள் கூறும். இங்கு ஆடி மாதத்து நடக்கும் உற்சவம் மிகவும் விசேஷமானது. துட்ட கைமுனுவும் இங்கு வழிபாடாற்றியதாகவும் கூறப்படுகிறது. இங்குள்ள கிரி விஹாரை மகாநாகனால் கட்டுவிக்கப்பட்ட தென்பர்.

கதிர்காமம் ஸ்ரீ முருகப் பெருமானுக்கு விசேடமாயுள்ள ஒரு தலம். மேற் கூறியவாறு ஸ்ரீ முருகன் வள்ளியம்மனை மணந்து கொண்ட தலம். இந்து – பௌத்தர் வேறுபாடின்றி எல்லாருஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று வழிபாடாற்றும் தலம். கதிர்காமம் என்ற பெயருண்டான்மைக்குப் பலரும் பல்வேறு காரணம் கூறுவர்.


1. கத்துறு என்னும் ஒரு சாதிக் காய் உள்ள மரங்கள் நிறைந்த கிராமம் ஆகையினாலே "கத்துறுகமம்" என்றுய்ப் பின் கதிர்காமம் ஆயதென்பர்.

2. செந்தினைக் கதிர் நிறையப் பெற்ற கமம் ஆகையால் கதிர்காமம் ஆயிற்றென்பர்.

கதிர்காமம் மாணிக்க கங்கை என்னும் நதியில் இருக்கிறது. இங்கு மூலத்தானம், தெய்வானை அம்மன் கோவில், வள்ளியம்மன் கோவில், முத்துலிங்க சுவாமி கோவில், மசூதி, போதி விருட்சம் முதலியன உண்டு. இங்கு அநேக மடங்கள் உண்டு. அவற்றுள் தெய்வானை அம்மன் சந்நிதிக்கு அருகாமையில் உள்ள இராம கிருஷ்ண மடம் மிகச் சிறப்பு வாய்ந்ததும் பல நவீன வசதிகளும் உடையது.





கதிர்காமம் மூலத்தானம்





தெய்வானை அம்மன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வள்ளியம்மன் கோவில்




முத்துலிங்கசுவாமி கோவில்

மூலத்தானத்துக்கு அருகில் விநாயகர் கோவிலும், அதற்கண்மையில் போதி விருட்சமும், தெய்வானை அம்மன் கோவிலும் உண்டு. வள்ளியம்மன் கோவில் மூலத்தானத்துக்கு எதிரே சற்றுத் தூரத்தில் இருக்கிறது. வள்ளியம்மன் கோவிலுக்கு ஒரு புறம் முத்துலிங்க சுவாமி கோவிலும், மறுபக்கத்தே ஒரு முஸ்லிம் பெரியார் அடங்கிய சமாதியும், மசூதியும் உண்டு. முத்துலிங்கசுவாமி கோவிலில் ஒரு பொழுதும் அணையாத ஓமாக்கினி குண்டம் ஒன்றுண்டு.




கதிர்காமம். ஒரு முஸ்லீம் பெரியாரின் சமாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமத்தைச் சுற்றிப் புண்ணிய விசேடமுள்ள பல சிறு தலங்கள் இருக்கின்றன. அவற்றுள் விபூதி மலை, செல்லக் கதிர் காமம், கதிரை மலை என்பன சிறப்பு வாய்ந்தவை.

---

# புதுறுவகல

கதிர்காமத்திலிருந்து திரும்பி திஸமஹாராமையை அடைந்து, அங்கிருந்து வடதிசை நோக்கிச் செல்லும் பொழுது சிறு மரங்களை யும், பற்றைக் காடுகளையும், சிறு சிறு கிராமங்களையும் வழியின் இரு மருங்கிலும் காணலாம். சுமார் 39 மைல் வரை பிரயாணம் செய்த பின் வீதியின் இடப் பக்கத்தே இரண்டு மைல் தூரம் அளவில் புதுறுவகல என்னும் கிராமம் உண்டு. இங்கு சில குன்றுகள் காணப் படும். இங்கு கல்லிற் பொழிந்த சில விக்கிரகங்களைக் காணலாம். இவற்றிலிருந்து மஹாயான புத்த மதக் கொள்கை பற்றிய சில விஷயங்களை அறியலாம்.

---

# வெள்ளவாய

புதுறுவகலவிலிருந்து திரும்பி இரண்டு மைல் வடக்கே செல்ல வெள்ளவாய வரும்.

வெள்ளவாய இப்பொழுது பதுளை திஸமஹாராம பாதையி லுள்ள ஒரு பெரிய சந்தியாகும். முதலாம் இராசசிங்கன் போர்த் துக்கேயரைத் தோற்கடித்த "றன்தெனிவெல" என்ற இடம் இங்குதான் இருக்கிறது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தங்கனுவ

வெள்ளவாயப் பிரதேசத்தில் காடடர்ந்த பகுதியில் இக் கிராமம் இருக்கிறது. இங்கு துட்ட கைமுனு — தீசன் சண்டை செய்த இடத்தை ஞாபகப்படுத்தும் சான்றுகள் வனமத்தியில் யுத்தங்கனுக் கிராமத்தில் உண்டு.




## தியலும நீர்வீழ்ச்சி

வெள்ளவாயாவிலிருந்து றப்பர், தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த பகுதிகளுக்கு ஊடே பிரயாணஞ் செய்து மலைப்பகுதியின் வரண்ட பிரதேசத்தை அடையலாம். மூன்று மைல் தூரம் சென்ற பின் 1000 அடி உயரம் உள்ள பகுதியையும், செங்குத்தாக ஏறும் பகுதியையும் அடையலாம். இவ்வாறுகச் செல்லும் பாதை ஓரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலே இலங்கையின் மிக உயரமான தியலும நீர்வீழ்ச்சியைக் காண லாம். இந் நீர்வீழ்ச்சியின் உயரம் சுமார் 600 அடியாகும். 600 அடி உயரத்திலிருந்து நீர் விழும் காட்சி மிகவும் மனோரம்மியமான காட்சியாக இருக்கும். உடலையும், உளத்தையும், உணர்ச்சியையும் ஒருங்கே குளிர வைக்கும் சுவாத்திய நிலையை இவ்விடத்திலிருந்து அநுபவிக்க ஆரம்பிப்பதை அறியலாம்.

---

# கொஸ்லாந்தை

தியலுமவைத் தாண்டி மலையின் உச்சியிலே, ஆகாய மார்க்கத்திலே, அழகு சொட்டும் காட்சிகளைக் கண்டு ரசித்துக் கொண்டு றப்பர் தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த கொஸ்லாந்தையை அடையலாம். போகும் வழியில் ஒருபக்கத்து மலைச் சிகரங்களையும், மறு பக்கத்தில் பாதாளமான பள்ளத் தாக்குகளையும் காணலாம்.

---

# ஹப்புத்தளை

ஹப்புத்தளையைக் கிட்டும் பொழுது வரண்ட சுவாத்திய நிலையும் இயற்கைத் தாவரங்கள் முதலியனவும் மாற்றம் அடைவதைக் கவனிக்கலாம். மூவாயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ள நகரத்தின் குளிர்ந்த சீதோஷ்ண நிலையை அறியலாம். இங்கு வருடமழை வீழ்ச்சி 75 – 100 அங்குலம். ஹப்புத்தளையிலிருந்து பார்ப்பவர்களுக்கு மலைப் பிரதேசத்தின் உச்சியில் இருப்பது போல் தோன்றும்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டாரவளை

செழித்த தேயிலைத் தோட்டங்களும் அழகிய காட்சிகள் நிறைந்த மலைப் பிரதேசங்களுக் கூடே 9 மைல் தூரம் வரை சென்று பண்டாரவளையைச் சேரலாம். இந்தப் பட்டினம் குளிர்ப் பிரதேசத்தில் இருந்த போதிலும் சூடான காற்று வீசும் இடமாக இருக்கிறது. இதனாலே இது சம சீதோஷ்ணம் உடையதாய் மரக்கறிப் பயிர் வகைகளுக்கு மிகவும் பிரசித்தி பெற்ற இடமாகவும் விளங்குகின்றது.

பதுளை

## பதுளை

பதுளை ஊவா மாகாணத்தின் தலை நகர். இது பதுளை ஓயாவால் சூழ்ப்பட்டுள்ளது. மரக்கறிப் பயிர் வகைகள் இங்கு அதிகமாக உண்டு. இங்கு பழையகாலக் கோட்டை ஒன்றுண்டு. அதிலிருந்து பார்க்கும் பொழுது பதுளையின் அழகு தென்படும். 4-ம் நூற்றாண்டுச் சிலாசாசனம் ஒன்றும், 10-ம் நூற்றாண்டில் 3-ம் உதயனால் செய்யப்பட்ட ஒரு சிலாசாசனமும் உண்டு. பதுளை முதியங்கனை விஹாரையாற் சிறப்படைகின்றது.

## துன்ஹிந்த

பதுளையிலிருந்து 3 மைல் தூரம் வரை மோட்டாரில் சென்று பின் கால் நடையால் 1 மைல் தூரமளவு போனால் துன்ஹிந்த நீர் வீழ்ச்சியை அடையலாம். ஆயிரக்கணக்கான விநோத விருப்பாளர்கள் இதைச் சென்று பார்த்து, இதன் அழகை ரசித்து மகிழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹியங்கனே

புத்த பெருமான் தாம் நிர்வாணம் அடைந்த ஒன்பதாம் மாதத்தில் மஹியங்கனேக்கு எழுந்தருளினர் என்றும், சமந்த கூடத்தில் இருந்த சமன் தேவரும் அப்பொழுது அங்கு வந்து அவரைத் தரிசித்தார் என்றும் கூறப்படுகிறது. புத்த பெருமான் எழுந்தருளிய இடத்தில் ஒரு தாகபம் கட்டப்பட்டது. மகாநாகன் இத் தாகபத்தை 124 அடி உயரத்துக்குக் கட்டுவித்தான். பின் துட்டகைமுனு மஹியங்கனே தாகபத்தை 80 முழ உயரமாய்ப் புனருத்தாரணஞ் செய்து, இதற்கென மானியம் வழங்கிப் பரிபாலித்து வந்தான்.

கண்டி அரசர்கள் பரிபாலனத்தின் பின் மஹியங்கனே விஹாரை அஸ்கிரி மஹாவிஹாரை – விஹாராதிபதிகள் மேற்பார்வையின் கீழ் வந்தது.

மஹியங்கனே என்பதற்கு உலகத்தின் முன்றில் என்பது பொருள். புத்த பெருமான் எழுந்தருளி அருள் பெற்ற இடமாகையால் பௌத்த சமயிகளுக்கு மிகவும் சிறந்த தலங்களுள் ஒன்று.

இத் தாகபம் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டது. கோட்டையில் இருந்த ஆறும் பராக்கிரம பாகு மணிமுடி வடிவமுடைய தாகபமாகக் கட்டுவித்தான். 1602-ல் ஸ்பில்பேர்கன் கண்டியரசன் விமலதர்ம சூரியனேச் சந்திக்கச் சென்றபொழுது மஹியங்கனேயில் தங்கினன். அவன் தன் தினக்குறிப்புப் புத்தகத்தில் சுமார் 130 அடி உயரமுடையது என்றும், வெகு அழகாக வெள்ளை அடிக்கப்பட்டிருந்த தென்றும் குறித்துள்ளான். 17-ம் நூற்றுண்டில் செனரதன் என்னுங் கண்டியரசன் தந்த தாதுவையும் மற்றும் செல்வங்களையும் மஹியங்கனேக்குக் கொண்டு சென்றுன். இங்கு வந்திருந்தபொழுது தான் அவனுடைய இராணி இரண்டாம் இராச சிங்கனேப் பெற்றுள். 1747-ம் ஆண்டு சயாம் அரச சபையில் இருந்து வந்த இராச குரு, கீர்த்தி ஸ்ரீ இராச சிங்கனுடன் மஹியங்கனேயைத் தரிசித்தார்.

மஹியங்கனே அந்நியர் ஆட்சிக் காலத்து அழிக்கப்பட்டு இப்பொழுது புனருத்தாரணஞ் செய்யப்பட்டு வருகிறது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசறை

பதுளையிலிருந்து கிழக்கு நோக்கி 12 மைல் தூரம் சென்று பசறையை அடையலாம். இது ஒரு வியாபார மத்தியத்தானம். இங்கிருந்து செல்லும் பாதை பள்ளத்தாக்கில் செல்கின்றது.

---

## புத்தளை

இது வெல்லவாய – மொனருகலை பாதையில் உள்ளது. மாகம இராசதானியாய் இருந்த காலம் தொடங்கி மாகம அநுரதபுரப் பாதையில் பிரதான இடம் பெற்றது புத்தளை. துட்ட கைமுனு பிஹிற்ற றட்டை யுத்தத்துக்குப் போகும் போது இதைத் தாண்டிச் சென்றதாகவும், இங்கு முதலாம் விஜயபாகுவும், கீர்த்தி ஸ்ரீ மேவனும், மானுபரணனும் யுத்தம் செய்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.


---

## மொனருகலை

வரண்ட பிரதேசத்தில் வியாபார மத்தியத்தானமாகவும், றப்பர்த் தோட்டம், தோடம்பழம், எலுமிச்சம்பழம் முதலியன அதிகமாக உள்ள இடமும் ஆகும். இப் பகுதி 3000 அடி உயரம் உள்ளது. மொனருகலைக் குன்று உண்டு. மொனருகலையில் இருந்து பிரயாணம் செய்யும் பொழுது 500 அடியிலிருந்து 100 அடி வரை உயரம் உள்ள பீடபூமி வழிபாகக் கடற்கரை ஓரத்தை நோக்கிப் பாதை இறக்கமாகச் செல்வதை அவதானிக்கலாம்.


---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மொனருகலே றப்பர்த் தொழிற்சாலே

**றப்பர்த் தோட்டம்:** றப்பர்க் கன்றுகள் 10 அல்லது 12 அடி இடைவெளி யுடையதாக நடப்படும். மரமாக வளர்ந்த பின் தான் றப்பர் மரத்தில் பிரயோசனம் எடுக்கலாம். றப்பர் மரத்தின் பட்டையில் $\frac{1}{4}$ அங்குலத்துக்கு வெட்டி றப்பர் பால் எடுக்கப்படும். ஒன்றைவிட் டொருநாளேக்கு இவ்வாறு வெட்டிப் பால் எடுக்கலாம். மரத்திலிருந்து எடுத்த பாலேச் சேர்த்து வாளிகளில் யந்திர மூலம்







றப்பர் பாலேத் தகடாக்கும் பதப்படுத்தும் இயந்திரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலைக்கு அனுப்பப்படும். அங்கு ஒரு கலனுக்கு இரண்டு பங்கு தண்ணீர் விட்டு சோடியம் மருந்தையும் போட்டுச் சுத்தப்படுத்தப்படும். பின் அப்பாலை ஒரு தொட்டியில் 30 நிமிஷத்துக்கு உறைய விடப்படும். பின் அசெற்றிக் திராவகம் சேர்த்து 10 மணி உறைய வைத்து உருளைகளிற் போட்டு அரைத்துத் தகடாக்கித் தரப்படுத்தி மென்மையாக்கிக் காயவைக்கப்படும்.

---

## பொத்துவில்

மொனருகலையிலிருந்து சனக் குடியிருப்பில்லாத காட்டுப் பிரதேசத்துக்கு ஊடாக 42 மைல் பிரயாணஞ் செய்து பொத்துவிலை அடையலாம்.

---

## அறுகம் பே [அறுகம்குடா]

பொத்துவிலிலிருந்து சுமார் இரண்டு மைல் தெற்கே அறுகம் பே உண்டு. இங்கு நெல் வயல்களும் அழகிய கடற்கரையும் உண்டு.

---

## அக்கரைப்பற்று

பொத்துவிலிலிருந்து வடக்கு நோக்கிக் கடற்கரை யோரமாகப் போகும் பொழுது வயல்களையும், தமிழ்க் கலாசாரம் பிரதிபலிக்கும் பல்வேறு பட்டினங்களைக் காணலாம். அவற்றுள் முக்கியமானவை கோமாரி, திருக்கோவில், சின்ன முகத்துவாரம். திருக்கோவில் இந்துக்களுக்கு ஒரு விசேஷித்த தலம். இங்கிருந்து 7 மைல் தூரத்தில் அக்கரைப்பற்று உண்டு. இது இப்பகுதியில் ஒரு பெரிய பட்டினம். பொத்துவிலிலிருந்து சுமார் 25 மைலுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பால் அட்டாளைச் சேனை என்னும் பட்டினம் உண்டு. இங்கு முஸ்லிம்களுக்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட ஒரு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இருக்கிறது.

மேலும் கடற்கரையோர வீதிவழியே சென்று காரைதீவை அடையலாம். இது நெற்கழனிகள் நிறைந்த கிராமமாகும். இங்கு தான் ஈழத்திருமணி அருட்டிரு விபுலானந்த அடிகளார் அவதரித்தார்.

---

# அம்பாறை

காரைதீவிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் பாதையில் சம் மாந்துறை என்னுங் கிராமம் உண்டு. இது சோனகர் வதியும் ஒரு கிராமமாகும். மேலும் சிலதூரம் சென்றதும் வளர்ச்சி அடைந்து கொண்டு வரும் பட்டினமாகிய அம்பாறையைச் சந்திக்கலாம். இது ஒரு சுறுசுறுப்பான நகரமாகக் காட்சி அளிக்கிறது. இங்கு உத்தி யோகத்தர், தொழிலாளர் வீடுகள், கடைத்தெரு, விளையாட்டு மைதானங்கள் உண்டு. அம்பாறையைக் கடந்து கல்ஓயாப் பள்ளத் தாக்குக்குச் செல்லும் பாதையில் கொண்டை வெட்டுவான் என் றொரு பழைய குளம் உண்டு.

---


# இங்கினியகலை

அம்பாறையிலிருந்து வயல்கள், கழனிகளுக்கூடாக 12 மைல் சென்று இங்கினியகலையை அடையலாம். கீழ்மாகாணத்துச் செல் வங்களெனக் கருதப்படுவனவற்றுள் ஒன்றாகிய சேனநாயக சமுத் திரமும் அதன் சூழலும் அழகையும், எழிலையும், பயனையும் ஒருங்கே காட்டும் இடமாகத் திகழ்கிறது.


---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல் ஓயா




கல்ஓயா நீர்த்தேக்கம்




கல்ஓயா முதலாம் அணைக்கட்டு

கல்ஓயா இலங்கையில் உள்ள மிகவும் பெரிய அபிவிருத்தித் திட்டங்களுள் ஒன்றாகும். இப்பகுதி ஆதிகாலத்தில் நெற் கழனிகளுக்கு விசேடித்த இடமாக இருந்தது. ஆனால் பின் சமீப காலம் வரை கவனிப்பாரற்றுக் காடடர்ந்து இருந்தது. 1950-ம் ஆண்டில் இரு குன்றுகளுக்கு இடைத்தூரமாகிய சுமார் 4000 அடி தூரத்தையும் 154 அடி உயரம் உள்ள அணைக்கட்டுக் கட்டி சேனுயக சமுத்திரம் 1951-ம் ஆண்டில் பூர்த்தியாக்கப் பட்டது. அக் காலத்தில் இருந்து கல்ஓயா அபிவிருத்தி நிர்வாகசபை ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலத்தில் நெற்சாகுபடியும், கரும்புச் செய்கையும் மற்றும் பொருத்தமான பயிர்ச் செய்கை செய்வதற்கு ஒழுங்குகள் செய்து கொண்டு வருகின்றது.

இங்கிருந்து நீரின் சக்தியின் உதவிகொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களுக்கும் விநியோகிக் கப்பட்டு வருகின்றது. அதன் பயனுப் பல கிராமங்களும் பட்டினங் களாய் மாறிக்கொண்டு வருகின்றன. அவற்றுள் அம்பாறை, இங்கினியகலே, கல்முனே போன்ற பட்டினங்கள் சிலவாம். இப்பொழுது கல்ஓயாப் பள்ளத்தாக்கிலிருந்து மின்சார விநியோகம் மட்டக்களப்பு வரையும் வந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேனநாயக சமுத்திரம்

சேனநாயக சமுத்திரம் பழைய சிங்களரின் அணைக்கட்டு முறையை அனுசரித்துக் கட்டப்பட்டது. 300 அடி அகலமான அத்திவாரத்தில் 154 அடி உயரமானதாய்க் கட்டப்பட்டது. இரு மலைகளுக் கிடையேயுள்ள தூரமாகிய சுமார் 3900 அடி தூரத்துக்கு அணைக்கட்டுக் கட்டப்பட்டது. வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலங்களிற் பெய்யும் மழைநீர்ப் பிரவாகம் கல்லோயாவிற் பாய்ந்து மட்டக்களப்புப் பிரிவில் உள்ள 40,000 ஏக்கர் வயல்களையும் அழித்துப் பின் கடலுள் பாய்ந்து விடுகின்றது. இதைத் தடுப்பதற்காகவும், மழை நீரைத் தேக்கிக் கமச் செய்கைக்கு உதவச் செய்யும் முறையிலும் கல்லோயாவின் குறுகிய இடமாகிய இரு குன்றுகளுக் கிடைத் தூரத்தில் மறித்து அணைக்கட்டுக் கட்டப்பட்டது. இதனுலே நெற் செய்கையும சற்று உயர்ந்த பூமிகளிலே கரும்புச் செய்கையும், அதன் பயனுய்ச் சீனி உற்பத்தித் தொழிற்சாலை போன்றனவும் தொடங்கப் பட்டு நாட்டின் வளத்தையும், உணவுப் பொருள்களையும், செல்வத்தையும் உயர்த்த உதவுகின்றது. காடாக இருந்த இடங்கள் கழனிகள் ஆயின. மலேறியா என்னுந் தொற்று நோய் இருந்த இடந் தெரியாமல் போய்க்கொண்டிருக்கிறது. இலங்கை சுதந்திரம் பெற்றபின் முதல் பிரதம மந்திரியும் அதன் முன் நில அபிவிருத்தி மந்திரியாயும் இருந்த திரு. டி. எஸ். சேனநாயகா அவர்கள் சேவையின் ஞாபகார்த்தமாக இக் கட்டுக் குளத்துக்குச் சேனநாயக சமுத்திரம் எனப் பெயரிடப்பட்டது.

---

# கல்முனை


இங்கினியகலேயிலிருந்து திரும்பவும் கரைதீவு வந்து, வடக்கு நோக்கி 3 மைல் தூரம் செல்லக் கல்முனை என்னும் பட்டினம் வரும். இது ஒரு வியாபாரத் தலமும், மீன்பிடி கைத்தொழிலிற் சிறந்த இடமுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீகவாப்பிய

சரித்திர சம்பந்தமுடைய பழைய தாகபம் ஒன்று இங்குண்டு. புத்த பகவானின் நகம் இங்கு எழுந்தருளுவிக்கப்பட்டிருந்த தெனக் கூறப்படுகிறது. காவந்தீசனின் புதல்வன் தீசன் திகா வாவியைக் கமச் செய்கையின் பொருட்டுக் கட்டுவித்தான் என்று சரித்திரம் கூறுகின்றது. மேலும் அக்காலத்தில் வயல்கள் அதிகமாக இருந்த தாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

---




**கல்லடிப் பாலம், மட்டக்கிளப்பு.**

கல்லடிப்பாலம் இலங்கையில் அதிநீளமான தனிப் பாலமாகும் இப்பாலம் மட்டக்கிளப்பு நகரைத் தென்பகுதியோடு இணைக்கின்றது.

---

## மட்டக்கிளப்பு

இது கிழக்கு மாகாணத்தின் தலை நகர். இங்கு ஒல்லாந்தரின் பழைய கோட்டை ஒன்றுண்டு. மேலும் இந்துக்களுக்குப் புனிதமான புராதன கோவிலாகிய மாமாங்கப் பிள்ளையார் கோவிலுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மட்டக்களப்பு வாவி பாடும் மீன்களுக்குப் பேர்போன இடமாகும். இவற்றை விசேஷமாகப் பூரணை நாட்களில் தான் அவதானிக்க முடியும் என்பர்.

மட்டக்களப்பு சரித்திரத்தில் முக்கியம் வாய்ந்த ஒரு பட்டின மாகும். 1602-ம் ஆண்டு முதலாம் விமலதர்ம சூரியன் காலத்திலே ஒல்லாந்த தளபதி ஸ்பில் பேர்கன் மட்டக்களப்பில் இறங்கிக் கண்டிக்குச் சென்றான். புத்தளம், சிலாபம், திரிகோணமலை ஆகிய துறைமுகங்கள் அந்நியர் ஆதிக்கத்துக் குட்பட்டதும், கண்டி மன்னர் பிறநாட்டவருடன் தொடர்பு கொள்ளக்கூடிய துறைமுகமாய் இருந்தது மட்டக்களப்பாகும். 1638-ம் ஆண்டில் வெஸ்ரர் வோல்ட் என்னும் ஒல்லாந்தர் மட்டக்களப்பில் ஒரு கோட்டையைக் கட்டி அதிலிருந்து கொண்டு போர்த்துக்கேயரைத் தாக்குவதற்கு ஆரம்பித்தான்.


## வாழைச் சேனை

இது மட்டக்களப்பிற்கு வடக்கே 20 மைல் தூரத்தில் உள்ளது. இங்கு கடுதாசித் தொழிற்சாலை உண்டு. இதனால் வாழைச் சேனை வளர்ச்சியடைந்து கொண்டு வருகிறது.

## திருகோணமலை



திருக்கோணமலைத் துறைமுகம்




திருக்கோணமலைக் கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோணேசர் ஆலயம்



சுவாமி மலை

திருக்கோணமலைப் பட்டினம் முக்கோணமான அமைப்புள்ளது. துறைமுகமும் மூன்று மலைகளால் சூழப்பட்டு அமைந்திருப்பதைக் காணலாம். இது ஒரு இயற்கைத் துறைமுகம். உலகத்திலே உள்ள சிறந்த இயற்கைத் துறைமுகங்களுள் இது இரண்டாவதாக வைத்தெண்ணப்படக் கூடியதாயிருக்கிறது. மேலும் திருக்கோணமலை ஒரு கடற்படைத் தளமுமாகும். இது (1955) பிரித்தானியர் பரிபாலனத்தின் கீழ் இருந்தது. இப்பொழுது அதன் பரிபாலனத்தை இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்று, திருக்கோணமலைத் துறைமுகத்தை ஒரு வர்த்தகத் துறைமுகமாக ஆக்குவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்து வருகிறது.

திருக்கோணமலையில் உள்ள பிறெடெறிக் கோட்டையுள் பாடல் பெற்ற தேவாலயமாகிய கோணேசுரர் சுவாமி கோவில் இருக்கிறது. இத் தேவாலயம குளக்கோட்டன் என்னும் அரசனுற் கட்டப்பட்டது. கோணேசுரர் கோவிலின் ஆதிக் கட்டிடங்களும் கோபுரமும் கடலாற் கொள்ளப்பட்டதென்றும், சமீப காலத்தில் மேற்படி கடலுள் நீந்திச் சென்று ஆராய்ந்த ஜெர்மனியர் ஒருவர் எடுத்த புகைப்படங்கள், கடலடியில் கோணேசுரர் கோவிலின் ஆதிக்கோபுரம் முதலியன பூரணமான நிலையில் நீருள் இன்றும் இருக்கின்றன என்பதையும் தெளிவாகக் காட்டுகின்றன. மேலும் கோபுரத்தின் படத்தில் கோபுரத்தின் வாயில தெளிவாகத தெரிகிறது. தவிரவும் அந்த ஜெர்மானியர் அவ் வாயிலின் வழியாக உள்ளே நீந்திச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று பார்த்து, அங்கே விக்கிரகங்கள் இருப்பதாகவும் குறிப்பிட்டுச் சென்றார்.

திருக்கோணமலைக் கோட்டை வாயிலிற் கோட்டை சம்பந்தமான சரித்திரச் சுருக்கம் ஆங்கிலத்திற் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

1623 போர்த்துக்கேயராற் கட்டுப்பட்டது.
1639 டச்சுக்காரரால் பிடிக்கப்பட்டது.
1640 டச்சுக்காரர் கோட்டையை அழித்தார்கள்.
1658 டச்சுக்காரர் கோட்டையைக் கட்டினர்.
1672 பிரஞ்சுக்காரர் கோட்டையைத் தாக்குதல்.
1782 ஜூன். பிரித்தானியர் கோட்டையைப் பிடித்தனர்.
1782 29 ஆகஸ்ட். பிரஞ்சுக்காரர் கோட்டையைப் பிடித்தனர்.
1783 பிரஞ்சுக்காரர் பிரித்தானியருக்குக் கொடுக்கப் பிரித்தானியர் ஒல்லாந்தருக்குக் கொடுத்தனர்.
1795 பிரித்தானியராற் பிடிக்கப்படல்.
1800 வெலிங்ரன் பிரபு தங்கியமை.
1803 யோர்க் பிரபுவினால் பிறெடறிக் கோட்டை எனப் பெயரிடப்படல்.
1842 சென்ற். ஸ்ரீபன் தேவாலயம் புனருத்தாரணம்.
1905 பாதுகாப்பு கலைக்கப்பட்டமை.
1915 இராணுவம் வாபஸ் பெற்றமை.
1923 நிரந்தரப் பாதுகாப்பு ஒழுங்கு.
1942 ஏப்ரல் 9. யப்பானியர் விமானத் தாக்குதல்.
(1956 இலங்கை அரசாங்கம் பரிபாலனப் பொறுப்பேற்றமை.)

மேலும் கோட்டை வாயிலின் ஒரு புறத்து மதிலிலே அந்நியர் ஆட்சிக்குப் பின் இலங்கை சுதந்தரம் பெறும் எனப் பொருள்படும் செய்யுள் ஒன்றுண்டு. அதாவது :-

“முன்னாட் குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னாட் பறங்கி பிடிப்பானே — பொன்னாரும்
பூனைக்கண் செங்கண் புகைக்கண்ண ராண்டபின்
மானே வடுகாய் வரும்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தீவின் நான்கு திசைகளிலும் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த புராதன தேவாலயங்கள் அமைந்திருப்பதை நாம் அவதானிக்கலாம்.


**கிழக்கே :-** கோணேஸ்வரமும், திருக்கோவிலும்; இவற்றுக்கு இடையே இருக்கும் மற்றும் தலங்களும்;

**மேற்கே :-** திருக்கேதீஸ்வரமும், முனீஸ்வரமும்;

**வடக்கே :-** மாவிட்டபுரம், நகுலேஸ்வரம், நல்லூர்;

**தெற்கே :-** கதிர்காமம், தீவாந்தரமுனை விஷ்ணு தேவாலயம்;

**மத்தியில் :-** சிவனொளிபாதமும் இருக்கின்றன. இவ்வாறே ஏனைய சமயங்களாகிய — பௌத்த, கிறீஸ்தவ சமயங்களின் பழைய கோவில்களும் உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.




# இராவணன் வெட்டு

'இராவணன் வெட்டு' என்று குறிப்பிடப்படுவது கோட்டையிலுள்ள கோவிலுக்குச் செல்லும் மார்க்கத்தில் தென்படும் மலையில் ஏற்பட்டிருக்கும் பெரிய பிளவொன்றாகும். இராவணன் கோபத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு இலக்காகிய மலை அவனால் வெட்டப்பட்டு இரு கூருனமையின் அம் மலைப் பிளவை இராவணன் வெட்டு என்பர். இதை இராவணன் சரிதத்துடன் தொடர்பு படுத்திக் கூறுவர். இதைவிட வேறு விதமாக இராவணன் வெட்டைப் பற்றிக் கூறுவாருமுளர்.

---

## சீனன் குடா [சைனுபே]

இதன் பெயர்க்குக் காரணம் சீன தேசத்துடன் உள்ள தொடர்பைக் காட்டி விளக்குவர் சிலர். இங்கு எண்ணெய் நிலையங்கள் உண்டு.

---

## கன்னியா

திருக்கோணமலையில் இருந்து 5 மைல் தூரத்தில் வெந்நீரூற்றுக் கிணறுகள் உள்ள கன்னியாவை அடையலாம். அவ்வாருன ஏழு கிணறுகள் உண்டு. எல்லாக் கிணறுகளும் ஒரு சிறிய அறை போன்ற இடத்தில் அமைந்துள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றிலும் உள்ள நீரின் கொதிநிலை — அதாவது உஷ்ணம் அல்லது சூடு — வெவ்வேறு அளவினதாக இருக்கின்றது. இளஞ் சூட்டிலிருந்து குளிக்கக்கூடியளவு கடுஞ் சூட்டளவுக்குப் படிமுறையில் உஷ்ணம் கூடிச் செல்வதை அறியலாம். இவற்றின் நீரில் சில தாதுப் பொருள்கள் இருக்கின்றன என்றும், அதனால் இங்கு குளிப்பவர்களுக்கு நன்மை உண்டென்றும் சிலர் கூறுகின்றனர்.

---

## யாழ்ப்பாணக் குடாநாடு


### ஆனையிறவு

ஆனையிறவு இலங்கையின் தென்பகுதியை யாழ்ப்பாணக் குடா நாட்டுடன் இணைக்கும் பகுதியில் அமைந்துள்ளது. இங்கு உப்பளங்கள் உண்டு. இலங்கையில் வட, மேல், தென் பகுதிகளில் முறையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள ஆனையிறவு, பாலாவி, அம்பாந்தோட்டை ஆகிய உப்பளங்களில் விளையும் உப்பில் ஆனையிறவில் விளைவது விசேஷித்ததும், வெண்மையானதும், சுத்தமானதுமாய் இருக்கின்றது. இதை விட இதற்கண்மையில் கறியுப்புக் கழிவுப் பொருள்களில் இருந்து எரி சோடா செய்வதற்குத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் ஸ்தம்பித்துக் கொண்டு இருக்கின்றது.

---




## யாழ்ப்பாணக் கோட்டை

யாழ்ப்பாணக் கோட்டை 1680-ல் கட்டப்பட்டது. இக்கோட்டைக்குள் மாவட்ட நீதிபதியின் வாசஸ்தலம், சிறைச்சாலை, இராணி மாளிகை, ஒரு பழைய டச்சுக் கோவில் ஆதியன உண்டு. அந்த டச்சுக் கோவிலுள் முன்பு இலங்கையை ஆண்டு, இங்கேயே மடிந்த ஒல்லாந்த பிரதானிகள் சிலரின் ஞாபகார்த்தங்கள் பொறிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரம் முற்றவெளியில் இருக்கின்றது. அது எட்டாம் எட்வர்ட் இலங்கைக்கு வந்த ஞாபகார்த்தமாக நிறுவப்பட்டது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லூர்க் கந்தசுவாமி கோவில்

இது ஒரு பழைய கோவில். நித்திய நைமித்திகங்கள் திருவிழாக்கள் முறைப்படி ஒழுங்காக நடைபெறும் கோவில் ஆகும்.

---

## சங்கிலி அரசன் அரண்மனை வாயில்

இது சங்கிலித் தோப்பு என்றழைக்கப்படும் பகுதியில் நல்லூரில் அமைந்துள்ளது. இந்த அரண்மனை பல ஏக்கர் நிலப்பரப்பை உடையதாய் இருந்திருக்க வேண்டும் என்பதற்கு யமுனாஏரி என்ற கட்டுக் குளமே இதற்குச் சான்றாக அமையும். இந்தக் குளம் அநுராதபுரம், பொல்லநறுவை ஆகிய இடங்களிற் காணப்படும் புராதன அரசர் குளிப்பிடங்களை ஒத்திருக்கின்றது. இதைச் சுற்றி குளிப்பறை மண்டபம், உடைமாற்று மண்டபம் போன்ற மண்டபங்கள் இருந்த அடையாளங்கள் தென்படுகின்றன. இப் பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சி, பாதுகாப்பு முதலியன இல்லாத நிலையில் கவனிப்பாரற்றுக் காலக்கிரமத்தில் உருத்தெரியாத நிலையில் அழிந்து கொண்டு போகிறது. தவிரவும் இந்த ஏரி இப் பகுதியில் உள்ள வற்றாத ஊற்றுள் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பார்க்க வேண்டிய இடங்கள் :-

காங்கேசன்துறையிலுள்ள சிமெந்து தொழிற்சாலை, கீரிமலை நன்னீரூற்று, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், பலாலி ஆசிரிய கலாசாலையும் விமான நிலையமும், வசாவிளானிலுள்ள தோலைகட்டி மௌனசாமிகள் மடம், தென்கிழாசியாவில் மிகவும் பழமை வாய்ந்த அமெரிக்க மிஷனரிமாரின் பல்கலைக் கழகக் கல்லூரி வட்டுக்கோட்டையில் உள்ளது — போன்றவை சென்று பார்க்க வேண்டிய இடங்களுள் சிலவாகும்.

---

## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்

இக் கோவிலில் வழிபாடாற்றிக் குதிரை முகம் மாறப் பெற்றமையின் மாவிட்டபுரம் என்றும், அண்மையிலுள்ள நன்னீரூற்றில் ஸ்நானம் செய்து கீரிமுகம் நீங்கப்பெற்றமையின், அந்நன்னீரூற்றுக்குக் கீரிமலை எனப் பெயர் வந்ததென்றும், சரித்திரத் தொடர்புடன்

120866

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சமபத் தொடர்பையும் உட்படுத்திக் கூறுவர். மேலும் கீரிமலை சுகத்துக்குரிய ஒரு இடமாகவும் போற்றப்பட்டு வருகின்றது.

காங்கேசன் துறையில் சிமெந்துக்கு வேண்டிய மூலப் பொருள்கள் இருப்பதனால் அங்கு அத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது.

---

## நயினாதீவு



நாகபூஷணி அம்மன் கோவில்

நயினாதீவில் நாகபூஷணி அம்மன் கோவிலும், நாகதீப விஹாரையும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய நூலக
மாநகர நூலக
யாழ்ப்பாணம்

நாகதீப விஹாரை

நாகபூஷணி அம்மன் கோவில் இந்துக்களுக்குப் புனிதமான ஒரு புண்ணியத் தலம். இக்கோவிலுக்கு அணித்தாய் நாகதீப விஹாரை இருக்கிறது. இது புத்த சமயிகள் தமது புண்ணியத்தலமாக இப்பொழுது கொண்டாடி வருகிருர்கள். இதுபற்றிய பல வரலாற்றுக் கதைகள் உண்டு.

புத்த பகவான் ஒளி பெற்ற 5-ம் ஆண்டில் நாகதீபத்துக்கு வந்து சூளோதரன், மகோதரன் என்னும் இரு அரசர்களுக்கு இடையில் ஏற்பட்ட இரத்தக்களரி யுத்தத்தைத் தம் போதனையாற் போக்கி, பின் இருவரும் சமாதானமாய் விஹாரை ஒன்று கட்டுவித்து ஒன்ருய் வழிபாடாற்றி வாழ்ந்தார்கள், என்று சரித்திர வரலாறு கூறுகின்றது. மேலும் நாகர்கள் நாகரீகமற்றவர்கள் என்பது தவறு என்றும், அவர்கள் உயர்ந்த நாகரீகம் உடையவர்களாய் இருந்தார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

தவிரவும் சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட மணிபல்லவத் தீவு என்பதும், பிக்ஷா பாத்திர சம்பந்தமான விஷயங்கள் யாவும் நிகழ்ந்த இடமும் நயினுதீவு என்றே நம்பப்படுகிறது.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org